# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2023.03.22 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# பயங்கரவாதத்திற்கெதிரானது

***பயங்கரவாதச் செயல்களிலிருந்தும் இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாகவமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசிய பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கை ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும்; பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறேதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங்காண்பதற்காகவும், பற்றுவதற்காகவும், கைதுசெய்வதற்காகவும், தடுத்துவைப்பதற்காகவும், புலனாய்வுசெய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானவொரு சட்டமூலம்***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 200.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பயங்கரவாதத்திற்கெதிரானது

ச.வ.- ஓ. 15/2023

**பயங்கரவாதச் செயல்களிலிருந்தும், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்பட்டவையும் பயங்கரவாதத்துடன் இணைந்தவையுமான வேறு தவறுகளிலிருந்தும் மற்றும் பயங்கரவாதம் என்ற தவறாக வமைகின்ற குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயல்களிலிருந்தும் இலங்கையின் தேசிய பந்தோபஸ்தையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்காக ஆயத்தஞ்செய்வதற்கு இலங்கை ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும்; பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறேதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளைக் கண்டுபிடிப்பதற்காகவும், அடையாளங்காண்பதற்காகவும், பற்றுவதற்காகவும், கைது செய்வதற்காகவும், தடுத்துவைப்பதற்காகவும், புலனாய்வு செய்வதற்காகவும், அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காகவும் மற்றும் அவரைத் தண்டிப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானவொரு சட்டம்.**

*முன்னுரை*

பயங்கரவாதமானது இலங்கையின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாட்டையும் பாரதூரமானவகையில் அச்சுறுத்தியும், இலங்கைப் பிரசைகளுக்கு இறப்பையும் பாரதூரமான ஊறையும் விளைவித்தும், இலங்கையின் பொது மற்றும் தனியார் ஆதனங்களுக்குப் பெருமளவிலான சேதத்தை ஏற்படுத்தியும், தேசிய அபிவிருத்தியை சுணக்கியும் உள்ளதாதலாலும்;

அத்துடன், பயங்கரவாதமானது, அதன் பல்வேறு வடிவங்களிலும் வெளிப்படுத்தல்களிலும் நாடுகளினது சமுதாயத்தின் பந்தோபஸ்துக்கும் சமாதானத்துக்கும் ஒரு பாரிய அச்சுறுத்தலாக உள்ளதாதலாலும்; அத்துடன் இலங்கையையும், அதன் மக்களையும், ஆதனங்களையும் பயங்கரவாதச் செயல்களிலிருந்தும் தொடர்புபட்ட செயல்களிலிருந்தும் பாதுகாத்தல் அரசாங்கத்தின் முதன்மைக் கடமையொன்றாக உள்ளதாதலாலும்;

அத்துடன், எவையேனும் பயங்கரவாதச் செயல்களையும் தொடர்புபட்ட செயல்களையும் எதிர்த்தல் தொடர்பான எந்த சர்வதேச சாதனங்களுக்கு இலங்கை கையொப்பமிடுநர் ஒன்றாக வந்துள்ளதோ அந்த சர்வதேச சாதனங்களுக்கு உள்நாட்டுச் சட்டப் பயனைக் கொடுப்பதற்கான சட்டங்களையாக்குவதற்கு இலங்கை கடப்பாட்டின்கீழ் உள்ளதாதலாலும்;

அத்துடன், இலங்கை அரசாங்கம், ஏனைய இறைமை கொண்டுள்ள நாடுகளையும் அவற்றின் மக்களையும் பயங்கரவாதச் செயல்களின் கொடுமையிலிருந்து பாதுகாப்பதற்கு உறுதிபூண்டுள்ளதாதலாலும்;

அத்துடன், சர்வதேசத் தரநெறிகளினதும் நியமங்களினதும் உள்நாட்டுத் தேவைகளினதும் அடிப்படையின்மீது, பயங்கரவாதத்துக்கெதிராகக் குற்றவியல் நீதியை நிருவகிப்பதற்கான பயனுள்ள முறைமையொன்றை வலுவுறுத்துவதனூடாக உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பயங்கரவாதத்தை அடியோடு அழித்துத் தடுப்பதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளதாதலாலும் விரும்புகின்றதாதலாலும்;

அத்துடன், இலங்கை மக்களின் உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் உரிய ஏற்றங்கீகாரத்தையும் மதிப்பையும் உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவும் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதற்காகவும் இலங்கை மக்களின் இறைமையை அதிகரிப்பதற்காகவும் தேசிய பந்தோபஸ்தைக் காத்தல் தலையாய முக்கியத்துவம் வாய்ந்ததாகவுள்ளதென இலங்கை அரசாங்கம் கருதுகின்றதாதலாலும்;

அத்துடன், பயங்கரவாதத்துக்கெதிரான குற்றவியல் நீதியை நிருவகிப்பதற்காக முறைமையின் நீதியானதும் நியாயமானதுமான ஏற்புடைமையை உறுதிப்படுத்துவதற்கான தேவையை இலங்கை அரசாங்கம் மனதிற்கொண்டுள்ளதாதலாலும்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, பயங்கரவாதத்திற்கெதிரான சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

## சட்டத்தின் ஏற்புடைமை

சட்டத்தின் ஏற்புடைமை

**2.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பின்வருவோருட்பட, இலங்கையின் ஆள்புல எல்லைகளினுள்ளாயினுஞ்சரி அல்லது அவற்றுக்கு வெளியேயாயினுஞ்சரி, இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே, இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனும் இலங்கைப் பிரசை;

(ஆ) (i) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையில்;

(ii) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளில் அல்லது அவற்றின்மீது;

(iii) இலங்கையின் வான்வெளியில்;

(iv) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அதனால் பயன்படுத்தப்பட்ட ஒரு வானூர்தியின்மீது அல்லது கலத்தின்மீது அல்லது அது தொடர்பில்;

(v) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளும் வான்வெளியும் உட்பட இலங்கை ஆள்புலத்தினுள்ளான ஒரு வானூர்தியின்மீது அல்லது கலத்தின்மீது அல்லது அது தொடர்பில்;

(vi) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கையின் இராஜதந்திர அல்லது தூதரகத் தூதுக்குழுவொன்றின் அல்லது இலங்கையின் தூதரக அலுவலரொருவரின் அலுவலக வளவுகளினுள், அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில் அல்லது அத்தகைய இராஜதந்திர அல்லது தூதரகத் தூதுக்குழுத் தலைவரின் வதிவிடத்தில் அல்லது எவரேனும் இராஜதந்திர அல்லது தூதரக அலுவலரின் அல்லது அத்தகைய தூதுக்குழுவின் வேறெவரேனும் ஊழியரின் வதிவிடத்தில்;

(vii) முழுமையாக அல்லது பகுதியளவில் இலங்கை அரசாங்கத்தின் நியதிச்சட்டச் சபையொன்றின் இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள அலுவலக வளவுகளினுள் அல்லது அத்தகைய வளவுகள் தொடர்பில், அல்லது அத்தகைய நியதிச்சட்டச் சபையின் ஊழியரொருவரின் வதிவிடத்தினுள்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்;

(இ) (i) ஒரு சர்வதேச அமைதி பேணும் அல்லது கண்காணிக்கும் தூதுக்குழுவில் பிரித்தமர்த்தப்பட்ட இலங்கைப் பிரசையொருவர் உட்பட பிரசையொருவர் தொடர்பில்;

(ii) *அரசுக்குச் சொந்தமான ஓர் ஆதனம் தொடர்பில்,*

*இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்;*

*(ஈ) இலங்கைப் பிரசையொருவராக இருந்துள்ளவரும், இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற வருமான எவரேனுமாள்:*

*ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் அவரது வழமையான வதிவிடத்தை இலங்கையில் தொடர்ந்து வைத்திருந்தால் மட்டுமே அத்தகைய ஆள் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள வலுவுறுத்தப்படுதல் வேண்டும்:*

*ஆயின், மேலும், அவரது வழமையான வதிவிடத்தை அவர் இலங்கையில் வைத்திராவிடின், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவர் எந்த வெளிநாட்டு அரசின் பிரசையொருவராகவுள்ளாரோ அந்த வெளிநாட்டு அரசின் ஒருப்பாட்டுடன் வலுவுறுத்தப்படலாம்; அத்துடன்*

*(உ) இலங்கையில் அவரது வழமையான வதிவிடத்தை வைத்திருந்து, இலங்கைக் குடியரசின் ஆள்புலத்தினுள் அல்லது அதற்கு வெளியே இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள்.*

*(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக —*

*"வழமையான வதிவிடம்" என்பது, ஆளொருவரின் சாதாரண வதிவிடம் என்று பொருளாகும்;*

"அரசுக்குச் சொந்தமான ஆதனம்" என்பது, பின்வருவனவற்றுக்குச் சொந்தமான ஆதனத்தையும் உள்ளடக்கும்:-

(அ) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட நிதியங்களுக்கும் அல்லது சபைகளுக்கும்;

(ஆ) ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது அதன் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்ட தொழில்களுக்கும் வேறு பொறுப்புமுயற்சிகளுக்கும்; அத்துடன்

(இ) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்பட்ட எக்கம்பெனியில் அரசாங்கம் அல்லது ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஐம்பது சதவீதமான அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கின்றதோ அக்கம்பெனிக்கும்.

## பாகம் II

## தவறுகளும் தண்டங்களும்

பயங்கரவாதம் என்ற தவறு

**3.** (1) பின்வருவனவற்றைச் செய்யும் உட்கருத்துடன் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயலை அல்லது சட்டவிரோதமான செய்யாமையைப் புரிகின்ற எவரேனுமாள் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிகின்றார்:-

(அ) பொதுமக்களை அல்லது பொதுமக்களின் ஒரு பிரிவினரை அச்சுறுத்துதல்;

(ஆ) ஏதேனும் செயலைச் செய்வதற்கு அல்லது செய்யாதிருப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை அல்லது வேறேதேனும்

அரசாங்கத்தை அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப் பைப் பிழையானமுறையில் அல்லது சட்டமுறையற்ற வகையில் வலுக்கட்டாயப்படுத்துதல்;

(இ) அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தைப் பணியாற்றுவதிலிருந்து சட்டமுறையற்றவகையில் தடுத்தல்;

(ஈ) இலங்கையின் அல்லது வேறேதேனும் இறைமைகொண்ட நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டுக்கு முரணாகச் செயலாற்றுதல் அல்லது இறைமையை மீறுதல்; அல்லது

(உ) போரை வெளிப்பரப்புதல் அல்லது ஓரங்காட்டுகையை, பகைமையை அல்லது வன்செயலைக் கிளறிவிடுவதாக அமைகின்ற தேசிய, இனரீதியிலான அல்லது மதரீதியிலான வெறுப்பை எடுத்துரைத்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட செயலொன்று அல்லது சட்டவிரோதமான செய்யாமை பின்வருவனவாகவிருத்தல் வேண்டும்:-

(அ) கொலை;

(ஆ) கடுங்காயம்;

(இ) பணயக்கைதியாகப் பிடித்துவைத்தல்;

(ஈ) ஆட்கடத்தல் அல்லது ஆட்கவர்தல்;

(உ) ஏதேனும் பொதுப் பயன்பாட்டிடத்துக்கு, ஓர் அரச அல்லது அரசாங்க வசதிக்கு, ஏதேனும் பகிரங்க அல்லது தனியார் போக்குவரத்து முறைமைக்கு அல்லது ஏதேனும் உட்கட்டமைப்பு வசதிக்கு அல்லது சூழலுக்குப் பாரதூரமான சேதத்தை விளைவித்தல்;

(ஊ) அத்தியாவசிய சேவைகள் அல்லது வழங்குகைகளுக்கு அல்லது ஏதேனும் அத்தியாவசிய சேவையுடன் அல்லது வழங்குகையுடன் இணைந்த ஏதேனும் முக்கியமான உட்கட்டமைப்புடன் அல்லது ஏற்பாட்டியல் வசதிக்கு பாரிய முட்டுக்கட்டையை அல்லது சேதத்தை அல்லது அவற்றுடனான தலையீட்டை விளைவித்தல்;

(எ) அரச அல்லது தனியார் ஆதனம் தொடர்பில் கொள்ளை, அச்சுறுத்திப்பெறுதல் அல்லது திருட்டு என்ற தவறைப் புரிதல்;

(ஏ) பொதுமக்களின் அல்லது அவர்களுள் ஒரு பிரிவினரின் உடனலத்துக்கும் காப்புக்கும் பாரிய ஆபத்தை விளைவித்தல்;

(ஐ) இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட செயற்களங்களின் அல்லது இலங்கைக்குக் குறித்தளிக்கப்பட்ட அத்தகைய செயற்களங்களுடன் பதிவுசெய்யப்பட்ட வலைத்தளங்களின் ஏதேனும் இலத்திரனியல் அல்லது தன்னியக்கமாக்கப்பட்ட அல்லது கணனிமயமாக்கப்பட்ட முறைமைக்கு அல்லது வலையமைப்புக்கு அல்லது வான்வழிச் சூழலுக்குப் பாரிய முட்டுக்கட்டையை அல்லது சேதத்தை அல்லது அவற்றுடனான தலையீட்டை விளைவித்தல்;

(ஒ) மதஞ்சார் அல்லது கலாசாரஞ்சார் ஆதனங்களுக்கு அழிவை அல்லது பாரிய சேதத்தை விளைவித்தல்;

(ஓ) சமிக்ஞைக் கடத்துகை மற்றும் வேறேதேனும் அலைவரிசை அடிப்படையிலான கடத்துகை முறைமை உட்பட ஏதேனும் இலத்திரனியல் ஒப்புமை, எண்ணிம அல்லது வேறு கம்பியுடன் இணைக்கப்பட்ட அல்லது கம்பியிலாக் கடத்துகை முறைமைக்குப் பாரிய முட்டுக்கட்டையை அல்லது சேதத்தை, அல்லது அவற்றுடனான தலையீட்டை விளைவித்தல்;

(ஔ) (அ) முதல் (ஓ) வரையிலான பந்திகளில் தரப்பட்டுள்ள ஏதேனும் செயலை அல்லது சட்டவிரோதமான செய்யாமையைப் புரிவதற்காக ஒரு சட்டமுறையற்ற கூட்டத்தின் உறுப்பினரொருவராக இருத்தல்;

(க) சட்டமுறையான அதிகாரமின்றி, சுடுபடைக்கலன்களை, தீங்குவிளைவிக்கும் ஆயுதங்களை, போர்க்கலத் தொகுதியை, வெடிப்பொருட்களை அல்லது வெடிப் பொருட்களை உற்பத்திசெய்வதில் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்படும் ஏதேனும் பொருளை அல்லது வஸ்துவை அல்லது பற்றி எரியத்தக்க அல்லது அரிக்கின்ற பதார்த்தங்களை அல்லது ஏதேனும் உயிரியியற்சார், இரசாயன, மின்சார, இலத்திரனியல் அல்லது அணு ஆயுதத்தை, வேறு அணு வெடிக்கும் உபகரணத்தை, அணுப்பொருளை அல்லது கதிரியக்கப் பதார்த்தத்தை அல்லது கதிர்வீச்சை வெளியேற்றும் உபகரணத்தை இறக்குமதிசெய்தல், ஏற்றுமதிசெய்தல், உற்பத்திசெய்தல், சேகரித்தல், பெற்றுக்கொள்ளுதல், வழங்குதல், அதில் வியாபாரஞ் செய்தல், அதனை உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல்.

**4**. (1) (அ) இறப்பை ஏற்படுத்தும் உட்கருத்துடன் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட தவறைப் புரிகின்றவரும், அத்தகைய தவறைப் புரியும்போது வேறெவரேனு மாளின் இறப்பை ஏற்படுத்துகின்றவருமான எவரேனுமாள், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் மரணத்தினால் தண்டிக்கப் படுதல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தவறுகள் தவிர 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற எவரேனுமாள், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் இருபதாண்டு

களை விஞ்சாதவொரு காலத்துக்குக் கடூழிய மறியற் றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பிரிவு 3 அல்லது 5 இன்கீழான ஏதேனும் தவறுக்கு எவரேனுமாள் ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து,-

(அ) நீதிமன்றமானது, அக்குற்றத்தீர்ப்பின் பயனைக்கொண்டு, அத்தகைய தவறுக்காக விதிக்கவேண்டிய ஏதேனும் தண்டத்துடன்சேர்த்து மேலதிகமாக அவ்வாளின் அசைவுள்ள, அசைவற்ற எல்லா ஆதனங்களையும் குடியரசுக்கு இழப்பிக்கலாம்; அத்துடன்

(ஆ) அத்தகைய குற்றத்திர்ப்பின் பின்னர் அத்தகைய ஆளினால் பயனுறுத்தப்பட்ட ஆதனத்தின் ஏதேனும் பராதீனம் அல்லது வேறு கையுதிர்ப்பு வெற்றானதாகவும் வறிதானதாகவும் இருந்துள்ளதாகவும் இருப்பதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**பயங்கரவாதம் என்ற தவறுக்கான தண்டம்**

**5**. (1) மூன்றாம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற, உடந்தையளிக்கின்ற, அல்லது சதிசெய்கின்ற, அல்லது 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தநிலையான ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதல் வேண்டும்.

(2) அத்தகைய ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிந்ததனை அடுத்துப்பின்னர் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிந்திருப்பின், அத்தகைய ஆள் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிந்துள்ளாரென்றாற்போன்று பயங்கரவாதம் என்ற தவறுக்காக விதிக்கப்பட்ட அதே தண்டத்தினால் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**6.** (1) மூன்றாம் பிரிவின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிதல் அதன் குறிக்கோளாகவுள்ள ஒரு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத ஒழுங்கமைப்பை அல்லது இயக்கங்களை –

தடைசெய்யப்பட்ட பயங்கரவாத ஒழுங்கமைப்புகளுடனும் இயக்கங்களுடனும் இணைந்த தவறுகள்

(அ) அவற்றின் தலைவரொருவராக, உறுப்பினரொருவராக அல்லது ஊழியர்கோப்பிலுள்ள ஒருவராகச் சேர்கின்ற, அவற்றில் பணியாற்றுகின்ற அல்லது சேவையாற்றுகின்ற;

(ஆ) அவற்றின் செயற்பாடுகளுக்கு ஏதேனும் மட்டத்தில் ஆதரவளிக்கின்ற அல்லது அவற்றைப் பணிக்கின்ற;

(இ) அவற்றின் உறுப்பினரொருவராக அல்லது ஊழியர் கோப்பிலுள்ள ஒருவராக இருப்பதற்கு எவரேனுமாளை ஆட்சேர்க்கின்ற, மயக்கிஈர்க்கின்ற அல்லது ஊக்குவிக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) மூன்றாம் பிரிவின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிதல் அதன் குறிக்கோளொன்றாகவுள்ள தடைசெய்யப்பட்ட பயங்கரவாத ஒழுங்கமைப்பொன்றிற்காக அல்லது இயக்கமொன்றிற்காக அல்லது அதன்சார்பில், கொள்ளையை, அச்சுறுத்திப்பெறுதலை அல்லது ஆதனத்தின் திருட்டைப் புரிகின்ற அல்லது பணத்தை அல்லது ஏதேனும் ஆதனத்தை அல்லது வேறு பொருளை வேறுவகையாகப் பெற்றுக்கொள்கின்ற எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

**7.** (அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குப் பலியாக்கப்பட்டவரொருவர் தொடர்பாக அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்பட்டமைக்கான சாட்சியொருவர் தொடர்பாக, 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்ற; அல்லது

குறித்துரைக்கப்பட்ட செயல்கள்

(ஆ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட பயங்கரவாதம் என்ற தவறைப் புரிதல், ஆயுத்தஞ் செய்தல், ஏவிவிடுதல் நோக்கத்துக் காகப் பொருளொன்றை உடைமையில் வைத்தி ருக்கின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின் றார்.

**8**. ஆளொருவர் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டிருக்கின்றார் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை உடையவராகவிருந்து அத்தகைய ஆளுக்குப் புகலிடமளிக்கும், அவரை மறைத்துவைக்கும் அல்லது அவரை அடையாளங் காண்பதை, கைதுசெய்வதை, கட்டுக்காப்பில் எடுப்பதை அல்லது தடுத்து வைப்பதை வேறெந்தமுறையிலும் பிழையாக அல்லது சட்டவிரோதமாகத் தடுக்கும், தடங்கல்செய்யும் அல்லது அதனோடு தலையிடும் எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார். பயங்கரவாதத் துடன் இணைந்த தீங்கு பெருக்கும் குற்றவியற் செயல்கள்

**9**. தகவலானது இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குச் சதிசெய்வதற்கு, உடந்தையளிப்பதற்கு, இச்சட்டத்தின்கீழான ஒரு தவறை எத்தனிப்பதற்கு அல்லது புரிவதற்கு ஆளொருவரினால் பயன்படுத்தப்படும் என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை உடையவராகவிருந்து – பயங்கரவாதத் துடன் இணைந்த செயல்கள்

(அ) அத்தகைய வேறு ஆளுக்கு அத்தகைய தகவலை வழங்கும் உட்கருத்துடன் ஏதேனும் அந்தரங்கத் தகவலைச் சேகரிக்கின்ற; அல்லது

(ஆ) அத்தகைய வேறு ஆளுக்கு ஏதேனும் அந்தரங்கத் தகவலை வழங்குகின்ற,

எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்:

ஆயின், எவ்வாறாயினும், பொதுமக்களின் நன்மைக்காக, அல்லது தேசிய நலன் கருதி அச்சிடப்பட்ட மற்றும் இலத்திரனியல் ஊடகத்தில், அல்லது ஏதேனும் கல்விசார் வெளியீட்டில் நல்லெண்ணத்துடனும் உரிய விழிப்புக்கவனத்துடனும் வெளியிடப்பட்ட எதுவும் இப்பிரிவின்கீழான தவறொன்றாகக் கருதப்படுதலாகாது.

பயங்கரவாதத்தை ஊக்குவித்தல்

**10**. *(1)* (அ) பயங்கரவாதம் என்ற தவறைப் பொதுமக்கள் புரிவதற்கு, ஆயத்தஞ்செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்கு அவர்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிப்பதற்கு அல்லது தூண்டுவதற்குப் பொதுமக்களுள் சிலரினால் அல்லது எல்லோரினாலும் விளங்கிக்கொள்ளக் கூடிய சாத்தியங்கொண்ட கூற்றொன்றை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச் செய்விக்கின்ற, அல்லது ஏதேனும் சொல்லை அல்லது சொற்களைப் பேசுகின்ற, எவையேனும் சைகைகளை அல்லது புலப்படத்தக்க குறிப்பீடுகளைச் செய்கின்ற எவரேனுமாள்; அத்துடன்

(ஆ) (i) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்குப் பொதுமக்களை நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு உட்கருதுகின்ற எவரேனுமாள்; அல்லது

(ii) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கான, ஆயத்தஞ்செய்வதற்கான அல்லது ஏவிவிடுவதற்கான கூற்றினால் பொதுமக்கள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கப்படுகின்றனரா அல்லது தூண்டப்படுகின்றனரா என்பது பற்றிக் கவனயீனமாகவுள்ள அவ்வாள்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்.

(2) பின்வருவனவற்றைப் பயன்படுத்தி (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கூற்றொன்றை வெளியிடுகின்ற அல்லது வெளியிடச்செய்கின்ற எவரேனுமாளுக்கு அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) அச்சு ஊடகம்;

(ஆ) இணையத்தளம்;

(இ) இலத்திரனியல் ஊடகம்; அல்லது

(ஈ) வேறு வடிவத்திலான பொது அறிவித்தல்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு "கூற்று" என்பது, பின்வரும் ஒவ்வொரு கூற்றையும் உள்ளடக்கும்:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறின் புரிகையை அல்லது பயங்கரவாதம் என்ற தவறை ஆயத்தஞ்செய்வதைப் போற்றுவது; அத்துடன்

(ஆ) போற்றப்படுவது ஏலவேயுள்ள சூழ்நிலைகளில் பொதுமக்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடத்தையாகப் போற்றப்படுகின்றதென அதிலிருந்து அவர்கள் ஊகிப்ப தற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக்கூடியது.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு கூற்று எவ்வாறு விளங்கிக்கொள்ளப்படக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளது மற்றும் பொதுமக்களுள் எவர் அதிலிருந்து ஊகிப்பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்படலாம் என்பதுபற்றிய கேள்வி பின்வரும் இரண்டையும் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப் படுதல் வேண்டும்:-

(அ) முழுமையாகக் கூற்றின் உள்ளீடுகள்; அத்துடன்

(ஆ) அதன் வெளியீட்டின் சூழ்நிலைகளும் முறையும்.

(5) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு கூற்று அவரது கருத்துகளைத் தெரிவிக்கவில்லை அல்லது அக்கூற்றின் வெளியீட்டினது எல்லாச் சூழ்நிலைகளிலும் வெளியீட்டுக்கான அவரது சம்மதத்தை அல்லது அங்கீகாரத்தைக் கொண்டிருக்க வில்லை என எவரேனுமாள் மேல்நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழான தவறொன் றுக்குக் குற்றவாளியல்லரென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

பயங்கரவாத வெளியீடுகளைப் பரப்புதல்

**11.** (1) ஆளொருவர் பின்வருமாறு செய்யின், அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) ஒரு பயங்கரவாத வெளியீட்டை விநியோகித்தால் அல்லது சுற்றிவழங்கினால்;

(ஆ) ஒரு பயங்கரவாத வெளியீட்டைக் கொடுத்தால், விற்பனைசெய்தால் அல்லது கடனாகக்கொடுத்தால்;

(இ) ஒரு பயங்கரவாத வெளியீட்டை விற்பனைக்காக முனைந்தால்;

(ஈ) ஒரு பயங்கரவாத வெளியீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு, வாசிப்பதற்கு, கேட்பதற்கு அல்லது பார்ப்பதற்கு அல்லது ஒரு கொடை அல்லது விற்பனைமூலம் அதனைப் பெறு வதற்கு அவர்களை இயலச்செய்யும் சேவையொன்றை ஏனையோருக்கு வழங்கினால்;

(உ) ஒரு பயங்கரவாத வெளியீட்டின் உள்ளீடுகளை இலத்திரனியல்முறையில் கடத்தினால்; அல்லது

(ஊ) (i) ஆம், (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்டவொரு நோக்கத்துக்காக ஒரு பயங்கரவாத வெளியீட்டைப் பயன்படுத்தும் உட்கருத்துடன் அதனை அவரது உடைமையில் வைத்திருந்தால்; அத்துடன்

அத்தகைய ஆள் -

(அ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு, ஆயத்தஞ் செய்வதற்கு அல்லது ஏவிவிடுவதற்குப் பொதுமக்களை ஊக்குவிப்பதற்கு அல்லது தூண்டுவதற்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் உட்கருதினால் அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கான, ஆயத்தஞ்செய்வதற்கான அல்லது தூண்டுவதற்கான கூற்றின் மூலம் பொதுமக்கள் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஊக்குவிக்கப்படுகின்றனரா அல்லது தூண்டப்படுகின்றனரா என்பதுபற்றிக் கவனயீனமாக இருந்தால்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பின்வருவனவற்றைப் பயன்படுத்தி அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் செயலைப் புரிகின்ற ஓராளுக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்:-

(அ) அச்சு ஊடகம்;

(ஆ) இணையத்தளம்;

(இ) இலத்திரனியல் ஊடகம்; அல்லது

(ஈ) வேறு வடிவத்திலான பொது அறிவித்தல்.

(3) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "ஒரு பயங்கரவாத வெளியீடு" என்பது, பின்வருமாறு அது கிடைக்கக்கூடியதாகவுள்ள

அல்லது கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடிய சில அல்லது எல்லா ஆட்களினாலும் விளங்கிக்கொள்ளப்படவேண்டிய ஒரு வெளியீடாகவுள்ளது:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு, அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்கு, அவர்களுக்கான நேரடியான அல்லது நேரடியாகவல்லாத ஊக்குவிப்பாக அல்லது வேறு தூண்டுதலாகவுள்ளது; அல்லது

(ஆ) அதன்கண் அடங்கியுள்ள விடயம், பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதில் அல்லது ஆயத்தஞ்செய்வதில் பயனுள்ளதாகவுள்ளது.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு "விடயம்" என்பது, பின்வரும் ஒவ்வொரு விடயத்தையும் உள்ளடக்கும்:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறின் புரிகையை அல்லது பயங்கரவாதம் என்ற தவறை ஆயத்தஞ்செய்வதைப் போற்றுவது; அத்துடன்

(ஆ) போற்றப்படுவது ஏலவேயுள்ள சூழ்நிலைகளில் பொதுமக்கள் கடைப்பிடிக்கவேண்டிய நடத்தையாகப் போற்றப்படுகின்றதென அதிலிருந்து அவர்கள் ஊகிப்ப தற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படக்கூடியது.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக ஒரு வெளியீடு பயங்கரவாத வெளியீடொன்றாகவுள்ளதா என்பதுபற்றிய கேள்வி பின்வருவன வற்றைக் கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) முழுமையாக வெளியீட்டின் உள்ளீடு; அத்துடன்

(ஆ) அவ்வெளியீட்டின் விளைவான குறிப்பிட்டவொரு நடத்தை இடம்பெற்றுள்ள சூழ்நிலை.

(6) ஆளெவரும், ஒரு பயங்கரவாத வெளியீடாகவிருந்ததெனச் சார்த்துப்பட்டவொரு வெளியீட்டில் அடங்கியுள்ள விடயம் அவரது கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை அல்லது அவ்வெளியீட்டின் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரது சம்மதத்தையோ அல்லது அங்கீகாரத்தையோ கொண்டிருக்கவில்லை என அவ்வாள் மேல்நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தால், இப்பிரிவின்கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதலாகாது.

(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"கடனாகக்கொடுத்தல்" என்பது, வாடகைக்கு விடப்பட்டமையையும் உள்ளடக்கும்;

"வெளியீடு" என்பது, பின்வருவனவற்றுள் எதனையும் கொண்டுள்ள ஏதேனும் விவரணத்தினதான ஒரு பொருள் அல்லது பதிவேடு என்று பொருளாகும்:-

(அ) வாசிக்கப்படவேண்டிய விடயம்;

(ஆ) கேட்கப்படவேண்டிய விடயம்; அல்லது

(இ) பார்க்கப்படவேண்டிய அல்லது பார்வையிடப் படவேண்டிய விடயம்.

பயங்கரவாதத் துக்கான பயிற்சி

**12.** (1) ஆளொருவர் பின்வருமாறு செய்யின், அத்தகைய ஆள் இப்பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்கு அல்லது 3 ஆம் பிரிவின்கீழ் பயங்கரவாதம் புரியப்படுவதனை அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்கு உதவுவதற்கு அறிவுறுத்தல் அல்லது பயிற்சி வழங்கினால்; அத்துடன்

(ஆ) பயிற்சியைப் பெறுகின்ற ஆள், அவர் எந்தத் தேர்ச்சிகளில் அறிவுறுத்தப்படுகின்றாரோ அல்லது பயிற்சியளிக்கப் படுகின்றாரோ அந்தத் தேர்ச்சிகளை —

(i) இச்சட்டத்தின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்காக அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்காக அல்லது அது சம்பந்தமாக; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழ் பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்கு உதவுவதற்காக,

பயன்படுத்துவதற்கு உட்கருதுகின்றார் அல்லது பயன்படுத்தக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளார் என அவர் அத்தகைய அறிவுறுத்தலை அல்லது பயிற்சியை வழங்குகின்ற நேரத்தில் அறிந்திருந்தால்.

(2) ஆளொருவர் பின்வருமாறு செய்யின், அவ்வாள் 6 ஆம் பிரிவின்கீழான தவறொன்றைப் புரிகின்றார்:-

(அ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்கு அல்லது அதற்காக ஆயத்தஞ்செய்வதற்கு, அல்லது பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதனை அல்லது அதற்காக ஆயத்தஞ் செய்வதனை உதவுவதற்கு அறிவுறுத்தல்களை அல்லது பயிற்சியைப் பெற்றால்; அத்துடன்

(ஆ) அவர் எந்தத் தேர்ச்சிகளில் அறிவுறுத்தப்படுகின்றாரோ அல்லது பயிற்சியளிக்கப்படுகின்றாரோ அந்தத் தேர்ச்சி களை-

(i) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதற்காக அல்லது ஆயத்தஞ்செய்வதற்காக அல்லது அது சம்பந்தமாக; அல்லது

(ii) பயங்கரவாதம் என்ற தவறு ஏனையோரினால் புரியப்படுவதனை அல்லது ஆயத்தஞ்செய்யப் படுவதனை உதவுவதற்காக,

அறிவுறுத்தலை அல்லது பயிற்சியைப்பெறும் நேரத்தில் உட்கருதினால்.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "அறிவுறுத்தல் அல்லது பயிற்சி" என்பது, பின்வருவனவற்றிலான அறிவுறுத்தல் அல்லது பயிற்சி என்று பொருளாகும்:-

(அ) சுடுபடைக்கலன்களை, வெடிப்பொருட்களை அல்லது இரசாயன, உயிரியியற்சார் அல்லது அணு ஆயுதங்களைத் தயாரிப்பதில் அல்லது பயன்படுத்துவதில்; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறைப் புரிவதன் நோக்கத்துக் காகப் பயன்படுத்துவதில் அல்லது அதுசம்பந்தமாக எதனையும் செய்வதற்காக ஏதேனும் முறையை அல்லது தொழினுட்பத்தை வடிவமைப்பதற்காக அல்லது இசை வாக்குவதற்காக.

*பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பவற்றின் கீழான தவறுகளைப் புரிவதற்கான தண்டம்*

**13.** (1) பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பவற்றின்கீழான தவறுகளைப் புரிகின்ற எவரேனுமாள் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பதினைந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11 அல்லது 12 என்பவற்றின்கீழான தவறொன்றுக்கு எவரேனுமாளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படு மிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய தவறைப் புரிவதுடன் சம்பந்தப்பட்டுள்ளதென நீதிமன்றம் கருதுகின்றதும் அத்தகைய ஆளின் உடைமையிலுள்ளதுமான ஏதேனும் அசை வுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் குடியரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டுமென மேல்நீதிமன்றம் கட்டளையிடலாம்.

*பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பவற்றின் கீழான தவறுகளைப் புரிவதற்கு எத்தனித்தல் முதலியவற்றுக் கான தண்டம்*

**14.** (1) பிரிவுகள் 6, 7, 8, 9, 10, 11 மற்றும் 12 என்பவற்றின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு எத்தனிக்கின்ற உடந்தையளிக்கின்ற அல்லது சதிசெய்கின்ற, அல்லது அத்தயை பிரிவுகளின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்ற ஏதேனும் செயலைச் செய்கின்ற எவரேனுமாள், மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப் பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளை விஞ்சாத காலத்துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கும் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பிரிவுகள் 6,7,8,9,10,11 அல்லது 12 என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறு, அத்தகைய தவறைப் புரிவதற்கான ஓர் எத்தனம், உடந்தை அல்லது சதியின் விளைவாக அல்லது அத்தகைய தவறைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்ற ஏதேனும் செயலைச் செய்தலின் விளைவாகப் புரியப்படின், தவறாளர் அத்தகைய தவறைப் புரிந்துள்ளார் என்றாற்போன்று அதே தண்டத்துக்கு அவர் ஆளாதல் வேண்டும்.

தகவல்களை வழங்கத் தவறுதல் தவறொன்றாதல்

**15.** (அ) வேறெவரேனுமாள் -

(i) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார்; அல்லது

(ii) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்றார், எத்தனிக்கின்றார், உடந்தையளிக்கின்றார் அல்லது சதிசெய்கின்றார்,

என அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணங்களை உடையவராகவிருந்து, மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடத் தவறுகின்ற எவரேனுமாள்; அல்லது

(ஆ) பயங்கரவாதம் என்ற தவறொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த தவறொன்றைப் புரிந்துள்ளாரென அவர் அறிந்துள்ள எவரேனுமாள் எங்குள்ளார் என்பது தொடர்பான எவையேனும் தகவல்களைத் தனதுடைமையில் வைத்திருந்து, அத்தகைய தகவல்களை ஒரு பொலிசு அலுவலருக்கு வழங்கத் தவறுகின்ற அல்லது பொய்யான அல்லது

பிழைவழியுய்க்கும் தகவல்களை வழங்குகின்ற எவரேனுமாள்,

இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன் மேல்நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஏழாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டமுறையான கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமை தவறொன்றாதல்

**16.** (அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விடுக்கப்பட்ட ஒரு சட்டமுறையான பணிப்புரை அல்லது கட்டளைக்கு முரணாகச் செயலாற்றுகின்றவரும் அல்லது அதனை மீறிச் செயலாற்றுகின்றவரும்;

(ஆ) இச்சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட பணிப்புக்கு இணங்கியொழுகுவதற்கு வேண்டுமென்று தவறுகின்றவரும் அல்லது அசட்டை செய்கின்றவரும்;

(இ) இச்சட்டத்தின்கீழான புலனாய்வொன்றை நடாத்துகின்றவொரு பொலிசு அலுவலரினால் அவரிடம் கேட்கப்பட்டவொரு கேள்விக்குப் பதிலிறுப்பாகத் தகவல்களை வழங்குவதற்குத் தவறுகின்றவரும் அல்லது பொய்யான அல்லது பிழைவழியுய்க்கும் தகவல்களை வழங்குகின்றவரும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள், சுயகுற்றச்சார்த்துதலாகவுள்ள இப்பந்தியின்கீழான ஏதேனும் கூற்றை அளிப்பதற்கு வலுக்கட்டாயப் படுத்தப்படுதலாகாது;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட சட்டமுறையான வொரு கட்டளையை அல்லது பணிப்புரையை நடைமுறைப்படுத்துவதனை வேண்டுமென்று தடுக்கின்ற அல்லது தடங்கல் செய்கின்றவரும், அல்லது

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை வலுவுறுத்துவத னைத் தடுக்கின்ற அல்லது அதற்கு முட்டுக்கட்டை யிடுகின்றவருமான,

எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்றத்திலான குற்றத்தீர்ப்பின் மேல், இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனைக்கும் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*தவறுகள், பிடியாணை யின்றிக் கைதுசெய்யத் தக்கனவாக இருத்தல்*

**17.** இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்துக்குட்பட பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தினதும் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தினதும் வேறு ஏற்புடையற்பாலன வான சட்டங்களினதும் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அது புலனாய்வுசெய்யப்படுதலும், அதற்கெதிராகக் குற்றவழக்குத் தொடுக்கப்படுதலும், அது தண்டிக்கப்படுதலும் வேண்டும்.

பாகம் III

**தவறுகளைப் புலனாய்வுசெய்தல்**

*எவர் புலனாய்வுகளை நடாத்தலாம் என்பது*

**18.** ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவர் அல்லது ஒரு பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் பொலிசு அலுவலர், இச்சட்டத்தின்கீழான தவறொன்று பற்றிய அல்லது இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்ற செயலொன்று பற்றிய புலனாய் வைத் தொடங்குவதற்கும் நடாத்துவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், ஒரு பொலிசு அலுவலரின் சமுகத்தில் இச்சட்டத்தின்கீழான தவறொன்றை எவரேனுமாள் புரியுமிடத்து, அல்லது ஒரு தவறைப் புரிந்தவரெனச் சந்தேகிக்கப்பட்ட ஆளொருவர் தவறொன்றைப் புரிந்தபின்னர் உடனடியாகக் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய ஆளை வினவுவதற்கும் புலனாய்வைத் தொடங்குவதற்கும் அவரைக் கைதுசெய்தல் எவரேனும் பொலிசு அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், மேலும், அத்தகைய பொலிசு அலுவலர், அத்தகைய புலனாய்வு தொடங்கியமைபற்றி இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு உடனடியாக அறிவித்தலும் அவரது அறிவுறுத்தல்களுக்கமைய புலனாய்வை நடாத்துதலும் வேண்டும்.

ஒரு பொலிசு அலுவலரினாலும் ஏனைய அலுவலர்களினாலும் கைது செய்யப்படுதல்

**19**. எவரேனும் பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர் ஒருவர் அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவர்,-

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றை அவரது சமுகத்தில் புரிகின்ற, அல்லது புரிந்துள்ளாரென நம்புவதற்கு அவருக்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்ற;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் சம்பந்தப்பட்டிருக்கின்ற;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றை ஆளொருவர் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என அத்தகைய பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவர் அல்லது கரையோரக் காவல் அலுவலர் நம்பகமானவையென நம்புகின்ற தகவல்களை அல்லது முறைப்பாடொன்றை அத்தகைய பொலிசு அலுவலர், உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலர் அவர் தொடர்பில் பெறுகின்ற;

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தபின்னர் கைதுசெய்தலைத் தட்டிக்கழிக்கின்ற உட்கருத்துடன் இலங்கையிலிருந்து தப்பியோடுகின்ற அல்லது கைதுசெய்தலைத் தட்டிக்கழிக்கின்ற; அல்லது

(உ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்தமைக்கான சந்தேகநபராகவிருந்து, அத்தகைய ஆள் எந்தப் பிணையின் நிபந்தனைகளுக்கமைய விடுதலை செய்யப்பட்டுள்ளாரோ அந்தப் பிணையின் நிபந்தனைகளை மீறுகின்ற,

எவரேனுமாளைப் பிடியாணையின்றிக் கைதுசெய்யலாம்.

ஒரு பொலிசு அலுவலர் தவிர்ந்த அலுவலரொருவரினால் கைது செய்தல் நிறைவேற்றப்படும் போதான நடவடிக்கை முறை

**20.** (1) ஒரு பொலிசு அலுவலர் தவிர்ந்த வேறு ஆயுதந்தாங்கிய படைகளின் ஓர் உறுப்பினரினால் அல்லது ஒரு கரையோரக் காவல் அலுவலரினால் கைதுசெய்யப்பட்ட ஆளொருவர் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் முன்னர் அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் காலத்துக்குக்காலம் பெயர்குறிக்கப்பட்டவொரு பொலிசு அலுவலரின் முன்னர் அவசியமற்ற தாமதமின்றியும் மற்றும் எப்பட்சத்திலும் இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள்ளும் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆள் இலங்கைக் குடியரசின் ஆள்புலத்துக்கு வெளியே அல்லது ஏதேனும் வானூர்தியின் மீது அல்லது கலத்தின் மீது கைதுசெய்யப்பட்டுள்ளவிடத்து, கைதுசெய்யப்பட்ட இடத்திலிருந்து இயைபான பொலிசு நிலையத்துக்கான பயணத்திற்கு அவசியமான காலப்பகுதியானது, அத்தகைய இருபத்திநான்கு மணித்தியாலக் காலப்பதியைக் கணிப்பதில் தவிர்க்கப்படுதல் வேண்டும்:

ஆயின், மேலும், கைதுசெய்தலை நிறைவேற்றிய ஆளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட காரணங்களின் நிமித்தம் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின்முன்னர் இவ்வுட்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்

நியதிகளின்படி கைதுசெய்யப்படுகின்ற ஆளை முன்னிலைப் படுத்துதல் செயல்முறைக்கு உகந்ததல்லாதிருப்பின், அத்தகைய ஆளின் கட்டுக்காப்பு, அடுத்துக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) கைதுசெய்தலை நிறைவேற்றிய அலுவலர், செயல் முறைக்குகந்தவரை விரைவாக, அத்தகைய தகவல்களைப் பெறுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஆணைபெற்ற அலுவல ரொருவருக்கு கைது செய்தலை அறிவித்தல் வேண்டும்.

(3) பிரிவுகள் 24 மற்றும் 25 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, எவரேனும் ஆளின் உயிரைப் பாதுகாப்பதற்கு, ஏதேனும் பயங்கரவாதச் செயலைத் தடுப்பதற்கு, அல்லது இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட ஒரு தவறு தொடர்பான சான்றைப் பேணிக்காப்பதற்கு அவசியமானவிடத்து, அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆள் ஆணைபெற்ற அலுவலரினால் வினவப்படலாம் மற்றும் மேலும் தேடுகையிடப்படலாம்:

(4) அத்தகைய ஆணைபெற்ற அலுவலர் மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அல்லது அதற்கெனப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறிக்கப்பட்டவொரு பொலிசு அலுவலருக்கு அத்தகைய கைதுசெய்தல்பற்றி உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(5) இப்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் கட்டுக்காப்பினுள் அவ்வாறு கைதுசெய்யப்பட்ட ஆளை எடுக்கும் நேரத்தில், கைதுசெய்தலை நிறைவேற்றிய அலுவலர், அவரினால் நிறைவேற்றப்பட்ட கைதுசெய்தல் தொடர்பான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி அத்தகைய பொறுப்பாகவுள்ள அலுவலருக்குக் கூற்றொன்றை அளித்தல் வேண்டும்.

(6) சந்தேகநபரின் உடைமையில் காணப்பட்டிருக்கக்கூடிய, அல்லது கைதுசெய்யப்பட்ட இடத்தில் காணப்பட்டிருக்கக்கூடிய எல்லா இனங்களையும் அத்தகைய அலுவலர், பொறுப்பாகவுள்ள அத்தகைய அலுவலருக்குக் கையளித்தலும் வேண்டும்.

ஒரு பொலிசு அலுவலரினால் கைது செய்தல் நிறைவேற்றப் படும் போதான நடவடிக்கை முறை

**21.** (1) (அ) பொலிசு அலுவலர் ஒருவரினால் கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள், அத்தகைய பொலிசு அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின் முன்னர் உடனடியாக முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய முன்னிலைப்படுத்தலானது செயல்முறைக்கு கந்ததாக இராதவிடத்து, கைதுசெய்யப்பட்ட ஆள் மிக அண்மையிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின்முன்னர் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நியதிகளின்படி கைதுசெய்தலொன்றை நிறைவேற்றுவதற்கு ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவரினது அல்லது கரையோரக் காவல் அலுவலரொருவரினது உதவியைப் பெற்றுக்கொள்வது அல்லது கைதுசெய்யப்பட்ட ஆளை ஒரு பொலிசு நிலையத்திற்குக் கொண்டுசெல்வதற்கான அத்தகைய உதவியைப் பெற்றுக்கொள்வது ஒரு பொலிசு அலுவலருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

நிறுத்துவதற்கும் தேடுகையிடு வதற்குமான தத்துவம்

**22.** (1) பிரிவு 20 அல்லது பிரிவு 21 இன்கீழ் எவரேனுமாளைக் கைதுசெய்வதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில், "கைதுசெய்யும் அலுவலர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஒரு பொலிசு அலுவலர், ஆயுதந்தாங்கிய படையின் உறுப்பினர் அல்லது கரையோரக் காவல் அலுவலர் -

(அ) எவரேனுமாளை, ஏதேனும் வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை அல்லது வானூர்தியை நிறுத்தித் தேடுகையிடலாம்;

(ஆ) அத்தகைய ஆளை வினவலாம்;

(இ) எவையேனும் வளவுகளினுள் அல்லது காணியினுள் பிரவேசித்து தேடுகையிடலாம்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதில் பயன்படுத்தப்பட்ட, அதிலிருந்து பெறப்பட்ட, அதனோடு சம்பந்தப்பட்ட அல்லது தொடர்புபட்ட அல்லது இச்சட்டத்தின்கீழான தவறைப் புரிவதில் பயன்படுத்தப்படுவதாக, அதிலிருந்து பெறப்படுவதாக, அதனோடு சம்பந்தப்

படுவதாக அல்லது தொடர்புபடுவதாக நியாயமான முறையில் சந்தேகிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை, வஸ்துவை அல்லது பொருளைக் கட்டுக்காப்பினுள் எடுக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழான தத்துவங்களைப் பிரயோகித்தலானது, 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இயைபான திறத்தவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருள், செயல்முறைக்குகந்த வரை விரைவாக, இயைபான அலுவலர் எந்தப் பொலிசு நிலையத்தைச் சேர்ந்துள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னர் காண்பிக்கப்படுதல் வேண்டும், அல்லது மிகக்கிட்டிய பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் முன்னர் காண்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், இயைபான சந்தேகநபர் எந்த நீதிவானின்முன்னர் முன்னிலைப்படுத்தப் படவேண்டுமோ அந்த நீதிவானுக்கு அது தொடர்பான அறிக்கையொன்றைக் காண்பித்தல் வேண்டும் அவர், அவ்வாறு கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்ட ஏதேனும் ஆவணம், வஸ்து அல்லது பொருளின் உடைமை அல்லது விடுவிப்புத் தொடர்பாகத் தோதான கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

கைதுசெய்யும் நேரத்தில் வழங்கப்பட வேண்டிய தகவல்கள்

**23.** (1) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "சந்தேகநபர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கைதுசெய்யப்படுகின்ற ஆளுக்கு, கைதுசெய்யப்படும் நேரத்தில் கைதுசெய்யும் அலுவலர் பின்வருவனவற்றைத் தெரிவித்தல் வேண்டும்:-

(அ) கைதுசெய்கின்ற அலுவலரின் ஆளடையாளம்;

(ஆ) சந்தேகநபரினால் புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறு;

(இ) எழுத்திலான சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு சந்தேகநபர் ஒரு சட்டத்தரணியை அணுகுவதற்கான உரிமை.

(2) ஓராம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தகவல்களைச் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளில், எந்த மொழி சந்தேகநபரினால் விளங்கிக்கொள்ளப்படுகின்றதோ அந்த மொழியில், வழங்குவதற்கு நியாயமான ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(3) கைதுசெய்யும் நேரத்தில் (1) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய தகவல்களைச் சந்தேகநபருக்கு வழங்குவது செயல்முறைக்குகந்ததாக இராதவிடத்து, அத்தகைய தகவல்கள் செயல்முறைக்குகந்தவரை விரைவாக அவரினால் விளங்கிக் கொள்ளப்படும் மொழியொன்றில் அவருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ் செலுத்தி கைதுசெய்தல் நிறைவேற்றப் படுதல் வேண்டும்

**24.** ஒவ்வொரு கைதுசெய்தலும், சந்தேகநபரின் அந்தரங்கத் தன்மைக்கு உரிய கவனஞ்செலுத்தி நிறைவேற்றப்படுதல் வேண்டும். பெண் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்தலானது கைதுசெய்கின்ற ஒரு பெண் அலுவலரினால் அல்லது ஒரு பெண் அலுவலரின் சமுகத்தில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப் படுத்துவதற்கு இயன்ற ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

பெண்களைத் தேடுகை யிடுதலும் வினவுதலும்

**25.** (1) எவரேனும் பெண் சந்தேகநபரை வினவுதலானது, ஒரு கைதுசெய்கின்ற பெண் அலுவலரினால் அல்லது ஒரு பெண் அலுவலரின் சமுகத்தில் நிறைவேற்றப்படுவதனை உறுதிப் படுத்துவதற்கு இயன்ற ஒவ்வொரு வழிமுறையும் எடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு பெண் சந்தேகநபரைத் தேடுகையிடுதலானது அவசிய மானமுறையில் பெண் அலுவலரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

கைதுசெய்தல் பற்றிய அறிவிப்பு

**26.** (1) எவரேனுமாள் 20 ஆம் அல்லது 21 ஆம் பிரிவின்கீழ் கைதுசெய்யப்படுமிடத்து, அத்தகைய கைதுசெய்தல் பற்றிய நிகழ்வை ஒப்புக்கொண்டு, இதற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படுகின்றவாறன அத்தகைய படிவத்திலான ஆவணமொன்றின் வாயிலான அறிவிப்பிபொன்று, அத்தகைய ஆளின் வாழ்க்கைத்துணைக்கு, தந்தைக்கு, தாய்க்கு அல்லது வேறெவரேனும் நெருங்கிய உறவினருக்கு உடனடியாக அல்லது கைதுசெய்தலிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் வழங்குதல் கைதுசெய்கின்ற அலுவலரின் கடமையாதல் வேண்டும். அத்தகைய கைதுசெய்யப்பட்ட ஆள் கட்டுக்காப்பிலிருந்து விடுதலைசெய்யப்படும்போது தோதான அதிகாரிக்கு அதனைத் திருப்பிக்கொடுத்தல் அல்லது அவர் முன்னர் அதனைக் காண் பித்தல் அத்தகைய ஆவணம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்:

ஆயின், எவரேனுமாள் கட்டுக்காப்பினுள் எடுக்கப்பட்டு இப்பிரிவிவிற் குறித்துரைக்கப்பட்டவாறு ஆவணமொன்றை வழங்குதல் இயலாததாகவுள்ளவிடத்து, கைதுசெய்கின்ற அலுவலர் ஒரு பொலிசு அலுவலராகவிருப்பின், அது ஏன் இயலாததாக வுள்ளது என்பதற்கான காரணங்களைக் கொடுத்து தகவற் புத்தகத்தில் ஒரு பதிவீட்டைச் செய்தலும், கைதுசெய்கின்ற அலுவலர் ஆயுதங்தாங்கிய படைகளின் உறுப்பினரொரு வராகவிருப்பின் அல்லது கரையோரக் காவல் அலுவலராகவிருப் பின் அத்தகைய ஆவணத்தை வழங்குதல் ஏன் இயலாததாக வுள்ளதென்பதற்கான காரணங்களைப் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு அறிக்கையிடுதலும் கைது செய்கின்ற அலுவலரின் கடமையாதல் வேண்டுமென்பதுடன் பொறுப்பாகவுள்ள அலுவலர், அதற்கான காரணங்களுடன் சேர்த்து, தகவற் புத்தகத்தில் அத்தகைய நிகழ்வுகள் பற்றிய பதிவீடொன்றைச் செய்தலும் வேண்டும்.

(2) அத்தகைய அறிவிப்பானது பின்வருவனவற்றை உள்ளடக்கு தல் வேண்டும்:-

(அ) கைதுசெய்யப்பட்ட தேதியும், நேரமும், இடமும்;

(ஆ) கைதுசெய்தலுக்கான காரணங்கள்;

(இ) கட்டுக்காப்பு அல்லது தடுப்புக்காவல் இடம்;

(ஈ) கைதுசெய்கின்ற அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் பதவிவரிசை; அத்துடன்

(உ) புலனாய்வுகளின் நடாத்துகைக்குப் பங்கமின்றி சந்தேகநபரின் கிட்டிய இரத்த உறவினர் அவருக்கு நியாயமான அணுகுகையைக் கொண்டிருப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான வேறெவையேனும் தகவல்கள்.

(3) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகையவோர் ஆள் சமுகமளித்திராதிருப்பின், கைதுசெய்கின்ற அலுவலர், (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவிப்பு எந்த ஆளுக்குச் சேர்ப்பிக்கப்படவேண்டுமோ அந்த ஆளின் ஆளடையாளம் மற்றும் அவர் எங்குள்ளார் என்பனபற்றிச் சந்தேகநபரிடம் விசாரித்தல் வேண்டுமென்பதுடன், சந்தேகநபர் அத்தகைய தகவல்களை வழங்கினால், அத்தகைய ஆளுக்கு ஒப்புக் கொள்ளலைச் சேர்ப்பிப்பதற்கான இயன்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுதலும் வேண்டும். சொல்லப்பட்ட அறிவிப்பின் பிரதியொன்று சந்தேகநபருக்குச் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) சந்தேகநபர் எந்தப் பொலிசு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளாரோ அந்தப் பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், செயல்முறைக்குகந்தவரை விரைவாகவும், எப்பட்சத்திலும் கைதுசெய்யப்பட்டதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமலும் பொருளளவில் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் அத்தகைய கைதுசெய்தல் மற்றும் தடுத்துவைத்தலை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், பொருளளவில் இச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையில் தரப்பட்ட படிவத்தில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு அறிவித்தலும் வேண்டும்.

(5) அத்தகைய அறிவிப்பானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) கைதுசெய்த தேதியும், நேரமும், இடமும்;

(ஆ) கைதுசெய்வதற்கான காரணங்கள்;

(இ) எந்த இடத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படுகின்றாரோ அந்த இடம்;

(ஈ) கைதுசெய்யும் அலுவலரின் பெயர், அடையாளங்காண் இலக்கம் மற்றும் அவரது பதவிவரிசை;

(உ) சந்தேகநபரை உடனடியாக அணுகுவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவை இயலச் செய்யக்கூடுமான வேறு எவையேனும் தகவல்கள்; அத்துடன்

(ஊ) அத்தகைய கைதுசெய்தலோ மற்றும் தடுத்து வைத்தலோ சந்தேகநபரின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாவெனத் தீர்மானிப்பதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழு கோரக்கூடிய வேறு எவையேனும் தகவல்கள்.

*மத்திய தரவுத் தளமும் இடாப்பும்*

**27.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஆனவர் ஒரு மத்திய தரவுத்தளத்தையும் இடாப்பையும் தாபித்து பேணுதல் வேண்டும்; இது, இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட ஆட்களின் கைதுசெய்தல் தடுத்துவைத்தல், விளக்கமறியலில் இடுதல், பிணை அளித்தல், விடுவித்தல், குற்றவழக்கு தொடுத்தல், குற்றத் தீர்ப்பளித்தல் அல்லது விடுதலை செய்தல் மற்றும் கைதுசெய்யப்பட்ட ஆட்களுக்குத் தண்டனை அளித்தல் ஒவ்வொன்றும் தொடர்பாகவும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

(2) அத்தகைய தரவுத்தளம் மற்றும் இடாப்பானது பின்வருவனவற்றைத் தீர்மானிப்பதற்குத் தேவைப்படும் அத்தகைய வேறு தகவல்களை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(அ) சந்தேகநபரைக் கைதுசெய்தல் கட்டுக்காப்பில் வைத்திருத்தல் மற்றும் தடுத்துவைத்தலின் சட்டமுறையான தன்மை;

(ஆ) சந்தேகநபரின் சுதந்திரத்தைப் பறித்தலின் சட்டமுறை யானதன்மை; அத்துடன்

(இ) தொடர்ச்சியாகத் தடுத்துவைத்தல் அல்லது விளக்க மறியலில் இடுதல் என்பவற்றுக்கான தேவை.

(3) பொலிசுப் பரிசோதகர், தலைமையதிபதி, மனித உரிமைகள் ஆணைக்குழு அவ்வாறு வேண்டுகோள்விடுக்கும்போதெல்லாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு, கைதுசெய்யப்பட்ட ஆளின் ஆளடையாளம், கைதுசெய்யப்பட்ட தேதி, கைதுசெய்தமைக்கான காரணம், தடுத்துவைக்கப்பட்ட இடம் என்பன தொடர்பில் அத்தகைய தரவுத்தளம் மற்றும் இடாப்பில் உள்ள தகவல்களை வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட தகவல் ஆனது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் குறிக்கோள்களுக்குப் பயன் கொடுக்கும் நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(5) ஆளெவரும், நடைபெற்றுக்கொண்டிருக்கும் புலனாய்வுக ளுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய அத்தகைய முறையில் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தலாகாது என்பதை உறுதிப்படுத்துவது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடமையாதல் வேண்டும்.

நீதிவானொருவர் முன்னர் முன்னிலைப் படுத்துதல்

**28.** (1)(அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி பொலிசு அலுவலர் ஒருவரினால் கைதுசெய்யப்பட்டுள்ள வரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரும்; அல்லது

(ஆ) ஒரு பொலிசு அலுவலர் தவிர்ந்த அலுவலரொரு வரினால் கைதுசெய்யப்பட்டு பிரிவு 20 இன் நியதிகளின்படி ஒரு பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரின்முன்னர் அல்லது பெயர் குறிக்கப்பட்ட பொலிசு அலுவலரின்முன்னர் முன்னிலைப்படுத்தப்பட்டவரும்,

ஆன சந்தேகநபரொருவர், அத்தகைய கைதுசெய்தல் நேரத்திலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குப் பிந்தாமல் மிகக் கிட்டிய நீதிவான்முன்னர் முன்னிலைப்படுத்தப்படுதல் வேண்டும்:

ஆயினும் எவ்வாறாயினும், கைதானது இலங்கைக் குடியரசின் ஆள்புலத்திற்கு வெளியே அல்லது ஏதேனும் வானூர்தியில் அல்லது கலத்தில் கைதுசெய்தலானது நிறைவேற்றப்பட்டுள்ளவிடத்து, கைதுசெய்த இடத்திலிருந்து இயைபான நீதிவானைச் சென்றடைய பயணிப்பதற்காக அவசியமான நேரம் அத்தகைய நாற்பத்தெட்டு மணித்தியாலங்களை கணிப்பீடு செய்வதிலிருந்து தவிர்க்கப்படுதல் வேண்டும்.

(2) சந்தேகநபர், நீதிவானொருவர் முன்னர் நிறுத்தப்படும் அந்நேரத்தில்,-

(அ) 31 ஆம் பிரிவின் நியதிகளின்படி தடுப்புக்கட்டளை ஒன்று வழங்கப்பட்டுள்ளவிடத்தும், அவரது சோதனைக்காக நீதிவான் முன்னர் இடப்படுகின்றவிடத்தும், நீதிவான் அத்தகைய தடுத்துவைத்தல் கட்டளைக்கு பயன்கொடுக்கும் வகையில் கட்டளை ஒன்றை ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) தடுப்புக் கட்டளை ஒன்று வழங்கப்படாதுள்ளவிடத்து அல்லது அத்தகைய தடுப்புக் கட்டளை ஒன்று நீதிவானொருவர் முன்னர் இடப்படாதுள்ளவிடத்து, நீதிவான்-

(i) நீதிவான் சூழ்நிலைகளில் நீதிவான் நியாயமானதென கருதுகின்றதான ஏதுக்களின் அடிப்படையில் சந்தேகநபரை விளக்கமறியலில் வைப்பதற்கான கட்டளை ஒன்றை நாடி விண்ணப்பமொன்றை இயைபான பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் செய்தால், அச்சந்தேகநபர் விளக்கமறியல் கட்டுக்காப்பில் இடப்படுதல் வேண்டும் என கட்டளை இடலாம்:

ஆயினும் எவ்வாறாயினும், நீதிவான் அத்தகைய நியாயமான ஏதுக்கள் எதுவும் இருக்கவில்லை எனத் திருப்திப்படுகின்ற விடத்து, அச்சந்தேகநபர் பிணையில் விடு விக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ii) இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப் பாகவுள்ள அலுவலர் வழங்கப்படவிருக்கும் பிணை அளிக்கப்படுவதற்கு வேண்டுகோள் விடுத்தால் அல்லது அதற்கு ஆட்சேபனை எதுவும் செய்யாதிருந்தால், சரீரப்பிணை நீங்கலாக, அத்தகைய நீதிவானால் விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மீது, 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சந்தேகநபரை விடுவிக்க லாம்; அல்லது

(iii) இயைபான பொலிசு நிலையத்துக்கு பொறுப் பான அலுவலர் நீதிவான் திருப்திப்படுகின்ற ஏதுவின்மீது அவ்வாறு கோரிக்கை விடுத்தால், சந்தேகநபரை விடுவிக்கலாம்.

(3) எந்த நீதிவான் முன்னர் சந்தேகநபர் நிறுத்தப்படுகின்றாரோ அந்த நீதிவான் -

(அ) சந்தேகநபரை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து, தனிப்பட்ட நேர்காணல் ஒன்றின் மூலம் அவரது நல்வாழ்வு மற்றும் சேமநலன் பற்றியும் கவனஞ் செலுத்துதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சந்தேகநபர் வழங்கக்கூடிய எவையேனும் கருத்துரை களை பதிவுசெய்தல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்காக, "தனிப்பட்ட நேர்காணல்" என்பது கைதுசெய்வதில் பங்குபற்றி இருக்கக்கூடிய அல்லது சந்தேக நபரினால் புரியப்பட்டடிருப்பதாக சார்த்தப்பட்ட தவறொன்று பற்றி

புலனாய்வு செய்துள்ள எவரேனும் பொலிசு அலுவலர் சமூக மில்லாத நிலையில் ஒன்றில் திறந்த நீதிமன்றத்திலான அல்லது நீதிவானின் தனிப்பறையிலான வழக்கு நடவடிக்கைகள் எனப் பொருள்படும்.

நீதிவான் சட்ட மருத்துவப் பரிசோதனைக்கு சந்தேக நபரைப் பணித்தல்

**29.** (1) இருபத்தெட்டாம் பிரிவின்கீழ் சந்தேகநபரினால் செய்யப்பட்ட ஏதேனும் கருத்துரையையும் மற்றும் கைது செய்யும் அலுவலரினால் அல்லது இயைபான பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரினால் செய்யப்பட்ட ஏதேனும் முறையீட்டையும் கவனத்திற்கெடுத்த பின்னர், சந்தேகநபர் கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடாத்துகைக்கு அல்லது சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்க கூடுமென, நீதிவான் அபிப்பிராயபடுமிடத்து, சந்தேகநபர் மருத்துவ பரிசோதனைக்காக சட்ட மருத்து அலுவலர் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டுமெனவும் அத்துடன் நீதிவானுக்கு அத்தகைய சட்ட மருத்துவ அலுவலரினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும் நீதிவான் பணிக்கலாம்.

(2) சட்ட மருத்துவ அலுவலரின் அறிக்கையானது பெரும்பாலும் சந்தேகநபர் சித்திரவதைக்கு உள்ளடக்கப்பட்டு இருந்திருக்கிறார் என்ற நிகழ்தகவை வெளிக்கொணருமிடத்து, சந்தேகநபருக்கு மற்றும் கைதுசெய்யும் அலுவலருக்கு அல்லது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கிய பின்னர், நீதிவான் -

(அ) அவசியமான சிகிச்சைக்கு சந்தேகநபரை பணித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சந்தேகநபரை விளக்கமறியலில் வைப்பதற்கு அல்லது தடுத்துவைப்பதற்கு கட்டளையிடுதல் வேண்டும்.

(3) சந்தேகநபரை விளக்கமறியலில் அல்லது தடுத்துவைத்தலில் வைத்திருக்கும்படி நீதிவான் கட்டளையிடுகின்றவிடத்து, முன்னரே சந்தேகநபருக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ள எவரேனும் பொலிசு அலுவலர் அச்சந்தேகநபருக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தலாகாது.

(4) அத்தகைய சந்தேகநபர் தொடர்பிலான புலனாய்வு பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியினால் பணிக்கப்பட்டவாறு அத்தகைய வேறு பொலிஸ் அலுவலர்களினால் தொடரப்படுதல் வேண்டும்.

(5) நீதிவான், சார்த்தப்பட்ட சித்திரவதையை புரிந்துள்ள ஆளொருவருக்கு எதிராக குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை தொடருவதற்கு சட்டத்துறைத் தலைமையதிபதியை இயலச் செய்வதற்கு சார்த்தப்பட்ட சித்திரவதை பற்றிய புலனாய்வு ஒன்றை தொடங்குவதற்கு பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியை பணித்தல் வேண்டும்.

விளக்கமறியலின் ஆகக்கூடிய காலப்பகுதி

**30.** (1) ஆளெவரும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை தொடர்ந்திருந்தாலான்றி அவருடைய கைது செய்தல் திகதியில் இருந்து ஓராண்டை விஞ்சுகின்ற காலப்பகுதி ஒன்றுக்கு விளக்கமறியலில் வைத்திருக்கப்படுதல் ஆகாது:

ஆயினும் எவ்வாறாயினும், விளக்கமறியல் காலப்பகுதியானது, சட்டத்துறை தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மீது, மேல் நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரின் கட்டளை ஒன்றின் மீது, நீடிக்கப்படலாம், இது ஒருதடவையில் மூன்று மாதங்களை விஞ்சுதலாகாது.

(2) குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியினுள் தொடரப்படாதிருப்பின், நீதிவான் அவரால் விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மீது பிணையில் சந்தேக நபரை விடுவித்தல் வேண்டும்.

தடுத்துவைத்தற் கட்டளைகள்

**31.** (1) (அ) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கத்திற்காக சந்தேகநபர் ஒருவரை தடுத்துவைப்பதற்கு தடுத்துவைத்தற் கட்டளை ஒன்றை நாடுகின்ற பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரொருவர், பிரதி பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு எழுத்தில் விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(ஆ) சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் அல்லது புரிவதில் சம்மந்தப்பட்டுள்ளார் என நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் உள்ளது என அத்தகைய பிரதி பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி திருப்திப்பட்டால், அவர் அத்தகைய காரணங்களைப் பதிவுசெய்தபின்னர், அங்கீகரிக்கப்பட்ட தடுத்து வைத்தல் நிபந்தனைகளின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைக்கும் இடமொன்றில் சந்தேகநபரின் தடுத்துவைத்தலுக்கு அதிகார மளிக்கின்ற, இச்சட்டத்திற்கான நான்காம் அட்டவணையில் பொருளவில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் தடுத்துவைத்தற் கட்டளை ஒன்றை வழங்கலாம்.

(இ) இப்பிரிவின் கீழான தடுத்துவைத்தற் கட்டளை ஒன்று ஆரம்பத்தில் மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதி யொன்றுக்கு வழங்கப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தடுத்துவைத்தற் கட்டளை ஒன்று அதன் வழங்குகைக்கான காரணங்களை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் அவசியமானவிடத்து, பின்வரும் நோக்கங்களுக்காக மட்டும் வழங்கப்படுதலும் வேண்டும்:-

(அ) சந்தேகநபர் தொடர்பில் புலனாய்வுகளை நடாத்துவதற்கு வசதியளித்தல்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் தவறொன்றை புரிதல் தொடர்பாக புலனாய்வுக்கான விடயப்பொருளையும், முக்கியமான சான்றுகளையும் பெற்றுக்கொள்ளல்;

(இ) தடுத்துவைத்தலில் சந்தேகநபரை விசாரித்தல்;

(ஈ) தடுத்துவைத்தற் கட்டளையில் பதிவுசெய்யப்பட வேண்டிய அத்தகைய காரணங்களுக்காக, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிவது தொடர்பான சான்றினைப் பேணுக்காத்தல்.

(3) இயைபான சந்தேகநபரை 22 ஆம் பிரிவின்கீழ் நீதிவான் ஒருவர் முன்னர் நிறுத்துகின்றபோது, அந்நேரத்தில் இப்பிரிவின் கீழ் தடுத்துவைத்தல் கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றை சோதனைக்காக நீதிவான் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான ஒவ்வொரு தடுத்துவைத்தல் கட்டளையின் பிரதி ஒன்று தடுத்துவைக்கப்படவிருக்கின்ற சந்தேகநபர் மீது அத்தகைய கட்டளையிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் காலப்பகுதியொன்றினுள் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், சந்தேகநபரினாலான அதற்கான ஒப்புக்கொள்ளல் பெறப்பட்டு இயைபான நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடப்படுதலும் வேண்டும்.

(5) அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் காலப்பகுதி ஒன்றினுள் தடுத்துவைத்தல் கட்டளையின் பிரதியொன்று சந்தேகநபரின் கிட்டிய இரத்த உறவினருக்கு அல்லது வயதுவந்த குடும்ப உறுப்பினருக்கு மீது சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 26 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பிரதியை சேர்ப்பிக்கின்ற முறைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(6) சனாதிபதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியின் விதப்புரைமீது, இப்பிரிவின் நோக்கத்திற்காக, “அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் இடங்கள்” என அத்தகைய எண்ணிக்கையான இடங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

(7) சனாதிபதி, பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியுடனும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் கலந்தாலோசனையுடன், இப்பிரிவின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைத்தல் நிபந்தனைகள் ஆக அத்தகைய தடுத்து வைத்தல் நிபந்தனைகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் குறித்துரைத்தல் வேண்டும்.

(8) இப்பிரிவின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட எவரேனும் ஆள் அத்தகைய தடுத்துவைத்தற் கட்டளைக் காலப்பகுதியின் போது 40 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட மீளாய்வுச்சபைக்கான மேன் முறையீடு ஒன்றை ஆக்கலாம்.

**32.** (1) தடுத்துவைத்தல் கட்டளை ஒன்றின் அதிகாரத்தின் கீழ், எந்த நீதிவானின் முன்னர் சந்தேகநபர் முன் நிறுத்தப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அந்த நீதிவான் அத்தகைய தடுத்துவைத்தல் இடத்திற்கு பொறுப்பான அதிகாரிக்கு ஏதேனும் முற்கூட்டிய அறிவித்தல் வழங்காமல், நீதிவான் தடுத்து வைக்கும் இடத்தை பார்வையிடுதல்

(அ) அத்தகைய சந்தேகநபரின் தடுத்து வைத்தல் இடத்தை வாரத்திற்கொருதடவை பார்வையிடுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சந்தேகநபரை நேர்காணல் வேண்டுமென்பதுடன் அவரது நல்வாழ்வை கவனித்தலும் வேண்டும்.

(2) நீதிவானிற்கு உடனடியாகவும் தடையற்றவிதமாகவும் அணுக்கத்தை வழங்குதல் ஏதேனும் தடுத்துவைத்தல் இடத்திற்கு பொறுப்பான அதிகாரியின் கடமையாதல் வேண்டும்.

(3) சந்தேகநபர் சித்திரவதைக்கு உட்பட்டிருந்துள்ளார் என நீதிவான் அவதானித்திருந்தால் அல்லது சந்தேகநபர் சித்திர வதைக்கு உட்பட்டார் என அவரே சார்த்தியிருந்தால், நீதிவான் சட்டமருத்துவ அலுவலர் ஒருவராலான பரிசோதனைக்காக சந்தேகநபர் முன்னிறுத்தப்படுவதற்கும் அவருக்கு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கும் கட்டளையை ஆக்கலாம்.

(4) சந்தேகநபருக்கும் இயைபான பொலிசு அலுவலருக்கும் அல்லது அலுவலர்களுக்கும் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்கிய பின்னர், சந்தேகநபர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கலாம் என நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் இருக்கின்றன என நீதிவான் திருப்திப்படின், அவர் 29 ஆம் பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி செயலாற்றுதல் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தடுத்துவைத்தல் பற்றிய அறிவித்தல்

**33.** (1) எந்தப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் தடுத்து வைக்கப்படுகின்றாரோ அந்தப் பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலர் செயல்முறைக்கு உகந்தவாறு விரைவாக ஆனால் எப்பட்சத்திலும், தடுத்துவைத்தல் தொடங்குவதிலிருந்து எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்கு பிந்தாமல் அத்தகைய தடுத்துவைத்தல் பற்றி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அறிவித்தல் வேண்டும்.

(2) தடுத்துவைத்தல் கட்டளையின் பிரதியொன்று செயல்முறைக்கு உகந்தவாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சேர்ப்பிக் கப்படுதல் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகரிக்கப் பட்ட தடுத்து வைத்தல் இடத்தை பார்வையிடுதல்

**34.** மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் முன்னறிவித்தல் வழங்காமல்-

(அ) ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைக்கும் இடத்திற்கு நுழைவதற்கும் சோதிப்பதற்கும்;

(ஆ) அத்தகைய இடத்தில் பேணப்படவேண்டிய தேவைப்படும் தடுத்துவைத்தல் பதிவேடுகள், தடுத்துவைத்தல் கட்டளைகள் மற்றும் வேறு புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கோருவதற்கும் சோதிப்பதற்கும்;

(இ) அத்தகைய இடத்தில் தடுத்துவைக்கப்படவிருக்கும் ஆட்களை நேர்காணல் செய்வதற்கும்,

உரித்துடையவராதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலர், சாட்சிகள் அல்லது வேறு ஆட்களின் புலனாய்வுக் குறிப்புக்களையும் பதியப்பட்ட கூற்றுகளையும் பரிசோதிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

ஏதேனும் தடுத்து வைத்தல் இடத்தை பார்வையிடு வதற்கு உரித்தாக்கப் பட்ட நீதிவான்கள்

**35.** எவரேனும் நீதிவான் முன்னறிவித்தல் வழங்காமல் அங்கீகரிக்கப்பட்ட தடுத்துவைக்கும் இடத்தில் நுழைவதற்கு, அத்தகைய தடுத்துவைக்கும் இடம், பதிவேடுகள், தடுத்துவைத்தல் கட்டளைகள் மற்றும் வேறுபுத்தகங்கள் அத்துடன் அத்தகைய இடத்தை பேணப்படுவதற்கு தேவைப்படும் ஆவணங்களையும் அத்துடன் அத்தகைய இடத்தில் தடுத்துவைக்கப்படவுள்ள ஆட்களை நேர்காணல் செய்வதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

நீதிவானொருவரின் அங்கீகாரத்துடன் மட்டும் மூன்று மாதங்களுக்கு அப்பாற்பட்ட தடுத்து வைத்தல்

**36.** (1) மூன்று மாத காலப்பகுதிக்கு அப்பால் 31 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தல் கட்டளையின் நியதிகளின்படி சந்தேகநபர் ஒருவரை தடுத்துவைப்பதற்கு அவசியமாகவிருக்கின்ற விடத்து, இயைபான பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுகின்ற இரகசியமான அறிக்கை ஒன்றை நீதிவான் நீதிமன்றத்தில் கோப்பிடுதல் வேண்டும் அத்துடன் அத்தகைய தொடர்ச்சியான தடுத்துவைத்தலுக்காக நீதிவானின் அங்கீகாரம் பெறுதலும் வேண்டும்:-

(அ) சந்தேக நபருக்கு எதிரான சார்த்துதல்கள்;

(ஆ) புலனாய்வுக் கண்டுபிடிப்புகள்; அத்துடன்

(இ) மேலதிக தடுத்துவைத்தல் தேவைப்படுவதற்கான காரணங்கள்;

(2) நீதிவான் அவ்வாறு கோப்பிடப்பட்ட அறிக்கையின் இரகசியத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(3) தடுத்துவைத்தல் காலப்பகுதியின் நீடிப்பினை நாடுகின்ற பொலிசு அலுவலரின் சமர்ப்பணங்கள் மற்றும் அத்தகைய நீடிப்பிற்காக சந்தேக நபரினால் அல்லது அவருடைய சட்டத்தரணியினால் எழுப்பப்பட்ட ஆட்சேபனைகள் நீதிவானினால் பதியப்படுதல் வேண்டும்.

(4) நீதிவான் அதற்கான காரணங்களை வழங்கி தடுத்து வைத்தல் காலப்பகுதியினை நீடிக்க அல்லது அத்தகைய நீடிப்பை மறுக்கக் கட்டளையிடலாம்.

(5) (அ) நீதிவான் தடுத்துவைத்தல் கட்டளையின் நீடிப்பினை வழங்க மறுக்கின்றவிடத்து, அவர் சந்தேகநபரை விளக்கமறியலில் வைப்பதற்கான ஏதேனும் நியாயமான காரணம் உள்ளதா என விசாரணை செய்தல் வேண்டும்.

(ஆ) விசாரணையின் பின்னர், நீதிவான் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றை சந்தேகநபர் புரிந்துள்ளார் என நம்புவதற்கு ஏதேனும் நியாயமான ஏது உள்ளது என அபிப்பிராயப்படின், சந்தேகநபர் விளக்க மறியல் கட்டுக்காப்பில் இடப்படுதல் வேண்டும்.

(இ) சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் என நம்புவதற்கு காரணங்கள் எதுவும் இல்லாதவிடத்து, அவர் பிணையில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழான வழக்கு நடவடிக்கைகள் இரகசியமாக நடாத்தப்படுதல் வேண்டும்.

தடுத்துவைத்தல் கட்டளைகளின் கீழான ஆகக்கூடிய தடுத்துவைத்தல் காலப்பகுதி

**37.** சந்தேகநபர் ஒருவர் 31 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தல் கட்டளையின்கீழ் பன்னிரெண்டு மாதங்களை விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு தடுத்துவைக்கப்படுதல் ஆகாது.

நீதிவான் முன்னர் நிறுத்தப்பட வேண்டிய சந்தேநபர்

**38.** (1) தடுத்துவைத்தல் கட்டளை ஒன்று முடிவுறாதிருக்கும் போது, சந்தேகநபர் ஒவ்வொரு பதினான்கு நாட்களுக்கு ஒருதடவை நீதிவான் ஒருவர் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டும்.

(2) நீதிவான், அவர் முன்னர் சந்தேகநபர் நிறுத்தப்படுவதன் மேல், 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(3) தடுத்துவைத்தல் கட்டளை ஒன்றின்கீழ் தடுத்துவைத்தல் காலப்பகுதியை பூர்த்திசெய்வதன்மேல், சந்தேகநபர் நீதிவான் ஒருவர் முன்னர் நிறுத்தப்படுதல் வேண்டும்.

(4) சந்தேகநபரினால் புரியப்பட்டதென சார்த்தப்பட்ட தவறொன்று தொடர்பில் புலனாய்வு மீது பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றின் பரிசோதனையை தொடர்ந்து, சந்தேகநபர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் என முடிவு செய்வதற்கான அடிப்படையொன்று முதற்தோற்றமாகவுள்ளதென நீதிவான் திருப்திப்படின், நீதிவான் விளக்கமறியல் கட்டுக்காப்பில் சந்தேகநபர் விளக்கமறியலில் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுதல்வேண்டும் எனப் பணித்தல் வேண்டும்.

*பொலிசு அலுவலர் விளக்க மறியலிலுள்ள அல்லது மறியற்சாலையிலுள்ள சந்தேக நபருக்கான அணுக்கத்தைக் கொண்டுள்ளமை*

**39**. (1) இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு ஒன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலர், நீதிவானினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ் பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்-

(அ) இச்சட்டத்தின் நியதிகளின்படி விளக்கமறியல் கட்டுக்காப்பில் இடப்பட்டுள்ள சந்தேகநபரொருவருக்கான அணுக்கத்தினைக் கொண்டுள்ளதுடன், சந்தேகநபரை நேர்காணுவதற்கு;

(ஆ) அதுசார்பில் அத்தகைய நீதிவானுக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது நீதிவானால் வழங்கப்பட்ட அனுமதியுடன் அவருடைய கூற்றுக்களை பதிவு செய்வதற்கு;

(இ) நீதிவானொருவரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின்கீழ் மேலதிக புலனாய்வுகளை நடாத்தும் நோக்கத்திற்காக விளக்க மறியலில் இருந்து சந்தேகநபரை விடுவிப்பதற்கு:

ஆயினும் எவ்வாறாயினும், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலரொருவர் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வொரு தடவையும் சமூகமளித்தல் வேண்டும்.

(2) சந்தேகநபர், இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றல்லாத வேறு ஏதேனும் தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மறியற்தண்டனை காலம் ஒன்றை அனுபவித்துக் கொண்டிருக்குமிடத்து, இச்சட்டத்தின் கீழ் புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலர் ஒருவர், நீதிவானினால் வழங்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின் கீழ், பின்வருவனவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) மறியற்சாலையில் அத்தகைய சந்தேகநபரை நேர்காணுவதற்கு;

(ஆ) அதற்கென நீதிவானுக்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது அத்தகைய நீதிவானினால் அளிக்கப்பட்ட அனுமதியுடன் அவரது கூற்றுக்களைப் பதிவதற்கு;

(இ) நீதிவானொருவரினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் அதிகாரத்தின் கீழ், மேலதிக புலனாய்வுகளை நடாத்தும் நோக்கத்துக்காக சந்தேகநபரை மறியற்சாலையிலிருந்து வெளியில் எடுப்பதற்கு:

ஆயின் எவ்வாறாயினும், மறியற்சாலையின் திணைணக்களத்தின் அலுவலர் ஒருவர் (அ),(ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சமூகமளித்தல் வேண்டும்.

*தடுப்புக் கட்டளை களிலிருந்து நிருவாக நிவாரணத்திற் கான மீளாய்வுச்சபை*

**40**. (1) முப்பத்தொன்றாம் மற்றும் **41** ஆம் பிரிவுகளின்கீழ் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுப்புக் கட்டளைகளுக்கெதிரான மேன்முறையீடுகளுக்கான நிருவாக நிவாரணங்களை வழங்குவதற்காக மீளாய்வுச் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மீளாய்வுச் சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பாதுகாப்பு எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், அவர் சபையின் தவிசாளராக விருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) குற்றவியல் புலன்விசாரணையும் குற்றவியல் நீதியும், அத்துடன் மனித உரிமைகள் துறைகளில் உயர்தொழில் சார் திறமையும் அனுபவத்தையும் கொண்டுள்ளவர்களான சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட இரண்டு வேறு ஆட்களும்.

(3) மீளாய்வுச்சபையானது மேன்முறையீட்டில் கூறப்பட்ட ஏதுக்களையும் தடுத்துவைத்தல் கட்டளையை கோரியவரான அலுவலரின் உதவியுடன் இயைபான பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் மற்றும் தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கியுள்ள பிரதி பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியினால் ஆக்கப்பட்ட சமர்ப்பணங்களின் மீது அடிப்படையான அத்தகைய கட்டளையை கோருவதற்கான காரணங்களையும் கவனத்தில் கொண்டு மேன்முறையீட்டை கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளைமீது ஆளுகையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(4) அத்தகைய ஆளுகையானது பின்வருவனவற்றுக்கான பணிப்புக்களைக் கொண்டிருக்கலாம்:-

(அ) சந்தேகநபரின் தடுத்துவைத்தலை உறுதிப்படுத்துவதற்கும் மேன்முறையீட்டை தள்ளுபடி செய்வதற்கும்; அல்லது

(ஆ) சந்தேகநபரின் தடுத்துவைப்பினை முடிவுறுத்துவதற்கும் நீதிவானின் முன்னர் சந்தேகநபரை நிறுத்துவதற்கும்;

(5) அத்தகைய ஆளுகையானது மேன்முறையீட்டின் இரண்டு வாரங்களினுள் ஆக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கான காரணங்களைக் கொண்டிருத்தலும் வேண்டுமென்பதுடன், மேன்முறையீட்டாளருக்கும் தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கியவரான பிரதி பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கும் தடுத்துவைத்தல் கட்டளையை கோரியவரான அலுவலருக்கும் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(6) மேன்முறையீட்டாளர் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஆளுகையின் இரண்டு வாரங்களினுள் அத்தகைய ஆளுகைக்கு எதிரான பிரிவு 89 இன்கீழ் தாபிக்கப்பட்ட சுயாதீன மீளாய்வு குழாத்திற்கு மேன்முறையீடு செய்யலாம்.

விளக்கமறியலின் போதான தடுத்து வைத்தல்

**41.** (1) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர் இச்சட்டத்தின்கீழ் விளக்க மறியலில் வைக்கப்பட்ட ஆளொருவர்-

*(அ)* இச்சட்டத்தின்கீழ் தவறொன்றை புரிகின்றார்;

*(ஆ)* இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு ஆயத்தங் களைச் செய்கின்றார் அல்லது எத்தனிக்கின்றார்;

(இ) விளக்கமறியற் கட்டுக்காப்பிலிருந்து தப்புவதற்கு எத்த னிக்கின்றார்; அல்லது

*(ஈ)* கைது செய்யப்படுவதற்கு முன்னர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் என்பதுடன் அத்தகைய பொறுப்பிலுள்ள அலுவலர் அத்தகைய நிகழ்வுபற்றி அறிந்திருக்கவில்லை,

என அவர் உண்மையாகவுள்ளதென நம்புகின்ற தகவலைப் பெறுகின்றவிடத்து, அவர் இயைபான நீதிவானுக்கு அத்தகைய தகவலை அறிக்கையிடுதல் வேண்டும்.

(2) நீதிவான் அத்தகைய தகவலை உடனடியாக விசாரணை செய்தல் வேண்டுமென்பதுடன் விசாரணை முடிவில், நீதிவான் பொலிசு நிலையத்துக்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் நல்லெண் ணத்தில் செயற்பட்டிருந்தார் எனவும் பொலிசாரினால் செய்யப்பட்ட சந்தேகநபருக்கெதிரான சார்த்துதல்கள் நன்றாக கண்டுபிடிக்கப்பட கூடியதாக தோன்றுகின்றதெனவும் திருப்திப்படுவாராயின், அத்துடன் நீதிவான் தடுத்துவைத்தலின்கீழ் சந்தேகநபரை வைத்திருப்பது உசிதமானதென கருதுகின்றவிடத்தும், அவர் நீதிவான் தடுப்புக் கட்டளையின்கீழ் சந்தேகநபரை வைத்திருப்பது அது உசிதமானதெனக் கருதுமிடத்து, அவர் தடுப்புக் கட்டளை யொன்றின் காண்பிப்பின்மீது, பின்வருவனவற்றுக்காக பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரை அனுமதிக்க லாம்:-

*(அ)* சந்தேகநபரின் கட்டுக்காப்பினை எடுப்பதற்கு;

*(ஆ)* சந்தேகநபரின் கட்டுக்காப்பினை எடுப்பதற்கும் விளக்கமறியலில் அவரை வைத்திருப்பதற்கும்;

(இ) விளக்கமறியலிலிருந்து சந்தேகநபரை வெளியில் எடுத் தல்;

(ஈ) அத்தகைய தடுத்துவைத்தல் கட்டளையின் நியதிகளின் படி அத்தகைய சந்தேகநபரை தடுத்துவைப்பதற்கு; அத்துடன்

(உ) சந்தேகநபர் தனிமைப்படுத்தலில் அல்லது பாதுகாப்பின் கீழ் இருக்க வேண்டுமெனக் கட்டளையிடுவதற்கு.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடுத்துவைத்தல் கட்டளை :-

(அ) சந்தேகநபர் எந்த இடப்பிரதேசத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளாரோ அந்த இடப்பிரதேசத்தின் பிரதி பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியினால் வழங்கப் படுதல் வேண்டும்;

(ஆ) பன்னிரெண்டு வாரத்துக்கான ஒட்டுமொத்த காலப் பகுதிக்கான ஒரு நேரத்தின் இரண்டு வார காலப் பகுதிக்காகவிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) ஒவ்வொரு பதினான்கு நாட்களிலும் நீதிவானால் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) விளக்கமறியல் கட்டுக்காப்பிலிருந்து தடுத்துவைத்தலுக்கான சந்தேகநபரின் கைமற்றமானது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் தடுத்துவைக்கப்பட்ட எவரேனுமாள், அத்தகைய தடுத்துவைத்தல் கட்டளையின் திகதியிலிருந்து இரண்டு வாரங்களினுள் 40 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம்.

விளக்க மறியற் கட்டுக்காப்பிலும் தடுத்து வைப்பி லிருந்துமான விடுதலை

**42.** (1) இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சந்தேகநபரொருவர், நீதிவானொருவரின் முன்னர் நிறுத்தப்பட்டதன் பின்னர் மற்றும் நீதிவான் விதிக்கக்கூடிய ஏதேனும் நிபந்தனைக்கமையவும் விளக்கமறியற் கட்டுக்காப்பில் இருந்து அல்லது தடுத்து வைத்தலிலிருந்து மட்டும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(2) சந்தேகநபரின் விடுதலையானது, விடுதலை இடம்பெறும் போது, சமூகமாயிருப்பதற்கு எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரை அனுப்புவதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான போதியளவு நேரத்தினை வழங்கி இயைபான பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப் படுதல் வேண்டும்.

சந்தேக நபரொருவரை பிரதிநிதிப் படுத்து வதற்கான சட்டத்தரணி யொருவரின் உரிமை

**43.** இச்சட்டத்தின்கீழ் சந்தேகநபரொருவரை பிரதிநிதித்துவப் படுத்தும் சட்டத்தரணியொருவர் பொலிசு கட்டுக்காப்பிலுள்ள அத்தகைய ஆளுக்கான அணுக்கத்திற்கான உரிமையை கொண்டிருத்தலும் அத்துடன் எழுத்திலான சட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டவாறான பிரதிநிதித்துவங்களைச் செய்வதற்குமான உரிமையையும் கொண்டிருத்தலும் வேண்டும்.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் குறித்தசில பிரிவுகள் ஏற்புடைமை யாகாது

**44.** குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவைச் சட்டத்தின் 115 ஆம் மற்றும் 116 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் இச்சட்டத்தின்கீழ் சந்தேகநபரொருவர் தொடர்பில் ஏற்புடைமையைக் கொண்டிருத்த லாகாது.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்புடைமை

**45.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட் டத்தின் கீழ் ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை மையனவாதல் வேண்டும்.

நீதிவான் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கை

**46.** குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும், நீதிவானொருவர் முன்னர் முன்னதாக நிறுத்தப்பட்டவரான இச்சட்டத்தின் கீழான சந்தேகநபரொருவர் தொடர்பிலான புலனாய்வும் வழக்கு நடவடிக்கைகளும் முன்னதாக சந்தேகநபர் நிறுத்தப்பட்ட நேரத்தில் எந்த நீதிவான் நீதிமன்றத்தில் அத்தகைய நீதிவான் தலைமைதாங்கி இருந்தாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்தில் நடாத்தப்படுதல் வேண்டும்.

சந்தேகநபர் மனித நேயத்துடன் நடாத்தப்படுதல்

**47**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ், விடயத்துக்கேற்ப, தடுத்துவைக்கப்பட்ட அல்லது விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபரை தடுத்துவைக்கும் அல்லது விளக்கமறியலில் வைக்கும் இடம், மனிதநேயத்துடன் நடாத்தப்படுவதற்கு அவசியமான தேவைப்பாடுகளுடன் வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தடுத்துவைத்தல் அல்லது விளக்கமறியல் இடமானது சந்தேகநபரின் குடும்ப உறுப்பினர்களுக்கு அத்துடன் அத்தகைய தடுத்துவைத்தல் இடத்திற்கு பொறுப்பாகவுள்ள அல்லது சிறைச்சாலைக்கு பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்து பெறப்பட்ட முன் அனுமதியுடன் அவரது சட்டத்தரணிக்கு அணுகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தடுத்துவைக்கும் அல்லது விளக்கமறியலில் வைக்கும் இடமானது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட தேவைப்பாடுகளை உறுதிசெய்யாதிருக்கின்றது என தடுத்துவைக்கும் அல்லது விளக்கமறியல் இடத்தை பரிசோதித்த மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அல்லது நீதிவானுக்கு தோன்றுகின்றவிடத்து, பின்வருவோருக்கு அத்தகைய நிகழ்வு அறிவிக்கப்படுதல் வேண்டும்-

(அ) தடுத்துவைத்தல் விடயங்களில் பொலிசு பரிசோதகர் தலைமையதிபதிக்கும்; அல்லது

(ஆ) விளக்கமறியல் விடயங்களில் சிறைச்சலைகள் அத்தியட்ச கருக்கும்.

(3) மனிதநேயத்துடனான நடத்துகைக்கு அவசியமான அதியுச்சயினதாயும் இயன்றளவுக்கு சாத்தியமானவரை நடவடிக்கைகளை எடுத்தல் விடயத்துக்கேற்ப, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் அல்லது மறியற்சாலைகள் கண்காணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

*(4)* சந்தேகநபரொருவர் எங்கு கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ளாரோ அங்குள்ள பொலிசு நிலையத்துக்கு அல்லது தடுத்து வைத்தல் இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், அச்சந்தேக நபர்-

(அ) ஒரு மாதத்துக்கு விஞ்சுகின்ற காலப்பகுதியொன்றுக்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) விளக்கம் தொடங்கும் வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) விளக்கம் முடிவடையும்வரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளவிடத்து,

பின்வரும் தகவலை உள்ளடக்கி சந்தேகநபரின் கிட்டிய இரத்த உறவினருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அறிவித்தல் வழங்குதல் வேண்டும்:-

(i) எந்த ஏதுக்களின் மீது தடுத்துவைத்தல் அல்லது விளக்கமறியல் காலப்பகுதியின் நீடித்தலுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதோ அந்த ஏதுக்கள்;

(ii) சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டுள்ள நிலைமைகளில், நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற புலனாய்வுகளுக்குப் பங்கமின்றி, அப்புலனாய்வுகள் உரிய விழிப்புக்கவனத்துடனும் துரிதமாகவும் நடாத்தப் படுவதற்குத் தேவையான தகவல்கள்; அத்துடன்

(iii) சந்தேகநபர் விளக்கமறியல் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டுள்ள நிலைகளில், விடயத்துக்கேற்ப, ஏன் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல் உடனடியாக இடம்பெறமுடியாதுள்ளது அல்லது விளக்கத்தை உடனடியாகத் தொடங்கப்பட முடியாதுள்ளது அல்லது விளக்கத்தை துரிதமாக முடிக்கப்பட முடியாதுள்ளது என்பதற்கான காரணங்கள்.

பாகம் IV

## இச்சட்டத்தின்கீழ் குறித்தசில அலுவலர்களின் தத்துவங்களும் கடமைகளும்

இச்சட்டத்தின்கீழ் பொலிசு அலுவலர்களின் தத்துவங்கள்

**48.** இச்சட்டத்தின்கீழான தவறுகள் மற்றும் அதே செயற்கோவையின் போது புரியப்பட்டிருக்கக்கூடிய வேறேதேனும் எழுதிலான சட்டத்தின்கீழான தவறுகள் பற்றிய புலனாய்வுகளை நடாத்துகின்ற நோக்கத்துக்காக அல்லது அத்தகைய ஏதேனும் தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு, இச்சட்டத்தினகீழான தவறுகளைப் புலனாய்வு செய்வதற்கும் தடுப்பதற்கும் அவசியமாகவிருக்கக் கூடியவாறான அளவுக்கு, பொலிசுக் கட்டளைச்சட்டத்தினால் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தினால் அல்லது வேறேதேனும் இயைபான எழுத்திலான சட்டத்தினால் பொலிசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்துடன் சேர்த்து மேலதிகமாக இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட தத்துவங்கள் அவர்களுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழான தவறுகள் புரியப் படுதனைத் தடுப்பதற்குக் குறித்தசில அலுவலர்களுக்குள்ள கடமை

**49.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்கு, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அவசியமான வழிமுறைகளை எடுத்தல், ஒவ்வொரு பொலிசு அலுவலரினதும் ஆயுதந்தாங்கிய படையின் எவரேனும் உறுப்பினரினதும் மற்றும் கரையோரக் காவல் அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, அத்தகைய எவரேனும் அலுவலர் அத்தகைய வழிமுறைகளை —

(அ) நல்லெண்ணத்துடன்;

(ஆ) புரியப்பட்டதாகச் சார்த்தப்பட்ட தவறின் புரிகையினால் விளைவிக்கப்படக்கூடிய தீங்கின் விகிதாசாரமாக;

(இ) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கான வேறெல்லா வழிவகைகளும் பயனற்றனவென எண்பிக்கப்பட்டுள்ளவிடத்து மட்டும்; அத்துடன்

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அல்லது இச்சட்டத்தின் கீழான தவறுகளைப் புரிந்துள்ள ஆட்களை விசாரணைக்காகப் பற்றும் நோக்கத்துக்காக அத்தகைய வழிமுறைகள் அவசியமாக விருக்கக்கூடிய அளவுவரை மட்டும்,

எடுக்கலாம்.

(3) அத்தகைய எவரேனும் அலுவலர், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்துக்குட்பட தனிப்பட்ட பாதுகாப்பைப் பிரயோகிப்பதைத் தவிர, விஞ்சிய வலோத்காரத்தைப் பயன்படுத்துதலாகாது.

*இலங்கைப் பொலிசாரின் விசேடித்த பயங்கரவாத எதிர்ப்பு முகவராண்மை*

**50.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, இலங்கைப் பொலிசாரின் (இதனகத்துப்பின்னர் "விசேடித்த முகவராண்மை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) விசேடித்த பயங்கரவாதத்திற்கெதிரான முகவராண்மையைப் பெயர்குறித்துத் தாபித்தல் வேண்டுமென்பதுடன், அது பயங்காரவாதத்தைத் தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறுபுரியப்படுவதனைப் புலனாய்வு செய்வதற்குமான பொறுப்பானது குறித்தளிக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டமைபற்றிய ஏதேனும் புலனாய்வை அல்லது பகுதியளவில் நடாத்தப்பட்ட ஏதேனும் புலனாய்வை, இலங்கைப் பொலிசாரின் வேறேதேனும் பிரிவுக்கு அல்லது கூறுக்கு அல்லது ஏதேனும் பொலிசு நிலையத்துக்குக் குறித்தளிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) பின்வருவன விசேடித்த முகவராண்மை யின் கடமையாதல் வேண்டும் —

(அ) மத்திய தரவுத்தளத்தைப் பேணுதல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறுகள் புரியப்பட்டமை தொடர்பான புள்ளிவிபரங்களைப் பேணுதல்;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறுகளைப் புரிகின்றவரான ஆட்களைப் கைதுசெய்வதற்கான புலனாய்வுகளையும், அவர்கள் தொடர்பில் அது தொடர்பான வழக்குநடவடிக்கைகளையும் நடாத்துதல்;

(ஈ) பயங்காரவாதத்தின் மூலம் எதிர்நோக்கப்பட்ட அச்சுறுத்தல் நிலைமைகளை மதிப்பீடு செய்தலும், பொதுமக்களுக்கு எச்சரிக்கைகளை வழங்குதலும்; அத்துடன்

(உ) பயங்காரவாதம் பற்றிய ஆராய்ச்சியை நடாத்துதலும், புலனாய்வுத் தொழினுட்பங்களையும் செயல்நுணுக்கங்களையும், மிகச்சிறந்த செயல்முறைகளையும் நியமங்களையும் அபிவிருத்திசெய்தலும்.

**புலனாய்வாளர்களின் விசேட குழுக்களை நியமித்தல்**

**51.** (1) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறு புரியப்பட்டிருக்குமிடத்து அல்லது இச்சட்டத்தின்கீழ் தவறொன்று புரியப்பட்டமை பற்றிய ஏதேனும் தகவலை அல்லது தவறொன்றைப் புரிவதற்கு தயார்படுத்துகின்றமை பற்றிய ஏதேனும் தகவலைப் பெற்றுக்கொண்டதன்மேல், பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி அத்தகைய தவறைப் புலனாய்வுசெய்வதற்கு அல்லது தவறை தடுப்பதற்கு அவசியமான வழிமுறைகளை எடுப்பதற்கு பின்வரும் ஆட்களைக் உள்ளடக்கிய (இதனகத்துப்பின்னர், "புலனாய்வுக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) புலனாய்வாளர்களின் விசேட குழுவொன்றை நியமிக்கலாம்:-

(அ) புலனாய்வுக் குழுவின் தலைவராக இருக்க வேண்டியவரான பெயர் மூலமும் பதவிவரிசை மூலமும் பெயர் குறிப்பிடப்பட்ட பொலிசு அலுவலர் ஒருவர்;

(ஆ) குற்றவியல் புலனாய்வாளர்களாக இருக்க வேண்டியவரான பெயர் மூலமும், பதவி வரிசை மூலமும் பெயர் குறிப்பிடப்பட்ட வேறு பொலிசு அலுவலர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(இ) சட்ட நிபுணர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(ஈ) குற்றப் பரிசோதனை அலுவலர்களின் அத்தகைய எண்ணிக்கையினர்;

(உ) தடயவியல்சார் மருத்துவ நிபுணர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(ஊ) தடயவியல்சார் உளவியலாளர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(எ) குருதி உளனீரியல், மரபியல், எறிவியல் வெடிபொருளும், வேதியலும் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் உட்பட தடயவியல்சார் விஞ்ஞானிகளின் அத்தகைய எண் ணிக்கை;

(ஏ) விரல் அடையாள நிபுணர்களின் அத்தகைய எண் ணிக்கை;

(ஐ) கையெழுத்திலும் சந்தேகப்படும் ஆவணங்களிலுமான நிபுணர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(ஒ) கணணி மற்றும் தன்னியக்க வலைப்பின்னல் நிபுணர் களின் அத்தகைய எண்ணிக்கை;

(ஓ) தடயவியல்சார் கணக்காய்வாளர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(ஔ) ஒப்புமையாக்கம், இலக்கமுறைத் தொழில்நுட்பம் மற்றும் செல்லிட மற்றும் செய்மதித் தொடர்பாடல் தொழில் நுட்பத்திலுமான நிபுணர்களின் எண்ணிக்கை;

(க) புகைப்படவியலாளர் மற்றும் ஒளிப்படவியலாளர்களின் அத்தகைய எண்ணிக்கை; அத்துடன்

(ங) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதியானவர் அவசிய மானதெனக் கருதக்கூடியதான வேறு நிபுணர்களின் அத்தகைய எண்ணிக்கை;

(2) (அ) பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அமைத்துருவாக்கப்பட்ட புலனாய்வுக் குழுவிற்கான பொலிசு நிலையம் ஒன்றைப் பெயர் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலர் இச்சட்டத்தின் கீழும் எழுத்திலான வேறு சட்டத்தின் கீழும் அத்தகைய அலுவலருக்கு குறித்தளிக்கப்பட பொதுவான கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு மேலதிகமாக புலனாய்வுக் குழுவிற்கு உதவுதலும் வேண்டும்.

(3) பொலிசு அலுவலர்கள் அல்லாத புலனாய்வுக்குழுவின் உறுப்பினர்கள் அத்தகைய புலனாய்வுக் குழுவிற்கு குறித்தளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆதரவுக் குழுக்களை அமைத்துருவாக்கல்

**52.** (1) புலனாய்வுக் குழுவின் உறுப்பினர் ஒருவரான பிரதி பொலிசு பரிசோதகர் தலைமையதிபதி பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவர், இச்சட்டத்தின் கீழ் தவறொன்று புரியப்பட்டுள்ள, ஏதேனும் குற்றச்செயல் நிகழ்ந்த இடத்தில் பின்வரும் கடமைகளை ஆற்றுவதற்கென, இயைபான அதிகாரிகளின் ஒருப்பாட்டுடன், ஏதேனும் ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள், மருத்துவர் கள் மற்றும் வேறு சுகாதார கவனிப்பு வேலையாட்கள், அவசர நிவாரண சேவை வழங்குநர்கள், பகிரங்க சேவையாளர்கள் மற்றும் அவசியமான வேறு ஆட்கள் ஆகியோரைக் கொண்ட ஆதரவுக் குழுக்களை அமைத்துருவாக்கலாம்-

(அ) குற்றச்செயல் நிகழ்ந்த இடத்தில் இருந்து ஏதேனும் தவறினால் பாதிக்கப்பட்டவர்களையும் வேறு ஆட்களையும் காப்பாற்றுதலும் வெளியேற்றுதலும்;

(ஆ) அவசர மருத்துவ சிகிச்சைகளை வழங்குதல்;

(இ) இறந்த உடல்களை மீட்டல்;

(ஈ) தீயை அணைத்தல்;

(உ) வெடிபொருட்கள் மற்றும் உயிராபத்தான மற்றும் பயங்கரமான பதார்த்தங்களை செயலிழக்க வைத்தல்;

(ஊ) உயிராபத்தான மற்றும் பயங்கரமான பதார்த்தங்களை செயலிழக்கச் செய்யும் பொருட்டு கட்டுப்படுத்தப்பட்ட வெடிபொருட்களை நிறைவேற்றுதல்;

(எ) சிதைவுகளை அகற்றுதல்;

(ஏ) அணுகுவழிகளை உருவாக்குதல்; அத்துடன்

(ஐ) அவசர, மனிதாபிமான மற்றும் பாதுகாப்பு தேவைப்பாடுகளை மற்றும் சேவைகளை வழங்குதல்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளினது உதவி நாடப்படுகின்றதோ அந்த ஆள் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய உதவியை வழங்குவது அவ்வாளின் கடமையாதல் வேண்டும்.

*புலனாய்வுகளுக்கு வசதியளிப்பதற்கான தத்துவங்கள்*

**53.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் நியதிகளின்படி புலனாய்வு ஒன்றை நடாத்துவதற்கு பொலிசு நிலையத்திற்கு பொறுப்பாகவுள்ள அலுவலரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரான உப பொலிசு பரிசோதகர் ஒருவரின பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலர் ஒருவர் பின்வருவனவற்றுக்கு, இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்ததாகச் சந்தேகிக்கப்படும் எவரேனும் ஆளை அல்லது அத்தகைய புலனாய்வைக் கொண்டுநடாத்த எந்த எவரேனும் ஆளின் சமூகம் அல்லது உதவி தேவைப்படுகின்றதோ அந்த ஆளை தேவைப்படுத்தத் தத்துவமுடையதாதல் வேண்டும்–

(அ) நேர்காணல் ஒன்றிற்கு சமூகமாயிருப்பதற்கு;

(ஆ) அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பதற்கு;

(இ) தகவலை வழங்குவதற்கு ;

(ஈ) கூற்றுக்களை வழங்குவதற்கு;

(உ) சத்தியக்கடதாசி அல்லது சத்தியத்தின் மீதான கூற்றுக்களை வழங்குவதற்கு;

ஆயினும் சத்தியக்கடதாசி அல்லது சத்தியத்தின் மீதான கூற்று நீதிவான் ஒருவரின் கட்டளை மீது மட்டும் பெறப்படுதல் வேண்டும்;

(ஊ) அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கக்கூடியதான ஏதேனும் ஆவணம் அல்லது பருப்பொருள் வழங்குதல்;

(எ) புலனாய்வை நடாத்துவதற்கு உதவுதல்;

(ஏ) ஆள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்காக சந்தேகிக்கப்படுகின்றவிடத்து, அவ்வாளின் பால் நிலைசார் கூர்உணர்வு மற்றும் அந்தரங்கத்தன்மையை கருத்திற்கொண்டு பௌதிக உடல் பரிசோதனை ஒன்றுக்கென தானே வருகை தருதல்; அத்துடன்

(ஐ) ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்தமைக்காக சந்தேதிக்கப்படுகின்றவிடத்து, புகைப்படங்களை எடுப்பதற்காக, ஒளிப்படங்களை பதிவுசெய்வதற்காக மற்றும் கைவிரல், உள்ளங்கை மற்றும் பாத அடையாளங்களை எடுப்பதற்கு தானே வருகை தருதல்;

(2) ஆளெவரும், தவறொன்றைப் புரிவதில் தனக்குத்தானே கூற்றொன்றை ஆக்குவதற்கு அல்லது சம்மந்தப்படுத்துகின்ற அல்லது குற்றஞ்சாட்டுகின்ற சத்தியக் கடதாசி ஒன்றை காண்பிப்பதற்கு பிணிக்கப்படுதலாகாது.

(3) நேர்காணல் செய்யப்பட வேண்டிய எவரேனும் ஆளுக்கு எவருடைய கூற்று பதிவு செய்யப்படவேண்டியுள்ளதோ அவருக்கு:-

(அ) அத்தகைய நேர்காணலுக்கு முன்னதாக சட்ட மதியுரை பெற்றுக்கொள்ள அவருடைய தெரிவில் சட்டத்தரணியொருவருக்கான அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கான அவரது உரிமை அறிவிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆளினால் விளங்கிக்கொள்ளப்பட்ட மொழி ஒன்றில் நேர்காணல் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் கூற்றானது பதிவுசெய்யப்படுதலும் வேண்டும், அத்துடன் அவசியமானவிடத்து பொருள் கோடல் சேவைகள் பெறப்படுதலும் வேண்டும்:

ஆயினும், பொருள்கோடல் சேவைகள் பெறப்படுகின்ற விடத்து, நேர்காணல் ஆனது மொழிபெயர்ப்புடன் பதிவுசெய்யப்படுதலும் வேண்டுமென்பதுடன் எதிர்கால சரிபார்த்தலுக்காக எழுதப்பட்டு பேணப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழான ஏற்பாடுகளின் கீழ் செயலாற்றுகின்ற பொலிசு அலுவலர் ஒருவர் இச்சட்டத்தின் கீழ் நேர்காணல் செய்யப்படுவதற்கு முன்னர் ஆளொருவருக்கு அவரது உரிமைகளை அறிவித்தல் வேண்டும்.

(5) சாத்தியமான இடங்களிலெல்லாம் நேர்காணல் ஆனது செவிப்புல-கட்புல வடிவில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

ஒரு கலத்தை அல்லது வாகனத்தை நிறுத்துவதற்கு பலத்தை பாவித்தல்

**54.** இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வாகனம், கலம், புகையிரதம் அல்லது வானூர்தி ஆகியவற்றை நிறுத்துவதற்கான அவரது அறிவுறுத்தல் பொலிசு அலுவலரினால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஏதேனும் அத்தகைய வாகனம், கலம், புகையிரதம் அல்லது வானூர்திக்கு பொறுப்பாகவுள்ள ஆள் மதிக்காதவிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அல்லது ஆள் அத்தகைய வாகனத்தை நிறுத்துவதற்கு அவசியமானதாக இருக்கக்கூடிய வாறான அத்தகைய பலாத்காரத்தை பயன்படுத்தலாம்:

ஆயினும் எவ்வாறாயினும், வாகனத்தை, கலத்தை, புகையிரதத்தை அல்லது வானூர்தியை நிறுத்துகின்ற வேறு எல்லா வழிகளும் பயனுறுதியற்றதென எண்பிக்கப்படுமிடத்து, ஏதேனும் அத்தகைய பலாத்காரத்தை பயன்படுத்தப்படலாம்:

ஆயினும் மேலும், அத்தகைய எவரேனும் அலுவலர் தண்டனைச் சட்டகோவையின் கருத்தெல்லைக்குள் தனிப்பட்ட பாதுகாப்பை பிரயோகிப்பதில் தவிர விஞ்சிய பலாத்காரத்தை பயன்படுத்த லாகாது.

**ஏதேனும் வாகனம், கலம் முதலியவற்றின் கட்டுப்பாட்டை பொறுப்பெடுத்தல்**

**55.** (1) பொலிசு அலுவலரொருவர் இச்சட்டத்தின்கீழ் புலனாய்வு ஒன்றை நடாத்தும் நோக்கத்திற்காக அல்லது தவறொன்றை புரிவதை தடுக்கும் நோக்கத்திற்காக ஏதேனும் வாகனத்தின், கலத்தின், புகையிரதத்தின், வானூர்தியின் அல்லது ஆளில்லா வான்வழி வாகனத்தின் கட்டுப்பாட்டைப் பொறுப்பேற்பதற்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டுப்பாட்டை பொறுப்பெடுத்தல் பற்றி நீதிவானொருவருக்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**கலம், வானூர்தி முதலியவற்றின் கடற்பயணம் புறப்பட்டுச் செல்லுகை என்பவற்றை இடை நிறுத்துதலும் தாமதிக்கச் செய்தலும்**

**56.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிவரிசைக்குக் குறையாத பதவியை வகிக்கின்ற பொலிசு அலுவலரொருவர் -

(அ) ஏதேனும் வானூர்தியின் புறப்பட்டுச் செல்லுகையை அல்லது ஏதேனும் கலத்தின் கடற்பயணத்தை இடை நிறுத்துமாறு அல்லது தாமதிக்கச் செய்யுமாறு; அல்லது

(ஆ) ஏதேனும் அத்தகைய வானூர்தியை பெயர்குறிக்கப்பட்ட விமான நிலையமொன்றில் அல்லது ஏதேனும் வேறு தோதான அமைவிடத்தில் தரையிறக்குமாறு; அல்லது

(இ) ஏதேனும் கலத்தை ஏதேனும் கப்பற்றுறை அல்லது துறைமுகம் அல்லது வேறு தோதான அமைவிடத்துக்குக் கொண்டுவருமாறு,

பணிப்புக்களை வழங்கலாம்.

(2) வான்பாதுகாப்பு அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, ஏதேனும் வானூர்தி தொடர்பில் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் பணிப்புப் பற்றி 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட குடியியல் வான்செலவு பணிப்பாளர் தலைமை யதிபதிக்கும் இலங்கை வான்படை ஏவுநருக்கும் முன்கூட்டியே அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) பணிப்பானது இலங்கை கடற்படையின் கலமொன்று தொடர்பில் வழங்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய பணிப்புப்பற்றிய முன்கூட்டிய அறிவித்தல் இலங்கைக் கடற்படை ஏவுநருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

*மருத்துவ முறையிலான தடயவியல்சார் மருத்துவப் பரிசோதனைகளைச் செய்வித்தல்*

**57.** (1) பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவர், கட்டுக்காப்பிலுள்ள சந்தேக நபரொருவரை அல்லது தவறொன்றினால் பலிக்குட்படுத்தப்பட்ட ஒருவரை பரிசோதனைக்காக சட்ட மருத்துவ அலுவலருக்கு நேரடியாக ஒப்படைப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பரிசோதனை பற்றிய அறிக்கை, சந்தேகநபர் எந்நீதிவானுக்கு முன்னர் நிறுத்தப்பட்டுள்ளாரோ அல்லது நிறுத்தப்படவுள்ளாரோ அந்நீதிவானுக்கான பிரதியொன்றுடன், இயைபான பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு மருத்துவ அலுவலரினால் நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*விடயங்களை அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அல்லது வேறு நிபுணருக்கு நேரடியாகச் சமர்ப்பித்தல்*

**58.** (1) பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதுடன் சம்பந்தப்பட்டதாக இருக்குமென அவர் நியாயமானமுறையில் நம்புகின்ற ஏதேனும் ஆவணத்தை பருப்பொருளை அல்லது பொருளை பரிசோதனைக்கும் பகுப்பாய்வுக்குமென அரசாங்கப் பகுப்பாய்வாளர் அல்லது வேறு எவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணருக்கு நேரடியாகச் சமர்ப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) பரிசோதனை பற்றிய அறிக்கை, சந்தேகநபர் எந்த நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்டுள்ளாரோ அல்லது நிறுத்தப்படவுள்ளாரோ அந்நீதிவானுக்கு பிரதியொன்றுடன் அரசாங்கப் பகுப்பாய்வாளரினால் அல்லது வேறு நிபுணரினால் இயைபான பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கு நேரடியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*புலனாய்வுக்காக விடயப் பொருளைக் கைமாற்றுதல்*

**59.** (1) இச்சட்டத்தின் கீழான தவறொன்று மீது புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலிசு அலுவலரொருவர், வேறேதேனும் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையின் புலனாய்வுத்தகுதியின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற தவறொன்று புரியப்பட்டுள்ள

தென்பதைச் சுட்டிக்காட்டுகின்ற விடயப்பொருள் இருப்பதாகக் கருதினால், அத்தகைய வேறேதேனும் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைக்கு புலனாய்வுக்கென அத்தகைய விடயப்பொருளைச் சமர்ப்பித்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சட்ட வலுவுறுத்தல் முகவராண்மையானது, வேறேதேனும் இறைமையுள்ள நாட்டின் முகவராண்மையொன்றையும் உள்ளடக்கலாம்.

இலங்கைக்கு வெளியிலான புலனாய்வுகள்

**60.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடனும் இயைபான வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட முன்னங்கீகாரத்துடனும், இச்சட்டத்தின் நியதிகளின்படி, இலங்கைக்கு வெளியே புலனாய்வொன்றை நடாத்துதல் பொலிசு அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) இயைபான வெளிநாட்டிலிருந்தும் இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் பெறப்பட்ட முன்னங்கீகாரத்துடன், வேறேதேனும் நாட்டின் குற்றவியல் புலனாய்வு முகவராண்மையுடன் இணைந்து, இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் புரிகை பற்றிய கூட்டுப் புலனாய்வொன்றைப் பொறுப்பேற்று நிறைவேற்றுதல் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

பொலிசார் பொதுமக்கள் பாதுகாப்புக் கான பணிப்புரைகளை வழங்கலாம்

**61.** (1) சிரேட்ட பொலிசுக் அத்தியட்சகர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்படுவதற்கான சாத்தியமுள்ளதென்னும் தகவலைப் பெறுகின்றவிடத்து, தெளிவானதும் தற்போதைய ஆபத்து உள்ளதெனவும் அத்தவறுடன் இணைந்துள்ள தீங்கிலிருந்து அல்லது மென்மேலான தீங்கிலிருந்து ஆட்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக அத்தகைய பணிப்பு அவசயமாகவுள்ளதென அவர் அபிப்பிராயப்படின், அவர், பின்வரும் பணிப்புரைகளுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பொதுமக்களுக்கு வழங்கலாம்:-

(அ) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பினுள் அல்லது வளவுகளினுள் பிரவேசிக்காதிருத்தல்;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றை அல்லது வளவுகளை விட்டுச்செல்லல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பொன்றை அல்லது வளவுகளை விட்டுச்செல்லாது அத்தகைய இடப்பரப்பினுள் அல்லது வளவுகளினுள் தொடர்ந்திருத்தல்;

(ஈ) ஏதேனும் வீதியில் பிரயாணஞ்செய்யாதிருத்தல்;

(உ) ஏதனையும் இடம்பெயர்க்காதிருத்தல் அல்லது எவருக்கும் போக்குவரத்தை வழங்காதிருத்தல்;

(ஊ) குறித்துரைக்கப்பட்ட பொதுப்போக்குவரத்து முறைமையொன்றின் தொழிற்பாட்டை இடைநிறுத்துதல்;

(எ) ஏதேனும் அமைவிடத்திலிருந்து குறித்தவொரு புறப்பொருளை, வாகனத்தை, கலத்தை அல்லது வானூர்தியை நீக்குதல்;

(ஏ) வாகனம், கலம், கப்பல் அல்லது வானூர்தியொன்று அதன் தற்போதைய நிலையில் தொடர்ந்திருப்பதைத் தேவைப்படுத்துதல்;

(ஐ) மேலதிக அறிவித்தல் வழங்கப்படும்வரை, கலம் அல்லது கப்பலொன்று குறித்துரைக்கப்பட்டதோர் இடப்பரப்பினுள் கடற்பயணத்தைச் செய்யாதிருத்தல்;

(ஒ) வானூர்தியொன்று குறித்துரைக்கப்பட்ட வான்வெளிக்கு வெளியே அல்லது அதனுள் பறக்காதிருத்தல்;

(ஓ) ஏதேனும் குறித்த அமைவிடத்தில் ஒன்று கூடாதிருத்தல்;

(ஔ) குறித்தவொரு கூட்டம், பேரணி அல்லது ஊர்வலத்தை நடாத்தாதிருத்தல்; அத்துடன்

(க) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டில் ஈடுபடாதிருத்தல்.

ஆயின் எவ்வாறாயினும், (அ) இலிருந்து (க) என்னும் பந்திகளின்கீழான பணிப்புரை எதுவும் நீதிவானொருவரிடமிருந்து பெறப்பட்ட முன்னங்கீகாரமின்றி வழங்கப்படுதலாகாது; அவர், அத்தகைய பணிப்புரையின் வழங்குகைக்கு முன்னர் அதனை வழங்குவதற்கான அவசியம் பற்றித் தன்னைத் திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய நிபந்தனைகளுக் கிணங்க அத்தகைய பணிப்புரையை வழங்குவதற்கான கட்டளையொன்றை ஆக்கலாம்.

(2) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புரை பற்றி, அத்தகைய பணிப்புரையை வழங்கிய இயைபான அலுவலரினால் அல்லது (அ) இலிருந்து (க) என்னும் பந்திகளின் கீழ் ஏதேனும் அத்தகைய பணிப்புரைக்கான முன்னங்கீகாரத்தை அளித்த நீதிவானினால் உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய ஏதேனும் பணிப்புரை, அவசரகால நிலைமை களையும் அப்பணிப்புரையினால் பாதிக்கப்படக்கூடியவாறான ஆட்களின் மனிதாபிமானத் தேவைப்பாடுகளையும் எதிர் கொள்வதற்காக, அத்தகைய பணிப்புரைக்கான விதிவிலக்குகளை உள்ளடக்கலாம்.

(4) அத்தகைய ஏதேனும் பணிப்புரை வர்த்தமானியில் வெளியிடப்பட்டு தோதான வேறு வழிவகைகளினூடாக இயைபான இடப்பரப்பில் பரந்தளவிலான பிரசித்தம் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) (அ) அத்தகைய ஏதேனும் பணிப்புரையின் தொழிற்படு காலப்பகுதி, ஒரு தடவையில் தொடர்ச்சியாக இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றையும் அத்துடன் எழுபத்திரெண்டு மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட மொத்தக் காலப்பகுதியொன்றையும் விஞ்சுதலாகாது.

(ஆ) அத்தகைய ஏதேனும் பணிப்புரையின் தொழிற்படு காலப்பகுதி இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்கு மேல் நீடிக்கப்படத் தேவையுள்ளவிடத்து, அத்தகைய நீடிக்கப்பட்ட

காலப்பகுதியானது, அப்பணிப்புரையின் ஆரம்ப தொழிற்படு காலப்பகுதி முடிவடைந்த பின்னர், இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குக் குறையாத இடைவேளையொன்றின் பின் தொடங்குதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழான ஏதேனும் பணிப்புரைக்குப் பயன் கொடுப்பதற்கென, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, ஏதேனும் ஆயுதந்தாங்கிய படை உறுப்பினர்களின் உதவியை, இயைபான ஆயுதந்தாங்கிய படையின் ஏவுநரிடமிருந்து பெறப்பட்ட முன்னங்கீகாரத்துடன், பெற்றுக்கொள்ளலாம்.

(7) அத்தகைய பணிப்புரைக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அத்தகைய இடப்பரப்பைச் சுற்றித் தடைக்கயிறுடுதல் பொலிசு அலுவலர்களுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(8) அத்தகைய பணிப்புரையின் தொழிற்படுகாலப்பகுதியின் போதும் அத்துடன் இரு தொழிற்படுகாலப்பகுதிகளுக்கிடையேயான இருபத்துநான்கு மணித்தியால இடைவேளையொன்றின் போதும், அது சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலருக்கு அல்லது அது சார்பில் அதிகாரமளிகப்பட்ட ஏதேனும் ஆயுதந்தாங்கிய படையின் உறுப்பினரொவருக்குப் பின்வருவன சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) அத்தகைய பணிப்புரை பயனுள்ளதாகவிருக்கின்ற இடப்பரப்பினுள் காணப்படுகின்ற எவரேனுமாளை தடுத்துநிறுத்துதல், விசாரித்தல் மற்றும் தேடுகையிடுதல்;

(ஆ) எவையேனும் வளவுகளினுள் பிரவேசித்தலும் தேடுகையிடுதலும்; அல்லது

(இ) அத்தகைய பணிப்புரை பயனுள்ளதாகவிருக்கின்ற இடப்பரப்பினுள் பிரவேசிப்பதற்கு எத்தனிக்கக்கூடிய அல்லது அதில் தொடர்ந்திருக்கக்கூடிய எவரேனுமாளைத் தடுத்துநிறுத்தி வினாவுவதற்கும் அத்துடன் அத்தகைய ஆளை அல்லது அத்தகைய இடப்பரப்பினுள் எடுத்து வரப்படக்கூடியவாறான அல்லது அங்கிருந்து வெளியே எடுத்துச்செல்லப்படக்கூடியவாறான அவரின் உரிமைப் பொருட்களையும் உடைமைகளையும் தேடுகையிடுதலும்.

(9) இப்பிரிவின் நியதிகளின்படி நடாத்தப்படுகின்ற ஏதேனும் தேடுகையிடுதலானது, தேடுகையிடப்படுகின்ற ஆளின் கௌரவத்துக்கும் அந்தரங்கத்தன்மைக்கும் முறையான மதிப்புடன் பால்நிலைசார் கூர் உணர்வு வழிமுறையொன்றில் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பதுடன், அதேவேளை, பெண்ணொருவரைத் தேடுகையிடுதலானது பெண் அலுவலரொருவரினால் மாத்திரம் நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.

(10) பணிப்புரைக்கு முரணாகச் செயற்படக்கூடிய எவரேனுமாளைத் தடைசெய்வதும் தேடுகையிடுதலும்கூட, பொலிசு அலுவலரொருவருக்கு அல்லது அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினரொருவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(11) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புரையொன்றுக்கு முரணாக வேண்டுமென்றே செயற்படுகின்ற எவரேனுமாள், தவறொனறைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவரினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனையினால் அல்லது ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்தினால் அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(12) இப்பிரிவின்கீழான தவறொன்று, அத்தகைய தவறைப் புரிகின்றமை தவறாளரைத் தவிர வேறெவரேனுமாளின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாதிருப்பின், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் வருகின்ற பிடியாணையின்றிக் கைதுசெய்யவியலாத் தவறொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

பாகம் V

## புலனாய்வுளுக்கான விடயப்பொருள்

வங்கிகள், நிதிசார் நிறுவனங்கள் முதலிய வற்றிலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

**62.** (1) பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத பொலிசு அலுவலரொருவர், 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தினதும், 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டத்தினதும் மற்றும் 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய அலுவலருக்குப் பின்வரும் தகவல்களையும் விடயப்பொருளையும் வழங்குமாறு ஏதேனும் வங்கியை, வங்கித் தொழில்சாரா நிதிசார் நிறுவனத்தை அல்லது பெயர்குறிக்கப்பட்ட நிதிசாரா தொழிலை தேவைப் படுத்துவதற்கு நீதிவானொருவரிடமிருந்தான கட்டளையொன்றுக்கு விண்ணப்பிக்க உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய வங்கி, நிறுவனம் அல்லது தொழிலினால் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் நிதிசார் சேவையுடன் தொடர்புடைய தகவல்கள்;

(ஆ) எவரேனுமாளினால் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் நிதிசார் கொடுக்கல்வாங்கல் பற்றிய விபரங்கள்;

(இ) வங்கிக்கணக்குகள், வைப்புக்கள், அனுப்புதொகைகள் மற்றும் மீளப்பெறுதல்கள் என்பவற்றுடனும், அத்துடன் அத்தகைய ஏதேனும் வங்கி, நிறுவனம் அல்லது தொழிலினால் வழங்கப்பட்ட நிதிசார் சேவைகளுடனும் தொடர்புடைய விபரங்கள்;

(ஈ) எவரேனுமாளினால் நிதிசார் சேவைகள் பெற்றுக் கொள்ளப்படுதல் தொடர்பிலான விபரங்கள்;

(உ) ஏதேனும் கணக்கைப்பற்றிய சான்றுப்படுத்தப்பட்ட கூற்று அல்லது ஏதேனும் கணக்குடன் அல்லது கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய வேறு தகவல்கள்.

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகையில் எவரேனுமாளுக்கு எதிரான சந்தேகத்துக்கான நியாயமான ஏதுக்கள் காணப்படின் மாத்திரமே, அத்தகைய பொலிசு அலுவலர், இப்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய நீதிவான், அத்தகைய பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், புலனாய்வொன்று நடாத்தப்படுதல் நியாயமானதும் அவசியமானதுமெனத் தோன்றுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(3) நீதிவான், விண்ணப்பம் தொடர்பில் அந்தரங்கத் தன்மையைப் பேணவேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிசு அலுவலரினால் வேண்டுகோள்விடுக்கப்படின், அதுதொடர்பிலான வழக்குநடவடிக்கைகள் இரகசியமாக நடைபெறுதலும் வேண்டும்.

சேவை வழங்குநர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்

**63.** (1) பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், எவரேனும் தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள் அல்லது எண்ணிமமுறையிலான சேவை அல்லது தரவுச்சேவை வழங்குநர் பின்வரும் தகவல்களை வழங்குவதனைத் தேவைப்படுத்தி நீதிவானொருவரிடமிருந்தான கட்டளையொன்றுக்கு விண்ணப்பிக்க உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) அத்தகைய சேவைவழங்குநரால் எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படுகின்ற சேவைகள் தொடர்பிலான தகவல்கள்;

(ஆ) எவ்வாளுக்கு அத்தகைய சேவைகள் கிடைக்கக்கூடியவையாகச் செய்யப்பட்டுள்ளதோ அவ்வாளினால் அனுபவிக்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான தகவல்கள்;

(இ) அத்தகைய சேவைவழங்குநரால் களஞ்சியப்படுத்தப்பட, ஆவணக்காப்பகப்படுத்தப்பட அல்லது வேறுவகையில் வைத்திருக்கப்படக் கூடியவாறான ஏதேனும் தகவல், தரவு அல்லது ஆவணம் அல்லது பதிவேடு; அத்துடன்

(ஈ) அத்தகைய சேவைவழங்குநரால் வழங்கப்பட்ட சேவைக்கூடாக ஏதேனும் சாதனத்துக்கு அல்லது சாதனத் திலிருந்து தரவு அல்லது தகவல் தரவேற்றப்படுதல் அல்லது தரவிறக்கப்படுதல் தொடர்பிலான தகவல்கள்:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகையில் எவரேனுமாளுக்கு எதிரான சந்தேகத்துக்கான நியாயமான ஏதுக்கள் காணப்படின் மாத்திரமே, அத்தகைய பொலிசு அலுவலர், இப்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய நீதிவான், அத்தகைய பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், புலனாய்வொன்று நடாத்தப்படுதல் நியாயமானதும் அவசியமானதுமெனத் தோன்றுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(3) நீதிவான், விண்ணப்பம் தொடர்பில் அந்தரங்கத் தன்மையைப் பேணவேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிசு அலுவலரினால் வேண்டுகோள்விடுக்கப்படின், அதுதொடர்பிலான வழக்குநடவடிக்கைகள் இரகசியமாக நடைபெறுதலும் வேண்டும்.

*அரசாங்க அல்லது நியதிச்சட்ட நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்*

**64.** (1) பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் மீது புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, பின்வரும் அலுவலர்களிடமிருந்து ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தைத் தேவைப்படுத்துவதற்கு நீதிவானொருவரிடமிருந்தான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிக்க உரித்துடையவராதல் வேண்டும்:-

(அ) ஏதேனும் அமைச்சுக்கான செயலாளர்;

(ஆ) இலங்கைப் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம்;

(இ) உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி;

(ஈ) இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்;

(உ) வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவர்;

(ஊ) நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பாளர்;

(எ) இலங்கைப் பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஏ) சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ஐ) குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி;

(ஒ) ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி;

(ஓ) இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி;

(ஔ) கம்பெனிகள் பதிவாளர்;

(க) காணி ஆணையாளர் தலைமையதிபதி;

(ங) இலங்கை தேசிய புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ச) பதிவாளர் தலைமையதிபதி;

(ஞ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி;

(ட) தொலைத்தொடர்பாடல்கள் பணிப்பாளர் தலைமையதிபதி;

(ண) ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தின், நியதிச் சட்டக் குழுவின் அல்லது வேறு அரசாங்க நிறுவனத்தின் தலைவரொருவர்; அல்லது

(த) மாகாண சபையொன்றின் தவிசாளர் அல்லது உள்ளூரதி காரசபையொன்றின் தவிசாளர் அல்லது விசேட ஆணையாளரொருவர்.

(2) அத்தகைய நீதிவான், அத்தகைய பொலிசு அலுவலரினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், புலனாய்வொன்று நடாத்தப்படுதல் நியாயமானதும் அவசியமானதுமெனத் தோன்றுகின்றவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி கட்டளையொன்றை ஆக்குதலும் வேண்டும்.

(3) நீதிவான், விண்ணப்பம் தொடர்பில் அந்தரங்கத்தன்மையைப் பேணவேண்டுமென்பதுடன், அத்தகைய பொலிசு அலுவலரினால் வேண்டுகோள்விடுக்கப்படின், அது தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகள் இரகசியமாக நடைபெறுதலும் வேண்டும்.

## பாகம் VI

## நீதிவான் புலனாய்வுகளை வசதிப்படுத்துவதற்கான கட்டளைகளை ஆக்குதல்

பொறுப்பாகவுள்ள பொலிசு அலுவலரின் விண்ணப்பத்தின் மீது நீதிவான் கட்டளைகளை ஆக்குதல்

**65.** (1) பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசு அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழான தவறொன்றின் மீது புலனாய்வொன்றை நடாத்தும் நோக்கத்துக்காக, பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசு அலுவலரொருவர், அத்தகைய புலனாய்வை வசதிப்படுத்துவதற்குப் பின்வரும் கட்டளைகளை ஆக்குவதற்காக நீதிவானொருவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்-

(அ) சந்தேகநபரொருவர் இலங்கைக்கு வெளியே பிரயாணஞ் செய்வதிலிருந்து அவரைத் தடுத்தல்;

(ஆ) ஆளொருவரின் இரத்தத்தின், தலைமுடியின் மாதிரிகள், நீர்மம் மற்றும் கைவிரலடையாளங்கள் உட்பட உயிரியளவியல்களை எடுத்தல்;

(இ) அடையாள அணிவகுப்புக்களை நடாத்துதல்;

(ஈ) காண்பிப்புப் பொருட்களை அரசாங்கப் பகுப்பாய் வாளருக்கு, வேறெவரேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணருக்கு அல்லது அரசாங்க தடயவியல்சார் மருத்துவ விசேட நிபுணரொருவருக்கு அனுப்பிவைத்தல்;

(உ) நிபுணர்களினால் இயைபான பரிசோதனைகளும் பரீட்சிப் புக்களும் நடாத்தப்படுதல்;

(ஊ) விதிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் நிபந்தனைக் கமைய, வங்கிக்கணக்குகளை முடக்குதல் அல்லது வேறு நிதிசார் வைப்புக்களையும் கணக்குகளையும் முடக்குதல்:

ஆயின், நீதிவான், ஒன்றில் அவரது சொந்தப் பிரேரணையின்மீது அல்லது அதுசார்பில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, ஏதேனும் சட்டமுறையான நோக்கத்துக்காக, அத்தகைய கட்டளையை வேறு படுத்தலாம் அல்லது ஏதேனும் அத்தகைய கணக்கை வைத்திருப்பவரினால் அத்தகைய கணக்குகளில் உள்ள நிதிகள் நல்லெண்ணத்துடன் பயன்படுத்தப்படுவதனை அனுமதிக்கலாம்;

(எ) எவரேனும் சேவைவழங்குநரால் வழங்கப்படுகின்ற சேவைகளின் வழங்குகையை இடைநிறுத்துதல் அல்லது வேறுபடுத்துதல்:

ஆயின், நீதிவான், ஒன்றில் அவரது சொந்தப் பிரேரணையின்மீது அல்லது அதுசார்பில் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, ஏதேனும் சட்டமுறையான நோக்கத்துக்காக, அத்தகைய சேவைகளின் பெறுநர் களினால் அத்தகைய சேவைகள் நல்லெண்ணத்துடன் பயன்படுத்தப்படுவதை இயலச்செய்து அத்தகைய கட்டளைகளை வேறுபடுத்தலாம்; அத்துடன்

(ஏ) காப்புப் பெட்டிகளைத் திறத்தல்.

(2) நீதிவான், விண்ணப்பமானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டுள்ளதென்றும், நாடப்பட்ட உதவியானது புலனாய்வுகளை நடாத்துவதனை வசதிப்படுத்தும் நோக்கத்துக்கு நியாயமானளவு அவசியமானதென்றும் திருப்திப்படுவதன்மேல், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நாடப்பட்ட கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

தரவுகளையும் தகவல்களையும் செயல்முடக்கல் அகற்ற நீதிவான் அதிகாரமளித்தல்

**66.** (1) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காக, பொலிசுக் கண்காணிப்பாளர் பதவிவரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ள பொலிசு அலுவலரொருவர், அத்தகைய அலுவலரைப் பின்வருவனவற்றுக்கு அதிகாரமளிக்கின்ற கட்டளையொன்றை நாடி, நீதிவானொருவருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்-

(அ) சேவையை அல்லது சாதனத்தை செயல்முடக்கலகற்றி அல்லது மறைக்குறியீட்டாக்கத்தையகற்றுவதற்கு ஏதேனும் தொடர்பாடல் அல்லது களஞ்சியப்படுத்தற் சேவைகள் அல்லது, ஏதேனும் தரவு அல்லது தகவல் அல்லது வேறு பொருள் பற்றிய சாதனம் தொடர்பில் செயல்முடக்கல் அல்லது மறைக்குறியீட்டாக்கச் சேவைகளை வழங்குகின்ற எவரேனுமாளைப் பணித்தலும் அதன்கண் அடங்கியுள்ள தகவல்களை அத்தகைய பொலிசு அலுவலருக்கு வழங்குலும்;

(ஆ) ஏதேனும் அஞ்சல் செய்தி அல்லது மின்னஞ்சல் அல்லது ஏதேனும் தொலைபேசி, குரல், இணையம் அல்லது காணொளி உரையாடல் அல்லது மாநாடு அல்லது வேறேதேனும் ஊடகத்தினூடான ஏதேனும் தொடர்பாடலை இடைமறித்தல், வாசித்தல், செவிமடுத்தல் அல்லது பதிவுசெய்தல்; அல்லது

(இ) ஏதேனும் ஒத்திசை அல்லது எண்ணிமமுறைத் தரவு அல்லது தகவல் பரிமாற்ற அல்லது கைமாற்ற முறைமையை அணுகுதல்:

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகையில் எவரேனுமாளுக்கு எதிரான சந்தேகத்துக்கான

நியாயமான ஏதுக்கள் காணப்படின் மாத்திரமே, அத்தகைய பொலிசு அலுவலர், இப்பிரிவின்கீழான கட்டளையொன்றுக்காக விண்ணப்பிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிவான் எந்நோக்கங்களுக்காகக் கட்டளையொன்றை ஆக்கலாமோ அந்நோக்கங்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவரின் அடையாளத்தைத் தீர்மானித்தல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவரின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்;

(இ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று பற்றிய புலனாய்வொன்றை நடாத்துவதை வசதிப்படுத்துதல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ள ஆளொருவருக்கெதிரான சான்றுகளைத் திரட்டுதல்;

(உ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதற்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் சதிசெய்கின்றனரா, திட்டமிடுகின்றனரா, ஆயத்தஞ்செய்கின்றனரா அல்லது எத்தனிக்கின்றனரா என்பதைத் தீர்மானித்தல்;

(ஊ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றின் புரிகையைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்தல்.

(3) அத்தகைய நீதிவான், விண்ணப்பமானது நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டுள்ளதென்றும், அத்தகைய கட்டளையை ஆக்குவது புலனாய்வுகளை நடாத்துவதற்கு நியாயமானளவு அவசியமானதென்றும் அவர் திருப்திப்படின், அத்தகைய கட்டளையை வழங்குதல் வேண்டும்.

நீதிவான் கூற்றுக்களைப் பதிவுசெய்தல்

**67.** (1) இச்சட்டத்தின்கீழான தவறொன்று பற்றி புலனாய்வொன்றை நடாத்துகின்ற பொலிசு நிலையமொன்றுக்குப் பொறுப்பாகவுள்ள பொலிசு அலுவலரொருவரினால் விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், எந்நீதிவானுக்கு அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதோ அந்நீதிவான், அவருக்கு முன்னால் அத்தகைய அலுவலரினால் நிறுத்தப்பட்டுள்ள எவரேனும் சந்தேகநபரை வினாவி அவரின் கூற்றைப் பதிவுசெய்யலாம்.

(2) அத்தகைய கூற்றைப் பதிவுசெய்தலானது பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகியதாக இருத்தல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின்கீழ் அவ்வாளுக்குள்ள உரிமைகள் பற்றி அவருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) அவ்வாளிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தன்னிச்சையாக பதிலளிப்பதற்கு அத்தகைய ஆள் விரும்புகின்றாரா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதற்காக அவர் விசாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் அத்தகைய ஆள் ஏதேனும் வாக்குறுதி, தூண்டுதல் அல்லது அச்சுறுத்தலின்றி அத்தகைய கூற்றைத் தன்னிச்சையாகச் செய்கின்றாரெனத் திருப்திப்பட்டிருப்பின் மாத்திரம் கூற்றொன்றைப் பதிவுசெய்வதனை மேற்கொள்ளுதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆளை வினாவும் நோக்கத்துக்காக, வினாக்கொத்தொன்று பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஈ) அவ்வாளுக்கெதிராக குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படும் பட்சத்தில், அவர் அளிக்கும் கூற்றின் உள்ளடக்கங்கள் அவருக்கெதிரான சான்றாகப் பயன்படுத்தப்படலாமென அவ்வாள் எச்சரிக்கப்படுதல் வேண்டும்;

(உ) அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு அளிக்கப்பட்ட பதில்களுக்கு மேலதிகமாக, அத்தகைய ஆள் கொடுக்க விரும்புகின்ற எத்தகையதுமான கூற்று பதிவுசெய்யப் படுதல் வேண்டும்;

(ஊ) நேர்காணல் செய்யப்படுகின்ற ஆள் நீதிவானால் பேசப்படுகின்ற மொழியை விளங்கிக்கொள்ள முடியாத வராகவிருக்கும் நிலைமைகளில், அத்தகைய ஆளினாலும் நீதிவானினாலும் விளங்கிக்கொள்ளப்படுகின்ற மொழிகளுக்கு வினாக்களையும் பதில்களையும் மொழி பெயர்ப்புச் செய்வதற்கென உரைபெயர்ப்பாளரொரு வரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்;

(எ) நேர்காணலின் எழுத்துப்பிரதியொன்றும் மற்றும் காணொலி பதிவொன்றும் தயாரிக்கப்பட்டு எதிர்கால சரிபார்த்தலுக்காக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய கூற்றைச் செய்கின்ற ஆள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளமைக்காக அடுத்துப்பின்னர் குற்றம் பகரப்படுமிடத்து, அத்தகைய கூற்று 80 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும் மற்றும் சான்றுக் கட்டளைச்சட்டத்தின் 24 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைய, அத்தகைய தவறு தொடர்பிலான வழக்குநடவடிக்கையில் அத்தகைய ஆளுக்கெதிரான சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

(4) அத்தகைய கூற்றைச் செய்கின்ற ஆள், இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளமைக்காகக் குற்றம்பகரப்பட்ட ஆளொருவருக்கெதிராகச் சான்றளிப்பதற்கு சாட்சியொன்றென்ற வாறாக சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அழைக்கப்படு மிடத்து, ஒன்றில் கூற்றின் முழுமை அல்லது அதன் பாகமொன்று, அத்தகைய ஆளின் முதல்விசாரணையின் பாகமாக அடையாள மிடப்பட்டு முன்வைக்கப்படலாம்.

(5) (அ) சந்தேகநபர் நீதிவானுக்குக் கூற்றொன்றைச் செய்வதற்கு மறுக்கின்றவிடத்து, நீதிவான் அத்தகைய நிகழ்வை இயைபான பொலிசு அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) சந்தேகநபர் கூற்றொன்றைச் செய்வதற்கு அவ்வாறு மறுக்கின்ற நேரத்தில், அவர் தடுத்துவைத்தற்கட்டளையொன்றின் நியதிகளின்படி தடுப்புக்காவலில் இருப்பின், அல்லது விளக்கமறியல் கட்டுக்காப்பில் இருப்பின், அவர், விடயத்திற்கேற்ப, தடுப்புக்காவலுக்கு அல்லது விளக்கமறியல் கட்டுக்காப்புக்கு திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும்.

**68.** (1) புலனாய்வு முடிவடைகின்றபோது, இயைபான பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், புலனாய்வுகள் முடிவடைந்தமையை அறிவிக்கின்ற அறிக்கையொன்றை நீதிவானுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். *புலனாய்வுகளை முடிவுறுத்தல்*

(2) இச்சட்டத்தின்கீழான தடுத்துவைத்தற் கட்டளையொன்று, எச்சந்தேகநபரொருவர் தொடர்பில் புலனாய்வு முடிவடைந்துள்ளதோ அச்சந்தேகநபர் தொடர்பில் வழங்கப்படுதலோ அல்லது நீடிக்கப்படுதலோ ஆகாது.

(3) இச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட எவரேனுமாள் தொடர்பிலான புலனாய்வொன்று எந்நேரத்திலேனும் மீளத்தொடங்குவதற்கு இருப்பின், அத்தகைய மீள்தொடங்குதல் பற்றியும் மேலதிக புலனாய்வு முடிவடைந்தமை பற்றியும் நீதிவானுக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் அறிவித்தல் வேண்டும்.

**69.** புலனாய்வு முடிவடைந்ததன்மேல், பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர், சந்தேகநபருக்குகெதிராகக் குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதற்குப் போதிய சான்றுள்ளதென நம்புகின்றவிடத்து அவர் - *சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய புலனாய்வுகள் பற்றிய குறிப்புகள்*

(அ) சந்தேகநபருக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுக்குமாறு சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு வேண்டுகோள்விடுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினூடாகப் பின்வருவனவற்றைச் சட்டத்துறைத் தலைமையதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(i) தவறுபுரியப்பட்ட இடத்திலிருந்து மற்றும் பரிசோதிக்கப்பட்ட அல்லது தேடுகையிடப்பட்ட வேறேதேனும் இடத்திலிருந்து கண்டறியப்பட்ட அவதானிப்புக்கள்;

(ii) தவறைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட ஆளொருவரின் கூற்றுக்களுட்பட, புலனாய்வின் போது பதிவுசெய்யப்பட்ட எல்லாக் கூற்றுக்களும்;

(iii) நிபுணர்களின் அறிக்கைகள், புகைப்படங்கள், உருவரைகள் மற்றும் வரைபடங்கள்;

(iv) காலத்துக்காலம் சட்டத்துறைத் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான வேறேதேனும் விடயப்பொருள்;

(v) நடாத்தப்பட்ட புலனாய்வு தொடர்பான அறிக்கையொன்று; அத்துடன்

(vi) 51 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட விசேட புலனாய்வாளர்கள் குழாத்தினால் நடாத்தப்பட்ட புலனாய்வுகள் பற்றிய எல்லா முடிவுகளும்.

## பாகம் VII

## குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்

சட்டத்துறைத் தலைமையதிபதி வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல்

**70.** சட்டத்துறைத் தலைமையதிபதி, இச்சட்டத்தின் கீழ் ஆளொருவரினால் புரியப்பட்ட தவறொன்று தொடர்பிலும், இச்சட்டத்தின்கீழான அத்தகைய தவறைப் புரியும்போது ஏதேனும் வேறு சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினால் புரியப்பட்ட தவறொன்று தொடர்பிலும் குற்றப்பகர்வு செய்தலும் மற்றும் குற்ற வழக்கு நடவடிக்கைகளைத் தொடுத்தல், பொறுப்பேற்றல் அல்லது கொண்டு நடாத்துதலும் வேண்டும்.

**71.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,-

குற்றப்பகர்வை இடைநிறுத்து தலும் பிற்போடுதலும்

(அ) எவரேனுமாளுக்கு மரணம் அல்லது கடுங்காயம் விளைவிக்கப்பட்டிராதுள்ளவிடத்து; அல்லது

(ஆ) இலங்கை அரசினதும் மக்களினதும் பந்தோபஸ்து பாரதூரமானமுறையில் விட்டுக்கொடுக்கப்பட்டு அல்லது பாதிக்கப்பட்டிராதுள்ளவிடத்து,

சட்டத்துறைத் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக் கப்பட்ட நிகழ்வுகள்மீது முறையான கவனத்தைச் செலுத்தியும் அத்துடன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனை களுள் ஒன்றுக்கு அல்லது அதற்குமேற்பட்டவற்றுக்கு அமையவும், இச்சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட எவரேனுமாளுக்கெதிராகக் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்படுவதை இருபதாண்டுகளை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு இடைநிறுத்தலாம் அல்லது பிற்போடலாம்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றவியல் வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்படுவதனை இடைநிறுத்துகின்ற அல்லது பிற்போடுகின்றவிடத்து, அவர் பின்வருவனவற்றின்மீது முறையான கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்-

(அ) அரச கொள்கை;

(ஆ) தேசிய நலனும் பொதுமக்கள் நலனும்;

(இ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கருத்துக்கள்;

(ஈ) தவறினால் பலிக்குட்படுத்தப்பட்டோரின் கருத்துக்கள்; அத்துடன்

(உ) குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் அல்லது அவர் சார்பில் அவரது சட்டத்தரணியினால் செய்யப்படக்கூடியவாறான முறையீடுகள்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதி, இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட எவரேனுமாளுக் கெதிராக குற்றவியல் வழக்குநடிவடிக்கைகளைத் தொடுப்பதை (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி இடைநிறுத்துவதற்கும் பிற்போடுவதற்கும் முடிபுசெய்கின்றவிடத்து, அத்தகைய ஆளுக் கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுப்பதை இடைநிறுத்துவதற்கும் மற்றும் பிற்போடுவதற்குமான பிரதிபயனாக அத்தகைய ஆளின்மீது பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றை அல்லது அதற்குமேற்பட்டவற்றைச் சுமத்துவதற்கு அத்தகைய நீதிமன்றத்தின் வலுவளிப்பைப் பெற்றுக்கொள்வதற்கென அவர் மேல்நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்ய வேண்டும் -

(அ) நீதிமன்றத்தினால் அறிவுறுத்தப்பட்டவாறு சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட உரையொன்றைப் பயன்படுத்தி, மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்துதல்;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப் பட்டவாறாக, தவறினால் பலிக்குட்படுத்தப்பட்டோருக்கு இழப்புக்கான எதிரீட்டை வழங்குதல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சியொன்றில் பங்குபற்றுதல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருப்பதென அவ்வாள் பகிரங்கமாகப் பொறுப்பேற்றல்;

(உ) குறித்துரைக்கப்பட்ட சமுதாய அல்லது சமூக சேவையில் ஈடுபடுதல்; அல்லது

(ஊ) ஏதேனும் குற்றம்பகரும் தவறை அல்லது சமாதானக் குலைவைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

(4) மேல்நீதிமன்றம், (3) ஆம் உட்பிரிவின்கீழ் சட்டத்துறைத் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தை கவனத்துட்கொண்டதன் மேல், தவறைப் புரிந்துள்ளாரெனச் சார்த்தப்பட்ட ஆள் நீதிமன்றத்தின்முன் தோன்றுவதற்குக் கட்டளையிடுதல் வேண்டுமென்பதுடன் நீதிமன்றத்தினால் சுமத்தப்பட்ட நிபந்தனைகளைப்பற்றி அத்தகைய ஆளுக்கு அறிவித்தலும் வேண்டும்; அத்துடன் நீதிமன்றத்தினால் கேட்கப்படுவதற்கும் அவ்வாறு சுமத்தப்பட்ட நிபந்தனைகளுக்குச் சம்மதிப்பதற்குமான வாய்ப்பொன்றை அவருக்கு அளித்தலும் வேண்டும்.

(5) அத்தகைய ஆள், அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதற்காக விதிக்கப்பட்ட காலப்பகுதியின்போது (4) ஆம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தால், சட்டத்துறைத் தலைமையதிபதி, புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்பட்ட தவறுதொடர்பில் அத்தகைய ஆளுக்கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுத்தலாகாது.

(6) அவ்வாள், செல்லுபடியான சாக்கின்றி அத்தகைய நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத்தவறின், சட்டத்துறைத் தலைமையதிபதி சந்தேகநபருக்கான அறிவித்தலுடன், அத்தகைய நிபந்தனைகளை பூர்த்திசெய்வதற்கு சந்தேகநபருக்குக் கொடுக்கப்பட்ட காலப்பகுதி கழிந்தபின்னர், அத்தகைய ஆளுக் கெதிரான குற்றவியல் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கலாம்.

## பாகம் VIII

### விளக்கம்

மேல்நீதிமன்றத்திலான விளக்கம்

**72.** இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிகின்ற ஒவ்வோராளும், சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குற்றப்பகர்வு செய்யப்படுவதன்மேல், யூரர்சபை இல்லாது அமரும் மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவர் முன்னிலையில் பூர்வாங்க விசாரணையொன்று இல்லாமலே விளங்கப்படற்குரியவராதல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், -

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதி பிரதம நீதியரசரிடத்தில் அவ்வாறு வேண்டுகோள்விடுக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) பிரதம நீதியரசர், நீதியின் நலன்கள் அவ்வாறு தேவைப்படுத்துகின்றதென அபிப்பிராயப்படுமிடத்து; அல்லது

(இ) குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது அவர்சார்பில் சட்டத் தரணியொருவர் அவ்வாறு விண்ணப்பிக்கின்றவிடத்து

பிரதம நீதியரசர், விளக்கமானது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, நீதாய மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் நடைபெற வேண்டுமெனப் பணிக்கலாம்.

விளக்கம் முடியும்வரை தடுத்து வைத்தல்

**73.** (1) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், பாதுகாப்பு என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் தேசிய பந்தோபஸ்து மற்றும் பொது ஒழுங்கமைதி என்பவற்றின் நலன்கருதி அவ்வாறு செய்வது அவசியமானதென்று அல்லது உசிதமானதென்று அபிப்பிராயப்படின், அத்தகைய ஆளின் நியாயமான விளக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு மேல் நீதிமன்றத்தினால் விடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புக்களுக் கமைய, அத்தகைய நலன்களைக் கருத்திற்கொண்டு எவரேனும் அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமையவும் அத்தகைய இடத்திலும், அவரின் கட்டுக்காப்பில் அத்தகைய ஆளை வைத்திருக்க வேண்டுமென்று கட்டளையை ஆக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, மேல் நீதிமன்றத்துக்கும் மறியற்சாலைகள் ஆணையாளர் தலைமை யதிபதிக்கும் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிக்கு அத்தகைய ஆளின் கட்டுக்காப்பை ஒப்படைப்பது அத்தகைய ஆணையாளர் தலைமையதிபதியின் கடமையாதலும் வேண்டும்; அத்துடன் (54 ஆம் அத்தியாயமான) மறியற்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடு கள் அத்தகைய ஆளின் கட்டுக்காப்பு தொடர்பில் ஏற்புடையதாகா தொழிதலும் வேண்டும்.

**74**. வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மேல்நீதிமன்றம், இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறுக்காகக் குற்றம்பகரப்பட்ட எவரேனும் ஆளுக்கெதிரான விளக்கங்களுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

*இச்சட்டத்தின் கீழான விளக்கங்களுக்கு முன்னுரிமை அளித்தல்*

**75**. விதிவிலக்கான சூழ்நிலைகள் அவ்வாறு அனுமதித்தாலொழிய இச்சட்டத்தின்கீழான விளக்கமொன்று, வார இறுதி நாட்கள், பொதுவிடுமுறை நாட்கள் அத்துடன் எந்த நாட்கள் நீதிமன்றம் விடுமுறையிலுள்ள நாட்களாக இருக்கவேண்டுமென பிரதம நீதியரசரினால் நிர்ணயிக்கப்பட்டதோ அந்தநாட்கள் என்பன தவிர, நாளாந்தம் நடைபெறுதல் வேண்டும்.

*நாளாந்தம் அடிப்படையில் விளக்கங்களை நடாத்துதல்*

**76**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, இச்சட்டத்தின்கீழான விளக்கமொன்று தொடர்பில், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதல் வேண்டும்.

*விளக்கத்தின் நடவடிக்கைமுறை*

**77**. (1) குற்றப்பகர்விலுள்ள ஏதேனும் குற்றச்சாட்டு —

*குற்றப்பகர்வை மீளப்பெறுதல்*

(அ) எவரேனுமாளுக்கு மரணத்தை அல்லது கடுமையான உடல் ஊறுபாட்டை விளைவித்தல்;

(ஆ) இலங்கை அரசினதும் மக்களினதும் பந்தோபஸ்துக்கு ஆபத்து ஏற்படுத்துதல்; அல்லது

(இ) ஆதனத்துக்கு பாரதூரமான தீங்கு விளைவித்தல்,

என்பவற்றுடன் தொடர்பில்லாததாக உள்ளவிடத்து, இச்சட்டத்தின்கீழான தவறுகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் புரிந்துள்ளமைக்காகக் குற்றம்பகரப்பட்டுள்ள ஆளொருவருக்கெதிராக மேல்நீதிமன்றத்தினால் தீர்ப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் எந்நேரத்திலும் சட்டத்துறைத் தலைமையதிபதி, (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளின்மீது முறையான கவனத்தைச் செலுத்தியும், அத்துடன் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றுக்கு அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்கு அமையவும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான குற்றப்பகர்வை மேல்நீதிமன்றத்தின் அனுமதியுடன் மீளப்பெறலாம்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் குற்றப்பகர்வை மீளப்பெறும்போது, அவர், தவறுக்குப் பலியாக்கப்பட்டவரின் கருத்துக்களுக்கும் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளினால் அல்லது அவ்வாள் சார்பில் அவரது சட்டத்தரணியினால் செய்யப்படக்கூடிய முறையீடுகளுக்கும் முறையான கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(3) சட்டத்துறைத் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான பின்வரும் நிபந்தனைகளுள் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைச் சுமத்தலாம்:-

(அ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட உரையொன்றைப் பயன்படுத்தி, மேல்நீதிமன்றத்தின் முன்னிலையில் கழிவிரக்கத்தையும் மன்னிப்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்துதல்;

(ஆ) சட்டத்துறைத் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப் பட்டவாறாக, தவறுக்குப் பலிக்குட்படுத்தப்பட்டோருக்கு இழப்புக்கான எதிரீட்டை வழங்குதல்;

(இ) குறித்துரைக்கப்பட்ட புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சி யொன்றில் தன்னிச்சையாகப் பங்குபற்றுதல்;

(ஈ) இச்சட்டத்தின்கீழான அல்லது வேறேதேனும் சட்டத்தின் கீழான தவறொன்றைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருப்ப தென அவர் பகிரங்கமாகப் பொறுப்பேற்றல்;

(உ) குறித்துரைக்கப்பட்ட சமுதாய அல்லது சமூக சேவையில் ஈடுபடுதல்; அத்துடன்

(ஊ) ஏதேனும் குற்றம்பகரும் தவறை அல்லது சமாதானக் குலைவைப் புரிவதிலிருந்து தவிர்ந்திருத்தல்.

(4) அத்தகைய ஆள், அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதற்காக விதிக்கப்பட்ட காலப்பகுதியின்போது (3) ஆம் உட்பிரிவின்கீழ் சுமத்தப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி

செய்வாரெனின், சட்டத்துறைத் தலைமையதிபதி, அதன்பின்னர், மூல குற்றப்பகர்விலுள்ள அதே குற்றச்சாட்டுக்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராக புதிய குற்றப்பகர்வொன்றை முன்வைத்தலாகாது.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவர், செல்லுபடியான சாக்கின்றி சொல்லப் பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத்தவறின், சட்டத்துறைத் தலைமையதிபதி, அத்தகைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்வதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவருக்குக் கொடுக்கப்பட்ட காலப்பகுதி கழிந்தபின்னர், மூல குற்றப்பகர்விலுள்ள அதே குற்றச்சாட்டுக் களின்மீது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிராகப் புதிய குற்றப்பகர் வொன்றைக் கோப்பிடலாம் என்பதுடன், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் முற்படலாம்.

**78.** இச்சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆளொருவருக்கெதிரான விளக்கம், குற்றப்பகர்வு கோப்பிடப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டு கழிந்தபின்னரும் முடிவடையாதிருப்பின், எந்த மேல்நீதிமன்ற நீதிபதியின் முன்னர் அவ்விளக்கம் முடிவுறா துள்ளதோ அல்லது நடைபெற்றுள்ளதோ அந்த மேல்நீதிமன்ற நீதிபதி, விளக்கத்தை முடிவுக்குக்கொண்டுவருவதிலான தாமதம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது அவரது சட்டத்தரணியின் நடத்தைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாக இருந்தாலொழிய, அத்தகைய ஆளை பிணையில் விடுதலைசெய்தல் வேண்டும்: *மேல்நீதிமன்ற விளக்கத்தின் போது பிணை வழங்குதல்*

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் மரண தண்டனையால் அல்லது ஆயுட்கால மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற் பாலதான தவறொன்றைப் புரிந்துள்ளதாகச் சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர், விதிவிலக்கான சூழ்நிலைகளிற்தவிர, மேல்நீதிமன்ற நீதிபதியொருவரினால் பிணையில் விடுதலை செய்யப்படுதலாகாது.

**79.** இச்சட்டத்தின் கீழ் ஆளொருவர் மீது விதிக்கப்பட்ட குற்றத்தீர்ப்பொன்றுக்கு அல்லது தண்டனைத்தீர்ப்பொன்றுக்கு எதிரான மேன்முறையீடொன்று செய்யப்பட்டமை எவ்வாறிருப்பி னும், மேன்முறையீட்டு நீதிமன்றமானது, விதிவிலக்கான சூழ்நிலைகளில், அது தகுந்தவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அத்தகைய ஆளை பிணையில் விடுதலை செய்யலாம்: *விதிவிலக்கான சூழ்நிலை களின் மீதான பிணை*

ஆயின் எவ்வாறாயினும், இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்ட தவறொன்றுக்காக எந்த ஆளொருவர்மீது மரண தண்டனைத்தீர்ப்பு விதிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆளொருவரினால் மேன்முறையீடொன்று செய்யப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடானது தீர்மானிக்கப்படும்வரை, அத்தகைய ஆள்மீதான அத்தகைய தண்டனைத்தீர்ப்பு நிறைவேற்றப்படுதலாகாது என்பதுடன், அத்தகைய ஆள் அத்தகைய காலம்வரை மறியற்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்படுதலும் வேண்டும்.

பாகம் IX

**கூற்றுக்களின் ஏல்தகவு**

நீதிவான் ஒருவருக்குச் செய்யப்பட்ட கூற்றுக்கள்

***80***. *(1)* இச்சட்டத்தின்கீழ் எவரேனுமாளினால் நீதிவானொருவருக்குச் செய்யப்பட்ட கூற்றொன்று, *(2)* ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கும் அத்துடன் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் *24* ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் அமைய, அவ்வாளுக்கெதிராக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

*(2)* (அ) ஆளொருவர், தவறொன்றின் புரிகையுடன் அவரைச் சம்பந்தப்படுத்துகின்ற அல்லது குற்றஞ்சாட்டுகின்ற கூற்றொன்றைச் செய்வதற்கு அல்லது சத்தியக்கடதாசியொன்றை முன்வைப்பதற்குச் சட்டரீதியாகப் பிணிக்கப்படுதலாகாது.

(ஆ) நேர்காணப்படவேண்டிய அல்லது அவரது கூற்று பதிவுசெய்யப்படவேண்டிய எவரேனுமாள், அவர் அவ்வாறு விரும்புகின்றாரெனில், அத்தகைய நேர்காணலுக்கு முன்னர், சட்டத்தரணியொருவருடன் அணுக்கத்தைக் கொண்டிருப்பதற்கும் அல்லது சட்டத்தரணி ஒருவருடன் தொடர்பு கொள்ளுவதற்கும் மற்றும் சட்ட மதியுரையைப் பெற்றுக்கொள்வதற்குமான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) கூற்றொன்றைப் பதிவுசெய்வதற்கு நாடுகின்ற நீதிவானொருவர், நேர்காணப்படுகின்ற ஆளுக்கு, அத்தகைய நேர்காணலுக்கு முன்னர், இச்சட்டத்தின்கீழான அவரது உரிமைகளைப் பற்றி அறிவித்தல் வேண்டும்.

(ஈ) நேர்காணலில் எவ்வாளுடைய கூற்று பதிவுசெய்யப்படுகின்றதோ அவ்வாள், பேசப்படுகின்ற மொழியை விளங்கிக்கொள்ள முடியாதிருப்பின் உரைபெயர்ப்பாளர் ஒருவரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், நேர்காணலானது அத்தகைய ஆளினால் விளங்கிக்கொள்ளப்படமுடியுமான மொழியொன்றில் நடாத்தப்படுதலும் வேண்டும்.

(உ) கூற்று பற்றிய மொழிபெயர்ப்பொன்றானது, நேரொத்த வினாக்களுடன் சேர்த்து பார்த்தெழுதப்பட்டு எதிர்கால சரிபார்த்தலுக்காக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) நேர்காணலானது, சாத்தியமாகவுள்ளபோதெல்லாம் செவிப்புல-கட்புல வடிவில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.

நீதிவான் ஒருவருக்குச் செய்யப்பட்ட குற்ற ஒப்புதல் ஒன்றின் ஏல்தகவு பற்றி திருப்தியுறுவதற்கான முன் நிபந்தனை

**81.** வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் கீழான தவறொன்று புரியப்பட்டுள்ளது பற்றி குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எவரேனுமாளினால் நீதிவானொருவருக்குச் செய்யப்பட்ட குற்ற ஒப்புதலொன்று –

(அ) அத்தகைய குற்ற ஒப்புதலைப் பதிவுசெய்த நீதிவான், கூற்றைப் பதிவுசெய்வதற்கு நேர்முன்னரும் உடன் அடுத்துப்பின்னரும் கூற்றைச் செய்த ஆள் அரசாங்க தடயவியல்சார் மருத்துவ விசேடநிபுணர் ஒருவரினால் பரிசோதிக்கப்படுவதற்குச் செய்வித்திருந்தாலொழிய; அத்துடன்

(ஆ) தடயவியல்சார் மருத்துவ விசேடநிபுணரின் அறிக்கை, குற்ற ஒப்புதல் கூற்றின் ஏல்தகவைச் சரிபார்ப்பதற்காக நடாத்தப்படக்கூடியவாறான உண்மை விளம்பல் விசாரணையின்போது குற்றவழக்குத் தொடுக்கும் அதிகாரியினால் முன்வைக்கப்பட்டிருந்தாலொழிய,

அத்தகைய ஆளுக்கெதிரான சான்றில் ஏற்கத்தக்கதாதலாகாது.

பாகம் X

**நானாவிதக் கட்டளைகள்**

**82.** (1) வேறேதேனும் சட்டத்திலுள்ளவை எது எவ்வாறிருப்பினும், சனாதிபதி, ஏதேனும் ஒழுங்கமைப்பு இச்சட்டத்தின் கீழான தவறொன்றாக அமைகின்ற ஏதேனும் செயலில் ஈடுபடுவதாக, அல்லது இலங்கையின் அல்லது வேறேதேனும் நாட்டின் தேசிய பந்தோபஸ்துக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற சட்டமுரணான வழிமுறையொன்றில் செயற்பட்டுக்கொண்டிருப்பதாக நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, அவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, (இதனகத்துப் பின்னர் "தடைசெய்தற் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அத்தகைய ஒழுங்கமைப்பைத் தடைசெய்யலாம்.

*சனாதிபதி தடைசெய்தற் கட்டளைகளை ஆக்குதல்*

(2) தடைசெய்தற் கட்டளையொன்று —

(அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றுக்கு; அல்லது

(ஆ) ஏதேனும் வெளிநாட்டு அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட வேண்டுகோளொன்றுக்கு,

பயன்கொடுப்பதற்காக சனாதிபதியினால் ஆக்கப்படலாம்.

(3) தடைசெய்தற் கட்டளையொன்று பின்வரும் தடைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை உள்ளடக்கலாம்:-

(அ) எவரேனுமாள் அத்தகைய ஒழுங்கமைப்பின் உறுப்பினரொருவராக இருப்பதனைத் தடைசெய்தல்;

(ஆ) அத்தகைய ஒழுங்கமைப்புக்கு உறுப்பினர்களை ஆட்சேர்ப்புச் செய்வதிலிருந்து அத்தகைய ஒழுங்கமைப்பைத் தடைசெய்தல்;

(இ) அத்தகைய ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை முன்னெடுத்துச்செல்வதில் செயற்படுகின்ற எவரேனுமாளை தடைசெய்தல்;

(ஈ) அத்தகைய ஒழுங்கமைப்பினால் கூட்டங்கள், செயற்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவது மீதான தடை;

(உ) அத்தகைய ஒழுங்கமைப்பின் வங்கிக் கணக்குகளையும் வேறு நிதிசார் வைப்பகங்களையும் பயன்படுத்துதல் அல்லது புழக்கத்துக்குக்கொண்டுவருதல் மீதான தடை;

(ஊ) ஒப்பந்தங்களைச் செய்வதற்கான தடை;

(எ) நிதிகளைத் திரட்டுதல் மற்றும் மானியக்கொடைகளையும் விருப்பாவணக் கொடைகளையும் பெற்றுக்கொள்ளல் என்பவற்றின்மீதான தடை;

(ஏ) ஒழுங்கமைப்பின் நிதிகளையும் சொத்துக்களையும் கைமாற்றுவதற்கான தடை;

(ஐ) அத்தகைய ஒழுங்கமைப்பு சார்பில் ஆதரவு நாடலுக்கும் பரிந்துவேண்டலுக்குமான தடை; அல்லது

(ஒ) எவரேனுமாள் ஏதேனும் விடயப்பொருளின் வெளியீட்டின்மூலம் அத்தகைய ஒழுங்கமைப்பின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதைத் தடைசெய்தல்.

(4) ஓராம் உட்பிரிவின் கீழ் எந்த ஒழுங்கமைப்புத் தொடர்பில் தடைசெய்தற் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்த ஒழுங்கமைப்பொன்று தொடர்பாக வேறேதேனும் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் தடை, மட்டுப்பாடு, இடைநிறுத்தம் அல்லது தடைவிதிப்பானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அத்தகைய ஏதேனும் தடைசெய்தற் கட்டளைக்குப் பங்கமின்றி தொடர்ந்தும் தொழிற்பாட்டிலிருத்தல் வேண்டும்.

(5) வர்த்தமானியில் தடைசெய்தற் கட்டளையொன்று வெளியிடப்பட்டதனை உடனடுத்து, அத்தகைய தடைசெய்தற் கட்டளை எவ்வொழுங்கமைப்புத் தொடர்பில் வழங்கப்பட்டுள்ளதோ அவ்வொழுங்கமைப்புக்கு அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நேரடித் தொடர்பாடல் சாத்தியமாகவுள்ளபோதெல்லாம் அத்தகைய தொடர்பாடல் மூலம், அத்தகைய ஒழுங்கமைப்பின் உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் அதற்கான காரணங்களுடன் தெரிவிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய கட்டளை பற்றிய பகிரங்க அறிவித்தலொன்றும் செய்யப்படுதல் வேண்டும்.

(6) சனாதிபதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட தடைசெய்தற் கட்டளையொன்றின்மூலம் இன்னலுற்ற ஆளொருவரினால் அல்லது ஒழுங்கமைப்பொன்றினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மேல், அத்தகைய ஆளின் அல்லது ஒழுங்கமைப்பின் முறையீடுகளைக் கவனத்துட்கொண்டபின்னர் அத்தகைய கட்டளையை மீளாய்வுசெய்யலாம் அல்லது இல்லாதாக்கலாம்.

(7) (அ) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட தடைசெய்தற் கட்டளையொன்று ஆரம்பத்தில் ஓராண்டைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு வழங்கப்படலாம்.

(ஆ) ஓராண்டுகாலம் கழிவதன் மீது சனாதிபதி, சமகால மற்றும் நம்பத்தகு தகவல் மற்றும் பந்தோபஸ்து தேவைகளைக் கவனத்திலெடுத்து ஒரேதடவையில் ஓராண்டை விஞ்சாத மேலதிக காலப்பகுதியொன்றுக்காக அத்தகைய ஏதேனும் கட்டளையை நீடிக்கலாம்.

(8) தடைசெய்தற் கட்டளையொன்றினால் அல்லது அதன் ஏதேனும் நீடித்தலினால் இன்னலுற்ற எவரேனும் ஆள் அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பு, அத்தகைய கட்டளையின் மீளாய்வை அல்லது இல்லாதொழித்தலை நாடி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்

சனாதிபதி மட்டுப்படுத்தற் கட்டளைகளை ஆக்குதல்

**83.** (1) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின் மீது, எவரேனுமாள் இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிந்துள்ளார், அல்லது புரிவதற்கு ஆயத்தஞ்செய்கின்றார் என்றும், அத்தகைய ஆளைக் கைதுசெய்யாமலே அவரின் நடத்தையைப் புலனாய்வு செய்ய முடியும் என்றும் நம்புவதற்கு சனாதிபதிக்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, மற்றும் அவ்வாறு செய்வது அவசியமாகவுள்ள தென சனாதிபதி அபிப்பிராயப்படின், சனாதிபதி, மேல் நீதிமன்றத்துக்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீதும் அத்தகைய நீதிமன்றத்தின் வலுவளிப்பைப் பெற்றுக்கொண்டதன் மேலும் எழுத்திலான ஒரு கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டிய வாறாக ஒருமாதத்தை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய மட்டுப்பாடுகளை விதித்து, (இதனகத்துப் பின்னர் “மட்டுப்படுத்தற் கட்டளை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அக்கட்டளையை ஆக்க லாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான மட்டுப்படுத்தற் கட்டளையொன்று பின்வருவனமீதான மட்டுப்பாடுகளை உள்ளடக்கலாம்:-

(அ) வதிவிடத்துக்கு வெளியேயான நடமாட்டம்;

(ஆ) வெளிநாடுகளுக்குப் பயணஞ்செய்தல்;

(இ) இலங்கையினுள் பயணஞ்செய்தல்;

(ஈ) வதிவிடத்துக்கும் தொழிலிடத்துக்கும் இடையேயான வழமையான மார்க்கத்துக்கு வெளியே பயணஞ்செய்தல்;

(உ) கட்டளையிற் குறித்துரைக்கப்படவேண்டியவாறான குறிப்பிட்ட ஆட்களுடனான தொடர்பாடல் அல்லது சேருகை அல்லது இரண்டும்; அல்லது

(ஊ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிவதனை வசதிப்படுத்தக்கூடிய குறித்தசில குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

(3) அத்தகைய ஏதேனும் மட்டுப்படுத்தற் கட்டளை, குறித்துரைக் கப்பட்டவொரு தேதியன்று அல்லது குறித்துரைக்கப்பட்ட கால இடைவெளிகளில் ஏதேனும் பொலிசு நிலையத்துக்கு வருகை தரும்படி சந்தேகநபரைத் தேவைப்படுத்தலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான மட்டுப்படுத்தற் கட்டளையொன்று, அத்தகைய கட்டளையானது —

(அ) இச்சட்டத்தின்கீழான தவறொன்று புரியப்படுதலைத் தடுப்பதற்கு அவசியமாகவிருந்தால் மட்டுமே,

(ஆ) இச்சட்டத்தின்கீழான தவறொன்றைப் புரிதல்பற்றிய புலனாய்வுகளை நடாத்துவதற்கு அவசியமாகவிருந்தால் மட்டுமே,

(இ) இச்சட்டத்தின்கீழ் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட அல்லது புரியப்படக்கூடிய சாத்தியமான தவறுக்கு விகிதசாரமாக இருந்தால் மட்டுமே; அத்துடன்

(ஈ) அரசியலமைப்பின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, எதேச்சாதிகாரமாக சுதந்திரத்தைப் பறித்தலாக அல்லது அடிப்படை உரிமைகளின் பிரயோகத்தின் மீதான மட்டுப்பாடாக அமையாதிருந்தால் மட்டுமே,

ஆக்கப்படுதல் வேண்டும்.

(5) நீதிமன்றமானது, அத்தகைய ஏதேனும் மட்டுப்படுத்தற் கட்டளை எந்த ஆள்தொடர்பில் ஆக்கப்பட்டதோ அந்த ஆளுக்கு அத்தகைய கட்டளை சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் கட்டளையை வலுவுறுத்துவதற்கும் அதனுடன் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான நடபடிகளை எடுக்கும்படி பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

6. (அ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியானவர், எந்த ஆள்தொடர்பில் மட்டுப்படுத்தற் கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த ஆளின் கூற்றுக்கள், அவை அளிக்கப்பட்டதிலிருந்து ஒருவாரத்தினுள் பதியப்படுவதனைச் செய்வித்தல் வேண்டுமென்பதுடன், சொல்லப்பட்ட கட்டளை இல்லாதொழிக்கப்படுதல் அல்லது வேறுபடுத்தப்படுதல் வேண்டுமாவென்பதைத் தீர்மானிப்பதற்கு சனாதிபதியை இயலச்செய்து, அதனை சனாதிபதிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(ஆ) கூற்றைப் பதியுமுன்னர், இயைபான ஆளுக்கு இச்சட்டத்தின் கீழான அவரது உரிமைகள் பற்றி அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மட்டுப்படுத்தற் கட்டளை ஆக்கப்பட்டமைக்கான ஏதுக்கள் அவருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(இ) கூற்றைப் பதியுமுன்னர், இயைபான ஆள் அவ்வாறு கோரினால், ஒரு சட்டத்தரணியை அணுகுவதற்கு அல்லது அவருடன் அந்தரங்கமான தொடர்பாடலைக் கொண்டிருப்பதற்கு அவர் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) நேர்காணலானது, நேர்காணப்படுகின்ற ஆளுக்கு விளங்குகின்றவொரு மொழியில், அவசியமானவிடத்து உரைபெயர்ப்பாளரொருவரின் சேவைகளைப் பெற்றுக்கொண்டு நடாத்தப்படுதலும், கூற்றானது பதியப்படுதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், உரைபெயர்ப்பாளரொருவரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுமிடத்து, நேர்காணலானது, எதிர்கால சரிபார்ப்புக்காக அதன் மொழிபெயர்ப்புடன் பதியப்படுதலும், எழுத்துப்பிரதியாக்கப்படுதலும் மற்றும் பேணிக் காக்கப்படுதலும் வேண்டும்.

(உ) சாத்தியமானபோதிலெல்லாம், நேர்காணலானது செவிப்புல-கட்புல ரீதியில் பதியப்படுதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட மட்டுப்படுத்தற் கட்டளையொன்றுக்கு வேண்டுமென்றே முரணாகச் செயற்படுகின்ற எவரேனுமாள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், மேல் நீதிமன்ற நீதிபதியொருவரினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் மூன்றாண்டுகளுக்கு நீடிக்கக்கூடிய மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(8) சனாதிபதி, இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட மட்டுப்படுத்தற் கட்டளையொன்றை ஒவ்வொரு மாதமும் பரிசீலனை செய்தல் வேண்டுமென்பதுடன், அவசியமாயின் அதன் காலப்பகுதியை நீடித்தலும் வேண்டும்.

(9) ஏதேனும் மட்டுப்படுத்தற் கட்டளையின் கூட்டுமொத்தக் காலப்பகுதி ஆறுமாதங்களை விஞ்சுதலாகாது.

(10) எந்த ஆள் தொடர்பில் மட்டுப்படுத்தற் கட்டளையொன்று அல்லது அதன் நீடிப்பொன்று ஆக்கப்பட்டுள்ளதோ, அந்த ஆள் அல்லது அவரது சார்பில் சட்டத்தரணி ஒருவர், அத்தகைய கட்டளையை மீளாய்வுசெய்யும்படி அல்லது இல்லாதொழிக்கும்படி நாடி, அத்தகைய கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(11) மேன்முறையீட்டுக்கான ஏதுக்களையும் அத்தகைய கட்டளையை ஆக்குவதற்காக சனாதிபதியினாலும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினாலும் குறித்தளிக்கப்பட்ட காரணங்களையும் கவனத்துட்கொண்டு, மேன்முறையீட்டு நீதிமன்றம், அத்தகைய மேன்முறையீடு முன்வைக்கப்பட்ட தேதியிலிருந்து ஒருமாதத்தினுள் அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தை முடிவுக்குக் கொண்டுவருதல் வேண்டும்.

ஊரடங்குக் கட்டளைகள்.

**84.** (1) (140 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சனாதிபதி, (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகவும் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமையவும் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகள் மற்றும் வான்வெளி உள்ளடங்கலாக ஒன்றில் அதன் முழுமைக்கு அல்லது பாகத்துக்கு இச்சட்டத்தின் கீழ் (இதனகத்துப்பின்னர், "ஊரடங்குக் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி யொன்றிற்காக ஊரடங்கை வர்த்தமானியில் வெளியிடப்படும் அத்தகைய கட்டளைமூலம் வெளிப்படுத்தலாம்.

(2) சனாதிபதி, பின்வரும் நோக்கங்களுக்காக ஊரடங்குக் கட்டளையொன்றை வெளிப்படுத்தலாம்–

(அ) இச்சட்டத்தின்கீழ் பயங்கரவாத மற்றும் வேறு தவறுகளின் முறைமைசார்ந்த மற்றும் பரந்த அளவிளதான புரிதல் பற்றிய நிகழ்வை கட்டுப்படுத்தல், கண்டுபிடித்தல் அல்லது புலனாய்வு செய்தல்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் பயங்கரவாத மற்றும் வேறு தவறுகளிலிருந்து தேசிய அல்லது பொதுமக்கள் பந்தோபஸ்தினைப் பாதுகாத்தல்;

(இ) இச்சட்டத்தின்கீழ் முறைமைசார்ந்த மற்றும் பரந்தளவினதான தவறுகளின் புரிதலைத் தடுத்தல்.

(3) (அ) ஏதேனும் ஊரடங்குக் கட்டளையொன்றின் அதிகபட்ச காலப்பகுதி ஒரு சந்தர்ப்பத்தில் இருபத்திநான்கு மணித்தியாலங்களை விஞ்சுதலாகாது.

(ஆ) இரண்டு ஊரடங்குக் காலப்பகுதிகளுக்கிடையில் குறைந்த பட்சம் மூன்று மணித்தியாலக் காலப்பகுதியொன்றைக் கொண்ட இடைவெளி ஒன்று இருத்தல் வேண்டும்.

(4) ஊரடங்குக் கட்டளையொன்று மனிதாபிமான தேவைகளை ஏற்பாடுசெய்வதற்கு விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலக்களிப்புகளுக்கு அமைய ஆக்கப்படலாம்.

(5) அத்தகைய ஏதேனும் ஊரடங்குக் கட்டளை–

(அ) அத்தகைய கட்டளையின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்படுகின்ற ஆட்களின் வகுதிகளைக் குறித்துரைத்தல் வேண்டும்;

(ஆ) (i) ஊரடங்குக் கட்டளைக்கு அமைந்தொழுகுவதிலிருந்து எவரேனும் ஆளை அல்லது ஆட்களை விலக்களிக்கும்; அத்துடன்

(ii) அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தியாவசிய சேவைகள் மற்றும் வழங்குகைகள், அவசரகாலத் தேவைப்பாடுகள் மற்றும் மனிதாபிமான தேவைகளைப் பேணும் தேவை காரணமாக ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குப் பயணிப்பதற்கு அத்தகைய ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அதிகாரமளிக்கும்,

அத்தகைய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான எவரேனும் ஆளையும் குறித்துரைத்தல் வேண்டும்.

(6) ஊரடங்குக் கட்டளையொன்றிலிருந்து முழுமையாக அல்லது பகுதியளவில் விலக்களிக்கப்படுவதற்குத் தேவையுடையவராகவுள்ள எவரேனும் ஆள், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அதிகாரிக்கு விண்ணப்பமொன்றைச் செய்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(7) ஊரடங்குக் கட்டளையொன்றை வேண்டுமென்றே மீறும் ஆளொருவர், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் நீதிவான் ஒருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

(8) இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்கான வேறு எல்லா வழிவகைகளும் பயனற்றனவாக எண்பிக்கப்பட்டுள்ள விடத்து, ஊரடங்குக் கட்டளையொன்றுடன் இணங்கியொழுகு வதனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான நியாயமான வலோற்காரத்தைப் பயன்படுத்துவது எவரேனும் கைதுசெய்யும் அலுவலருக்கு சட்டமுறைமையானதாதல் வேண்டும்.

தடை செய்யப்பட்ட இடங்கள்

**85.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதி அல்லது முறையே தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் ஏவுநர் அல்லது கரையோரக் காவல் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரையொன்றின்மேல் சனாதிபதி காலத்திற்குக்காலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் (இதனகத்துப்பின்னர், "தடைசெய்யப்பட்ட இடம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தடைசெய்யப்பட்ட இடமொன்றாக விருப்பதற்கு ஏதேனும் பொது இடத்தை அல்லது வேறேதேனும் அமைவிடத்தை விதிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான கட்டளை, உட்பிரவேசித்தல்மீதான தடைகளை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன் அவசியமேற்படு மிடத்து, தடைசெய்யப்பட்ட இடத்தை புகைப்படங்கள் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் மற்றும் அவற்றின் படவரைவுகளை ஆக்குதல் மீதான தடைகளையும் உள்ளடக்கலாம்.

(3) தடைசெய்யப்பட்ட இடமொன்று தொடர்பில் வர்த்தமானியில் கட்டளையை வெளியிடுவதற்கு மேலதிகமாக வேறு வழிவகை களினூடாக போதிய பிரசித்தம் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) இடமொன்று தடைசெய்யப்பட்ட இடமொன்றாக வெளிப் படுத்தப்படுவதன்மேல், அறிவித்தல்கள், அத்தகைய இடம் தடை செய்யப்பட்ட இடமொன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது என சுட்டிக்காட்டி இயன்றவிடத்து அத்தகைய இடத்துக்கான நுழைவுப் புள்ளிகளிடத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டபின்னர், சனாதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டவாறு தடைசெய்யப்பட்ட இடத்தின்மீது சட்டமுறையான அதிகாரம் மற்றும் கட்டுப்பாட்டைக்

கொண்டுள்ள பொறுப்பான அலுவலர் அல்லது வேறு எவரேனும் ஆள், அத்தகைய இடத்தில் நுழைந்து தங்கியிருப்பதற்கு அதிகாரமளிக்கப்படவேண்டிய ஆட்களின் வகுதிகளை குறித் துரைத்தல் வேண்டுமென்பதுடன் அவரும், அவர் குறித்துரைக்கக் கூடிய நிபந்தனைகளின்மேல் அத்தகைய இடத்துக்கு நுழைவதற்கு எவரேனும் வேறு ஆளுக்கு அதிகாரமளிப்பதற்கு உரித்துடைய வராதலும் வேண்டும்.

(6) சட்டமுறையான அதிகாரமின்றி தடைசெய்யப்பட்ட இடமொன்றில் நுழைவதன்மூலம் அல்லது தங்கியிருப்பதன்மூலம் ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை வேண்டு மென்றே மீறும் எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுவதன்மீது மூன்று ஆண்டு களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கும் மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) தடைசெய்யப்பட்ட இடமொன்றை புகைப்படம் எடுத்தல், ஒளிப்பதிவு செய்தல் மற்றும் படவரைவுகளை ஆக்குதல்மூலம் (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை வேண்டு மென்றே மீறும் எவரேனும் ஆள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுவதன்மீது மூன்று ஆண்டு களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது மூன்று இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதலும் வேண்டும்.

ஆதனத்தைக் கைப்பற்றுதல், பறிமுதல் செய்தல் மற்றும் இழப்பித்தல்

**86.** (1) எவரேனும் பொலிஸ் அலுவலர், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது அதனைப் புரிவதில் சம்பந்தப்பட்ட அல்லது அதனைப் புரிவதில் பெறப்பட்ட ஏதேனும் அசையும் ஆதனத்தைக் கைப்பற்றலாம்.

(2) அத்தகைய ஏதேனும் கைப்பற்றுகை பொலிஸ் நிலைய மொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அலுவலரொருவரால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின்மேல் நீதிவான் ஒருவரினால் உறுதிப்படுத் தப்பட்டு நீடிக்கப்பட்டாலேயொழிய, அத்தகைய கைப்பற்றுகை, அத்தகைய கைப்பற்றுகையிலிருந்து மூன்று நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கு செல்லுபடியானதாதல் வேண்டும்.

(3) மேற்சொல்லப்பட்டவாறு அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டு நீடிக்கப்படாத ஆதனத்தின் ஏதேனும் கைப்பற்றுகை, சொல்லப்பட்ட மூன்று நாட்கள் காலப்பகுதி முடிவுற்றதன்பின்னர் பயனில்லா தொழிதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டு நீடிக்கப்பட்ட ஆதனத்தின் ஏதேனும் கைப்பற்றுகை, நீதிவான் ஒருவரினால் அதிகாரமளிக்கப்பட்டாலேயொழிய, அத்தகைய உறுதிப்படுத்துதலிலிருந்து தொண்ணூறு நாட்கள் முடிவுற்றதன் மேல் வலுவிலில்லாதொழிதல் வேண்டும்; அவர், பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலரினால் செய்யப்பட்ட கோரிக்கையொன்றின்மேல் இயைபான தவறு தொடர்பான விளக்கத்தின் முடிவுவரை கைப்பற்றுகையின் நீடிப்புக்கு அதிகாரமளிக்கலாம்.

(5) எவரேனும் ஆள், அவ்வாறு கைப்பற்றிய ஆதனம் தொடர்பில் அவரது உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டுகின்றவிடத்து–

(அ) அத்தகைய ஆள், தவறு புரியப்படுவதை அறியாத நல்லெண்ணத்துடனான சொந்தக்காரராக இருக்கின்றார்; அல்லது

(ஆ) அத்தகைய ஆள், அத்தகைய தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தைப் பிரயோகித்துள்ளார்,

என நீதிவான் திருப்திப்படின், விதிக்கப்படக்கூடியவாறான நிபந்தனைகளின்மேல் உரிமைக்கோரிக்கையை நிலைநாட்டுகின்ற ஆளுக்கு அத்தகைய ஆதனத்தை அவர் விட்டுவிடலாம்.

(6) எவரேனும் ஆள் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்றவிடத்து, நீதிமன்றமானது அத்தகைய தவறைப்புரிவதில் பயன்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய தவறிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்பட்டு அரசினால் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும் என அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு ஒன்றைத் தீர்மானிப்பதற்கு அமைந்ததான கட்டளையை ஆக்கலாம்.

(7) எவரேனும் ஆள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளவிடத்து, நீதிமன்றம், அத்தகைய தவறைப் புரியும்போது பயன்படுத்தப்பட்ட அல்லது அதன்போது பெறப்பட்ட ஏதேனும் ஆதனம் அரசுக்கு இழப்பிக்கப்பட்டு அரசினால் பறிமுதல் செய்யப்படுதல் வேண்டும் என கட்டளையை ஆக்கலாம்.

(8) ஆறாம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரின் அறிவு அல்லது சம்மதமின்றி இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு எவரேனும் ஆளினால் பயன்படுத்தப்பட்ட, அரசுக்கு அவ்வாறு இழப்பிக்கப்பட்டு அரசினால் பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் ஆதனம், அத்தகைய இழப்பித்தல் மற்றும் பறிமுதல் செய்தலிலிருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(10) ஐந்தாம், (6) ஆம், (7) ஆம் மற்றும் (8) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு பயன்படுத்தப்பட்ட ஏதேனும் சாதனம், ஆயுதம், வெடிமருந்து அல்லது கொன்கலனிற்கு ஏற்புடையதாகாது.

பாகம் XI

**தண்டனைத் தீர்ப்பளித்தல் வழிகாட்டுநெறிகள்**

*தீவிரப்படுத்தும் காரணிகள்*

**87.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்ததாக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவரின் மீது விதிக்கப்படவேண்டிய மறியற்றண்டனைக்காலத்தை தீர்மானிக்கும்போது, பின்வரும் காரணிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய அதிகரிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலத்தை விதித்தலை அனுமதிக்கும் தீவிரப்படுத்தும் காரணிகளாக கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கையின் அல்லது வேறு ஏதேனும் இறைமையுள்ள நாட்டின் ஆள்புல ஒருமைப்பாடு அல்லது இறைமைமீது இயைபான தவறைப்புரிதலின் விளைவு;

(ஆ) இலங்கையின் பாதுகாப்பு அல்லது பந்தோபஸ்துமீது இயைபான தவறைப் புரிவதின் விளைவு;

(இ) தவறைப் புரிதலின் காரணமாக இழந்த உயிர்களின் எண்ணிக்கை;

(ஈ) தவறைப் புரிதலானது பொதுமக்கள் சமாதான மின்மையை விளைவித்துள்ளதா என;

(உ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளின்மீது ஏற்படுத்தப்பட்ட ஊறுபாடுகள் அல்லது தீங்குகள்;

(ஊ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோரின்மீதான தாக்கம் மற்றும் அவர்களுக்கு ஏற்பட்ட விளைவுகளின் தீவிரப்படுத் தப்பட்ட தன்மை;

(எ) பொதுமக்களின் பாதுகாப்பின்மீதான விளைவு;

(ஏ) இலங்கை மக்களின் சமாதானமான சகவாழ்வின்மீதான தாக்கம்;

(ஐ) இலங்கை அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் விளை விக்கப்பட்ட நிதிசார் மற்றும் பொருள் வகையிலான இழப்பு;

(ஒ) விளைவிக்கப்பட்ட சேதங்களை இழப்பீடு செய்வதற் காகவும் மீட்டெடுப்பதற்காகவும் தேவைப்படுத்தப்பட்ட நிதிசார் மற்றும் வேறு வளங்கள்; அத்துடன்

(ஓ) தீவிரப்படுத்தும் காரணியொன்றாக கருத்திற்கொள்ளப் படுவதற்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான வேறு ஏதேனும் காரணி.

தணிக்கின்ற காரணிகள்

**88.** இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்ததாக குற்றத்தீர்ப் பளிக்கப்பட்ட ஆளொருவரின்மீது விதிக்கப்படவேண்டிய மறியற் றண்டனை காலத்தை தீர்மானிக்கும் போது, பின்வரும் காரணிகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய குறைக்கப்பட்ட மறியற் றண்டனைக் காலத்தை அனுமதிக்கும் தணிக்கும் காரணிகளாக கருத்திற்கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) பகிரங்கமாக பயங்கரவாதத்திற்கு கண்டனம் தெரிவித் தல்;

(ஆ) கழிவிரக்கத்தை வெளிப்படுத்துதல்;

(இ) தவறைப்புரியும் போது இளவயதாகவிருத்தல்;

(ஈ) தண்டனைத் தீர்ப்பளிக்கும்போது முதிய வயதாகவிருத் தல்;

(உ) தடுத்துவைத்தல் அல்லது விளக்கமறியலில் செலவிடப் பட்ட நேர காலப்பகுதி;

(ஊ) எந்த வல்லந்தம் அல்லது வலுக்கட்டாயத்தின்கீழ் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்த வல்லந்தம் அல்லது வலுக் கட்டாயம்;

(எ) தவறுக்குப் பலியாக்கப்பட்டோருக்கு குற்றம் சாட்டப்பட்ட வரினால் தன்னிச்சையான இழப்பீடு வழங்குதல்;

(ஏ) எந்த வன்முறை மற்றும் வேறு தவறுகள் தொடர்பில் குற்றம்சாட்டப்பட்டவர் குற்றவாளியாக குற்றத்தீர்ப் பளிக்கப்பட்டாரோ அந்த வன்முறை மற்றும் வேறு தவறுகளை பகிரங்கமாகக் கண்டித்தல்;

(ஐ) இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் இறைமையை பேணிப்பாதுகாத்தல் மற்றும் பாது காத்தலை நோக்கிய மெய்யான உறுதிபூண்டல்;

(ஒ) நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டமொன்றில் தன்னிச்சையாக பங்குபற்றுதல் மற்றும் அதனை நிறைவுசெய்தல்; அல்லது

(ஓ) தணிக்கின்ற காரணியொன்றாக கருத்திற்கொள்ளப் படுவதற்கு நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் காரணி.

*சுயாதீன பரிசீலனைக் குழாம்*

**89.** (1) மனித உரிமைகள் சட்டம் மற்றும் குற்றவியல் நீதித் துறைகளில் நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள ஆட்களிலிருந்து மூன்று ஆட்களைக் கொண்ட (இதனகத்துப் பின்னர் "பரிசீலனைக் குழாம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) சுயாதீன பரிசீலனைக் குழாம் ஒன்றை சனாதிபதி நியமித்தல் வேண்டும்.

(2) பரிசீலனை குழாத்தின் உறுப்பினர்களில் ஒருவர், பரிசீலனைக் குழாத்தின் தவிசாளராக சனாதிபதியினால் நியமிக்கப் படுதல் வேண்டும்.

*உறுப்பினர் களின் பதவிக்காலம்*

**90.** பரிசீலனைக் குழாத்தின் ஒவ்வொரு உறுப்பினரும், அத்தகைய உறுப்பினர் அத்தகைய காலம் முடிவுறுவதற்கு முன்னர் பதவியை வறிதாக்கினாலொழிய அவரது நியமனத்திலிருந்து மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்கு பதவி வகித்தல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பதவியை வறிதாக்குதலும் அவர்கள் பதவியிலிருந்து அகற்றப் படுதலும்*

**91.** (1) மூன்றாம் உட்பிரிவின்கீழ் பதவியிலிந்து அகற்றப்படுவதன்மூலம் அல்லாது வேறுவகையாக பதவியை வறிதாக்குகின்ற எவரேனும் உறுப்பினர் மீள நியமிக்கப்படுவதற்கு தகவுடையவராதல் வேண்டும்.

(2) உறுப்பினரொருவரின் பதவி பின்வருவனவற்றின் போது வறிதாக வருதல் வேண்டும்-

(அ) அத்தகைய உறுப்பினரின் இறப்பின்மேல்;

(ஆ) அத்தகைய உறுப்பினர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் அத்தகைய பதவியிலிருந்து விலகுவதன்மேல்;

(இ) அத்தகைய உறுப்பினர் அதன் (3) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஏதுவின்மீது பதவியிலிருந்து அகற்றப்படுவதன்மேல்; அல்லது

(ஈ) அத்தகைய உறுப்பினரின் பதவிக்காலம் முடிவுறுவதன்மீது.

(3) பரிசீலனைக் குழாத்தின் உறுப்பினரொருவர் பின்வருமாறு இருப்பின், அத்தகைய ஆள் சனாதிபதியினால் பதவியிலிருந்து அகற்றப்படலாம்-

(அ) தகுதியான நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் கடனிறுக்க வகையற்றவரொருவரென தீர்ப்பளிக்கப்பட்டால்;

(ஆ) சனாதிபதியின் அபிப்பிராயத்தில் பரிசீலனைக் குழாத்தின் உறுப்பினரொருவராக அவரது கடமைகளுடன் அக்கறை முரண்பாடொன்றைக் கொண்டிருப்பதாகக் காணப்பட்டால்;

(இ) உள அல்லது உடற்றகுதியீனம் காரணமாக தொடர்ந்து பதவியிலிருப்பதற்கு தகுதியற்றவராகவிருந்தால்;

(ஈ) தகுதியான நியாயாதிக்க நீதிமன்றமொன்றினால் சித்தசுவாதீனமற்றவராக வெளிப்படுத்தப்பட்டால்; அல்லது

(உ) ஒழுக்கக்கேட்டை உட்படுத்துகின்ற தவறொன்றிற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால்.

(4) தவிசாளர் சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தவிசாளரின் பதவிக்காலம் பரிசீலனைக் குழாத்தின் உறுப்பாண்மை காலப்பகுதியாகவிருத்தல் வேண்டும்.

(6) (அ) பரிசீலனைக் குழாத்தின் தவிசாளர் சுகயீனம் அல்லது வேறு தகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு பரிசீலனைக் குழாத்தின் வேறு எவரேனும் உறுப்பினரை நியமிக்கலாம்.

(ஆ) பரிசீலனைக் குழாத்தின் உறுப்பினரொருவர் சுகயீனம் அல்லது வேறு தகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காக அவரது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு தற்காலிகமாக இயலாதவராக வந்தால், சனாதிபதி அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(இ) 89 ஆம் மற்றும் 91 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் தவசாளராக அல்லது உறுப்பினராக செயலாற்றுவதற்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) பரிசீலனைக் குழாத்தின் எவரேனும் உறுப்பினர் அல்லது தவிசாளர் சனாதிபதிக்கு அதற்கென முகவரியிட்டனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் எந்நேரத்திலும் பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி விலகுகை சனாதிபதியினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(8) (அ) எவரேனும் உறுப்பினரின் இறப்பு, பதவி விலகுகை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் ஏற்படும்பட்சத்தில் சனாதிபதி 89 ஆம் மற்றும் 91 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக் கமைய அவரது இடத்தில் செயலாற்றுவதற்கு இன்னொரு ஆளை நியமிக்கலாம்.

(ஆ) சனாதிபதி அத்தகைய வெற்றிடம் இடம்பெற்றதிலிருந்து ஒரு மாதத்தினுள் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காக அவ்வுறுப்பினரை நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (அ) வின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.

**92.** பரிசீலனைக் குழாத்தின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாதல் வேண்டும்- பரிசீலனைக் குழாத்தின் தத்துவங்களும் பணிகளும்

(அ) இச்சட்டத்தின் கீழ் பொலிசு அலுவலர்களின், ஆயுதந் தாங்கிய படைகளின் அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்களின் அத்துடன் கரையோரக் காவல் அலுவலர்களின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் மற்றும் அவர்களின் பணிகளை நிறைவேற்றும் முறையை பரிசீலனை செய்வதற்கென அவர்களுடன் கூட்டம் கூடுதல்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் பரிசீலனைக் குழாத்தின் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக தேவைப்படுத்தப்பட்ட இயைபான தகவல்கள் மற்றும் வேறு விடயங்களுக்கான அணுக்கத்தைக் கொண்டிருத்தல்;

(இ) பரிசீலனைக் குழாம் அவசியமெனக் கருதுகின்றவாறான ஆட்களுடன் அந்தரங்க நேர்காணல்களை நடாத்துதல்;

(ஈ) அரசியலமைப்பினால் உத்தரவாதப்படுத்தப்படும் அடிப்படை உரிமைகளுக்கு இணங்கியொழுக, இச்சட்டத்தின்கீழ் தத்துவங்களைப் பிரயோகித்தல் மற்றும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக பொலிசு அலுவலர்கள், ஆயுதந்தாங்கிய படைகளின் மற்றும் உறுப்பினர்கள் அத்துடன் கரையோரக் காவல் அலுவலர்களுக்கு மதியுரையளித்தல்;

(உ) ஆளணியினருக்குப் பயிற்சியளித்தல், சாதனங்களை பெறுகை செய்தல் மற்றும் வேறு இயைபான கருமங்கள் தொடர்பாக பொலிசு அலுவலர்கள், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் அத்துடன் கரையோரக் காவல் அலுவலர்களின் தேவைகள் பற்றி சனாதிபதிக்கு மதியுரையளித்தல்;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் தத்துவங்களைப் பிரயோகித்தலினதும் பணிகளை நிறைவேற்றுதலினதும் விளைவான அடிப்படை உரிமைகளின் சார்த்தப்பட்ட மீறுகைகள் தொடர்பாக முறைப்பாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைப் பெறுதல்;

(எ) 40 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடுகளை பெறுதலும் அவற்றைக் கவனத்திற்கொள்ளுதலும்;

(ஏ) பின்வருவன தொடர்பாக சனாதிபதிக்கும் பாராளு மன்றத்துக்கும் சனாதிபதி அவசியமெனக் கருதுகின்ற வாறான ஆண்டறிக்கைகளையும் வேறு அறிக்கைகளையும் வழங்குதல்–

(i) பொலிசு அலுவலர்கள், ஆயுதந்தாங்கிய படைகளின் அலுவலர்கள் மற்றும் உறுப்பினர்கள் அத்துடன் கரையோரக்காவல் அலுவலர் களினாலான தத்துவங்களின் பிரயோகம்;

(ii) தத்துவங்களின் அத்தகைய பிரயோகத்தின் விளைவான அடிப்படை உரிமைகளின் மீறுகை பற்றிய சார்த்துதல்கள்;

(iii) பயிற்சி, சாதனங்கள், தர நிர்ணயம் அல்லது வேறு கருமங்களுக்காக அத்தகைய அலுவலர் களின் தேவைகள்; அத்துடன்

(iv) இயைபான எழுத்திலான சட்டத்தை சீர்திருத்து வதற்கான யோசனைகள்:

ஆயின் எவ்வாறாயினும், பரிசீலனைக் குழாம், அத்தகைய அறிக்கைகளிலுள்ள எந்த தகவல்களின் வெளிவிடுகை புலனாய்வின் கீழான ஏதேனும் கருமத்துக்கு பங்கமாக இருக்கும் என குழாம் நியாயமான முறையில் நம்புகின் றதோ அந்த ஏதேனும் குறிப்பிட்ட தகவல்களின் விபரங் களை உள்ளடக்குதல் ஆகாது; அத்துடன்

(ஐ) (ஊ) மற்றும் (எ) ஆகிய பந்திகளின் ஏற்பாடுகளுக்கமைய, பரிசீலனைக்குழாத்திற்கு வெளிவிடப்பட்ட தகவல்கள் தொடர்பாக கண்டிப்பான அந்தரங்கத்தன்மையைப் பேணுதல்.

உறுப்பினர்கள் பகிரங்க சேவையாளர் களாகக் கருதப் படுதல் வேண்டும்

**93.** (1) பரிசீலனைக் குழாத்தின் உறுப்பினர்கள் (இச்சட்டத்தின் கீழ் அவர்களின் பணிகளின் வரையறுக்கப்பட்ட நோக்கத்துக்காக) தண்டனைச் சட்டக்கோவை, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டம் மற்றும் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக "பகிரங்க சேவையாளர்களாக" கருதப்படுதல் வேண்டும்.

(2) பரிசீலனைக் குழாம் இலஞ்சச் சட்டத்தின் கருத்தினுள் "அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனம்" ஒன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

பரிசீலனைக் குழாத்தின் அறிக்கைகளும் ஆண்டறிக் கைகளும்

**94.** (1) சனாதிபதி ஒவ்வோராண்டின் இறுதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பரிசீலனைக் குழாத்தின் அறிக்கைகளையும் பின்வருவன தொடர்பான விபரங்களை உள்ளடக்க வேண்டிய ஆண்டறிக்யொன்றையும் பாராளுமன்றத்தின் முன்னர் இடுதல் வேண்டும்:-

(அ) இச்சட்டத்தின் கீழ் பொலிசு அலுவலர்கள், ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் அத்துடன் கரையோர காவல் அலுவலர்களினாலான தத்துவங்களின் பிரயோகம்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், பணிப்புகள் மற்றும் கட்டளைகள்; அத்துடன்

(இ) பொலிசு அலுவலர்கள், ஆயுதந்தாங்கிய படைகளின் உறுப்பினர்கள் அத்துடன் கரையோரக் காவல் அலுவலர்களினாலான தத்துவங்களின் பிரயோகத்தின் விளைவான எவரேனும் ஆளின் அடிப்படை உரிமைகளின் மீறுகை தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடுகள் அல்லது சார்த்துதல்கள் எவையேனுமிருப்பின் அவை:

ஆயின், சனாதிபதி, புலனாய்வின்கீழ் ஏதேனும் கருமத்துக்கு பங்கமாகவிருக்கக்கூடும் என அவர் நியாயமானமுறையில் நம்புகின்ற அந்தரங்கத் தகவல்களை வழங்குதல் ஆகாது.

(2) பாராளுமன்றமானது, அத்தகைய அறிக்கைகளை மேலதிக நுணித்தாராய்வுக்காக ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பாராளுமன்றக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

## பாகம் XII

## பொது

*குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகள் ஏற்புடையன வாகாது*

**95.** குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்தின் 306 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நீதிமன்றத்தின்முன்னர் குற்றவாளியென மன்றுரைக்கின்ற அல்லது குற்றவாளியாகக் காணப்படுகின்ற எவரேனும் ஆள் விடயத்தில் ஏற்புடையனவாதலாகாது.

*சிறுவர்கள் கட்டளைச் சட்டம் ஏற்புடையன வாகும்*

**96.** (23 ஆம் அத்தியாயமான) சிறுவர்கள் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்ததற்காக குற்றவாளியெனக் காணப்பட்டு குற்றத்தீர்ப்பளிக்கப்படுகின்ற எவரேனும் பிள்ளைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

*ஆட்கள் குழுக்களினால் புரியப்படும் தவறுகள்*

**97.** இச்சட்டத்தின்கீழான தவறொன்று, ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அந்த ஆட்கள் குழு-

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருப்பின் அக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஒவ்வொரு பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அலுவலரும்; அல்லது

(ஆ) குழுமமொன்றாகவிருப்பின், அக்குழுமத்தின் ஒவ்வொரு பங்காளரும்; அல்லது

(இ) குழுமமொன்றாகவிராத கூட்டிணைக்கப்படாத குழுவொன்றாகவிருப்பின், அதன் முகாமைக்கும் கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாகவுள்ள அக்குழுவின் ஒவ்வோர் அலுவலரும்,

அத்தகைய தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்:

ஆயின், அத்தகைய தவறு தமது அறிவில்லாமல் புரியப்பட்டதென அல்லது அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்கு எல்லா விழிப்புக் கவனத்தையும் பிரயோகித்தாரென அத்தகைய ஆள் எண்பிப்பாராயின், அந்த ஆள் எவரும் அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் ஆகாது.

**98.** (1) சனாதிபதி, இச்சட்டத்தின் நோக்கங்கள், நெறிகள் மற்றும் ஏற்பாடுகளை நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன் கொடுக்கும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்

(2) சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ்வொழுங்கு விதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும், அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதிலிருந்து முப்பது நாட்களினுள் அதன் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(4) அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் உரியமுறையில் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஓர் ஒழுங்குவிதி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படும் தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**99.** (1) சனாதிபதி காலத்துக்குக்காலம் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கு அமைய பணிப்புக்களை வழங்கலாம்; அவை, எந்தமுறை யில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் வலுவுக்குறப்படுத்தப் படவேண்டுமோ அந்த முறை தொடர்பாக பொலிசு அலுவலர்களுக்கும் ஆயுதந் தாங்கிய படைகளின் உறுப்பினர்களுக்கும் மற்றும் கரையோரக் காவல் அலுவலர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும். பணிப்புக்கள்

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பணிப்புக்கள், பயனுள்ள முறையிலும் சட்டத்தால் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் தரநெறிகள் மற்றும் நியமங்களுக்கு இணங்கியொழுகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக மட்டுமே இருத்தல் வேண்டும்.

(3) அத்தகைய ஒவ்வொரு பணிப்பும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**100.** (1) சனாதிபதி, எந்த ஆட்கள் தொடர்பில் சட்டத்துறை தலைமையதிபதி 71 ஆம் பிரிவின்கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை இடைநிறுத்தும்படி மற்றும் பின்போடும்படி விதந்துரைத்துள்ளாரோ அல்லது சட்டத்துறை தலைமையதிபதி 77 ஆம் பிரிவின்கீழ் குற்றப்பத்திரங்களை மீளப்பெற்றுள்ளாரோ அந்த ஆட்களுக்காக புனர்வாழ்வளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். புனர்வாழ் வளித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதிகள் பின்வருவன வற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதால் எய்தப்படவேண்டிய குறிக்கோள்கள்;

(ஆ) புனர்வாழ்வளித்தல் செயற்பாடுகளின் தன்மை;

(இ) வழங்கப்படவேண்டிய பயிற்சியின் தன்மை;

(ஈ) புனர்வாழ்வளித்தலை அல்லது பயிற்சியை நடாத்தும் அதிகாரசபை அல்லது அதிகாரசபைகள்;

(உ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமைவிடம்;

(ஊ) நிகழ்ச்சித்திட்டத்தின் கால எல்லை; அத்துடன்

(எ) இப்பிரிவின் கீழ் ஏதேனும் புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான ஏதேனும் வேறு கருமம்.

இச்சட்டம் வேறு எழுத்திலான சட்டத்தை மேலோங்கியிருத்தல்

**101.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ளது எது எவ்வாறிருப்பினும் பயனுறுதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அத்தகைய வேறு எழுத்திலான சட்டத்திற்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

நீதிமுறை பரிசீலனை

**102.** அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, நீதிமுறை மீளாய்வினூடாக நிவாரணத்தை நாடி, இச்சட்டத் தின்கீழ் ஏதேனும் இயைபான அதிகாரியினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபு, தீர்மானம், கட்டளை அல்லது பணிப்பினால் இன்னலுற்ற எவரேனும் ஆளை தடுப்பதாக இச்சட்டத்தில் உள்ள எதுவும் வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

## பாகம் XIII

## நீக்குகையும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சட்டத்தை நீக்குதல்

**103.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து ஒன்பதாம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம், இத்தால் நீக்கப்படுகின்றது.

நிலைபெயர்கால ஏற்பாடுகள்

**104.** (இதனகத்துப்பின்னர், "நீக்கப்பட்ட சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் நீக்கம் எவ்வாறிருப் பினும்-

(அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று, ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது வேறு அதிகாரசபையிடம் இச்சட்டத்தின்கீழ் நடத்தப்பட்டதும், நடாத்தப்பட்டதும், முன்வைக்கப்பட்டதும் அல்லது செய்யப்பட்டதும் மற்றும் முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஏதேனும் புலனாய்வு, விளக்கம், மேன்முறையீடு அல்லது விண்ணப்பம் நடவடிக்கைமுறை மற்றும் சான்று தொடர்பான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயல்முறைக்கு உகந்த வரையில் கையுதிர்க்கப்படுதல், தொடரப்படுதல், நடாத்தப்படுதல் அல்லது ஏற்றுக்கவனிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளார் அல்லது அதனைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளார் என சந்தேகிக்கப்பட்டவரும், இச்சட்டம் தொடங்கும் தேதியன்று உள்ளவாறு வழக்குநடவடிக்கைகள் தொடுக்கப்பட்டிராத வருமான எவரேனும் ஆள், நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் எதிராக குற்றவழக்கு தொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் தவறுக்கான சட்ட வழக்கு நடவடிக்கைகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செயல்முறைக்கு உகந்தவரையில் இயைபான அதிகாரியினால் நடாத்தப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏதேனும் தவறுக்கான குற்றப்பத்திரத்தை கோப்பிடுவதற்கு முன்னர், சட்டத்துறைத் தலைமையதிபதி, முறையே இச்சட்டத்தின் 71 ஆம் பிரிவின்கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளை இடைநிறுத்துவதற்கு அல்லது பின்போடுவதற்கான நிகழ்தகவை கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்;

(இ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின்கீழ் ஏதேனும் குற்றவியல் வழக்குநடவடிக்கையில் நிறைவேற்றப்பட்ட எல்லாத் தண்டனைத்

தீர்ப்புக்களும் பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட தீர்வை அல்லது கட்டளை, இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடு களின்கீழ் முறையே நிறைவேற்றப்பட்டதாக, பதியப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்ப துடன் அதற்கிணங்க வலுவுறுத்தப்படுதலும் அதற்குப் பயன்கொடுக்கப்படுதலும் வேண்டும்;

(ஈ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர், நீக்கப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட எல்லா ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள், ஏதேனும் ஒழுங்கமைப்பை தடைசெய்யும் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாக ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப் படாமலும் 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 29 ஆந்தேதிய 1721/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாகவும் இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப் பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அதற் கிணங்க வலுவுறுத்தப்படுதலும் அதற்குப் பயன்கொடுக் கப்படுதலும் வேண்டும்.

**105**. (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப் படுத்தினாலேயொழிய- பொருள் கோடல்

"வானூர்தி" என்பது, உலங்கு வானூர்தியொன்றை உள்ளடக்குகின்றது;

"ஆயுதந்தாங்கிய படைகள்" என்பது, (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை தரைப்படை மற்றும் (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை கடற்படை மற்றும் (339 ஆம் அத்தியாமான) வான்படைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வான்படை எனப் பொருள்படும்;

"கரையோரக் காவல்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, கரையோரக் காவல் திணைக்களச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கரையோரக் காவல் திணைக்களம் எனப் பொருள்படும்;

"குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டம் எனப் பொருள்படும்;

"காணி ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, (464 ஆம் அத்தியாயமான) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 204 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் தலைமையதிபதி" என்பது, 1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"அந்தரங்கத் தகவல்" என்பது-

(அ) எத்தகவலைப் பரப்புவது, இலங்கையின் பாதுகாப்பு மற்றும் காப்பின்மீது பங்கமான தாக்கமொன்றிருப்பதற்கு சாத்தியத்தைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் தகவல் எனப்பொருள்படும்;

(ஆ) பின்வருவன தொடர்பாக பொதுமக்கள் தளத்தில் இல்லாத எந்த தகவல், தேசிய பாதுகாப்பு அல்லது பொதுமக்கள் பாதுகாப்புமீது பங்கமான தாக்கமொன்று இருப்பதற்கு சாத்தியத்தைக் கொண்டுள்ளதோ அந்த ஏதேனும் தகவல் எனப் பொருள்படும்-

(i) பொலிசு, ஆயுதந் தாங்கிய படைகள் அல்லது கரையோரக் காவல் திணைக் களத்தின் ஆட்கள்;

(ii) குறித்துரைக்கப்பட்ட ஆளொருவரின் பணிகள், அசைவுகள் அல்லது இருப்பிடங் கள்;

(iii) தடைசெய்யப்பட்ட இடம் ஒன்று அல்லது தடுத்துவைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட இடம் ஒன்று;

(iv) இச்சட்டத்தின்கீழான தவறுகள் பற்றி புலனாய்வுகளை நடாத்துதல், அத்தகைய புலனாய்வுகளின் கண்டுபிடிப்புகள், கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் புலனாய்வுகளை நடாத்தும் அலுவலர்களின் அடையாளம்;

(இ) நிறைவேற்றப்படுவதற்கு உட்கருதப்பட்ட அல்லது நிறைவேற்றப்படுகின்ற அல்லது நிறைவேற்றப் பட்டுள்ள ஏதேனும் சட்ட வலுவுறுத்தல் அல்லது இராணுவ வழிமுறைகள் உள்ளடங்கலாக, ஏதே னும் அலுவலகமுறையான செயற்பாட்டை நடாத்து வதன் மீது பொலிசு அல்லது ஆயுதந்தாங்கிய படைகள் தொடர்பான ஏதேனும் தகவல்;

(ஈ) தேசிய பாதுகாப்பு மற்றும் காப்பு தொடர்பான ஏதேனும் இரகசிய குறியீடு, சொல், கடவுச்சொல் அல்லது மறைக்குறியீட்டாக்க விபரம்;

"குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி" என்பது, (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

*"இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி" என்பது, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கட்டுப் பாட்டாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;*

*"ஊரடங்கு" என்பது, ஏதேனும் வீதி, புகையிரதப் பாதை, சுரங்கப்பாதை, ஆள்புல கடல், அருவி, பூங்கா, சந்தை, கடற்கரை மற்றும் பொழுதுபோக்கு இடப்பரப்பு உள்ளடங்கலாக பொது இடமொன்றில் அல்லது அவ்விடத் தினூடாக சமுகமளித்தலை அல்லது நடமாடுவதை தடைசெய்தல் எனப் பொருள்படும்;*

*"குறித்தொதுக்கப்பட்ட நிதிசாராத தொழில்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தில் உள்ள அச்சொல்ல மைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது;*

*"சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;*

*"நிதிசார் உளவறிதற் கூறின் பணிப்பாளர்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் பெயர்குறிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறின் தலைவர் எனப் பொருள்படும்;*

*"இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப் பாளர் தலைமையதிபதி" என்பது, 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, புலமைச் சொத்துச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமை யதிபதி எனப் பொருள்படும்;*

"இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை பிணையங்கள், பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமை யதிபதி எனப் பொருள்படும்;

"தொலைத்தொடர்பு பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புச் சட்டத்தின் 22ஆ என்னும் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமை யதிபதி எனப் பொருள்படும்;

"சான்றுக் கட்டளைச்சட்டம்" என்பது, (14 ஆம் அத்தியாயமான) சான்றுக் கட்டளைச்சட்டம் எனப்பொருள்படும்;

"அவா நிறைவு" என்பது, (26 ஆம் அத்தியாயமான) இலஞ்சச் சட்டத்தில் அத்தகைய சொல்லமைப்பிற்கு குறித்தளிக் கப்பட்ட அதே கருத்தைக் கொண்டிருக்கிறது;

"வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவர்" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கருத்தினுள் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவர் எனப் பொருள் படும்;

"மனித உரிமைகள் ஆணைக்குழு" என்பது, 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு எனப்பொருள்படும்;

"வங்கித்தொழிற்சாரா நிதி நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல் களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ், அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது;

"தண்டனைச் சட்டக்கோவை" என்பது, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவை எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, தனியாள், தனியாட்களின் குழு, கழகம் ஒன்று, ஒழுங்கமைப்பு அல்லது ஆட்கள் குழு எனப் பொருள் படும்;

"பொலிசு கட்டளைச்சட்டம்" என்பது, (53 ஆம் அத்தியாயமான) பொலிசு கட்டளைச்சட்டம் எனப்பொருள்படும்;

"தடைசெய்யப்பட்ட பயங்கரவாதி ஒழுங்கமைப்பு" என்பது, 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் நியதிகளின்படி ஆக்கப்பட்ட ஒழுங்கு விதியொன்றின் கீழ் தடைசெய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பை உள்ளடக்குகிறது;

"கம்பெனிகள் பதிவாளர்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் 471 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட கம்பெனிகள் பதிவாளர் எனப் பொருள் படும்;

"இலங்கைக் குடியரசின் ஆள்புலம்" என்பது, அரசியலமைப் பின்கீழ் அச்சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக் கொண்டுள்ளது;

"ஆளில்லா வான்வழி வாகனம்" என்பது, சாதனத்தை மனிதன் ஒருவரினால் அத்தகைய சாதனத்திற்குள்ளிருந்து வானில் செலுத்துவதற்கு ஆற்றலைக் கொண்டிராததும் தொலை விலிருந்து வானில் செலுத்தப்படமுடியுமான அல்லது செலுத்தப்படமுடியாததான அல்லது கட்டுப்படுத்தப்பட முடியுமான அல்லது கட்டுப்படுத்தப்படமுடியாததான பொறிமுறையாக்கப்பட்ட தன்னியக்கமாக்கப்பட்ட பறக்கும் சாதனம் ஒன்று எனப்பொருள்படும்;

"தவறொன்றிற்குப் பலியாக்கப்பட்டவர்" என்பது-

(அ) இச்சட்டத்தின் கீழ் சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றாக; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும்போது புரியப்பட்ட வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றாக,

அமையும் செயலொன்றின் அல்லது செய்யாமையின் விளைவாக, உடல்ரீதியாகவாயினுஞ்சரி அல்லது உள, உணர்வு, பொருளாதார ரீதியாகவாயினுஞ்சரி ஏதேனும் ஊறை, தீங்கை, வலுக்குறைவை அல்லது இயலாமையை அல்லது வேறு இழப்பை உற்றுள்ள, பலியாக்கப்பட்ட சிறுவரொருவர் உட்பட ஆளொருவர் எனப் பொருள்படும் என்பதுடன், அத்தகைய ஆளிற்கு உதவுவதற்கான அல்லது தவறொன்று புரியப்படுவதனைத் தடுப்பதற்கான தலையீட்டின் விளைவொன்றாக தீங்கை உற்ற ஆளொருவரையும் தவறுக்குப் பலியாக்கப்பட்ட சிறுவரொருவரின் பெற்றோரையும் அல்லது பாதுகாவலரையும், குடும்பத்தின் எவரேனும் உறுப்பினரையும் அத்தகைய ஆளின் நெருங்கிய உறவினரையும் தங்கிவாழ்பவர்களையும் அத்துடன் அவ்வாளுக்கு பிரதானமான முக்கியத்துவம் வாய்ந்த வேறு எவரேனும் ஆளையும் உள்ளடக்குகிறது;

"சாட்சி" என்பது,-

(அ) இச்சட்டத்தின்கீழ் சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கான புரிதல் தொடர்பில் எந்த ஆளினால் தகவல் வழங்கப்பட்டுள்ளதோ அல்லது எவரேனும் சட்டவலுவுக்கிடும் அலுவலருடன் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதோ, அத்தகைய தகவல் அல்லது முறைப்பாட்டின் அடிப்படைமீது புலன்விசாரணை அல்லது விசாரணையொன்று

ஆரம்பித்திருக்கக்கூடிய, ஆரம்பித்துள்ள அல்லது ஆரம்பிக்கும் சாத்தியம் கொண்டதான தகவலை வழங்கியவரான அல்லது முறைப்பாட்டைச் செய்துள்ளவரான;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கான புரிதல் சட்ட வலுவுக்கிடும் அலுவலரொருவரினால் நடாத்தப்பட்ட புலன்விசாரணையொன்றின் போது அல்லது விசாரணையொன்றின்போது எந்தக் கருமங்கள் தொடர்பில் அத்தகைய ஆள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தக் கருமங்களைக்கொண்ட தகவலை வழங்கியுள்ளவரான அல்லது கூற்றொன்றைச் செய்துள்ளவரான;

(இ) இச்சட்டத்தின்கீழ் தவறொன்றிற்குப் பலியாக்கப்பட்டவரொருவரால் செய்யப்பட்ட முறைப்பாடொன்றிற்கு அல்லது தொடுக்கப்பட்ட ஏதேனும் சட்ட நடவடிக்கைக்கு ஆதரவாகச் சத்தியக் கடதாசியொன்றை வழங்கியுள்ளவரான அல்லது கூற்றொன்றைச் சமர்ப்பித்துள்ளவரான;

(ஈ) ஆணைக்குழுவொன்றிற்கு தகவல் அல்லது ஏதேனும் தொடர்பாடலை வழங்கியுள்ளவரான;

(உ) ஆளொருவருக்கு எதிரான ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் அத்தகைய ஆளினால் சட்டவலுவுக்கிடும் அலுவலருக்கு அல்லது ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட கூற்றொன்றின் அல்லது வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையின்மீது தாம் கூற்றொன்றைச் செய்யுமாறு அல்லது சாட்சியமளிக்குமாறு நீதிமன்றத்தினால் அல்லது ஆணைக்குழுவினால் அழைப்பாணை விட்டழைக்கப்பட வேண்டுமென நம்புவதற்குப் போதிய நியாயத்தைக் கொண்டுள்ளவரான;

(ஊ) ஏதேனும் நீதிமுறை அல்லது நீதிமருவிய வழக்கு நடவடிக்கையில் நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் கூற்றொன்றை செய்வதற்கு, சாட்சியமளிப்பதற்கு அல்லது ஏதேனும் ஆவணத்தை, அறிக்கையை அல்லது விடயப் பொருளைச் சமர்ப்பிப்பதற்கு என அத்தகைய நீதிமன்றத்திலிருந்து அல்லது ஆணைக்குழுவிலிருந்து அழைப்பாணை விட்டழைக்கப்பட்டுள்ளவருமான; அல்லது

(எ) இச்சட்டத்தின்கீழ் சார்த்தப்பட்ட குற்றமொன்றிற்கான புரிதல் பற்றி விசாரணை செய்துள்ள பகிரங்க அலுவலரொருவராகவுள்ள,

எவரேனும் ஆள் எனப்பொருள்படும் என்பதுடன், தவறொன்றினால் பாதிக்கப்பட்டுள்ளவரையும், சிறுவர் சாட்சியையும், சிறுவர் சாட்சியின் பெற்றோரையும் அல்லது பாதுகாவலரையும், அத்தகைய சாட்சியின் குடும்ப உறுப்பினரொருவரையும் அல்லது தங்கி வாழ்வோரையும் அல்லது அத்தகைய ஆளுக்கு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம்வாய்ந்த வேறு எவரேனும் ஆளையும், நிபுணத்துவமுடைய சாட்சியொருவரையும் மற்றும் இச்சட்டத்தின்கீழ் சார்த்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புரிந்தமைக்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ் சாட்டப்பட்ட ஆளொருவர் சார்பில் நீதிமன்றமொன்றின் அல்லது ஆணைக்குழுவொன்றின் முன்னர் சாட்சியமளிப்பதற்கென அழைப்பாணை விட்டழைக்கப்பட்டுள்ளவருமான ஆளொருவரையும் உள்ளடக்கும்.

(2) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டதும் தண்டனைச் சட்டக்கோவையில் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையில் வரைவிலக்கணம் கூறப்பட்டதும் ஆனால் இச்சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்படாததுமான ஏதேனும் சொல்

அல்லது சொல்லமைப்பு, முறையே தண்டனைச் சட்டக்கோவையினால் அல்லது குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையினால் அத்தகைய சொல் அல்லது சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே கருத்தைக்கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**106.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**முதலாம் அட்டவணை** [பிரிவு 26(1)]

**கைது மற்றும் காவலுக்கான அறிவிப்பு**

1. கைது செய்யப்பட்ட ஆளின் பெயர்:-
2. கைது செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம்:-
3. கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள்:-
4. கைது செய்யப்பட்ட ஆளின் உத்தேசிக்கப்பட்ட கட்டுக்காப்பு அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம்:-
5. கைது செய்யும் அதிகாரியின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் மற்றும் பதவி வரிசை:-
6. கைது செய்யப்பட்ட ஆளின் உறவினருக்கு அவரை அணுகக்கூடிய வகையில் உதவக்கூடிய வேறு ஏதேனும் தகவல்:-
7. அறிவிப்பு வழங்கப்படவேண்டிய ஆளின் ஆளடையாளம்:-
8. அறிவிப்பு வழங்கப்பட்ட இடம் மற்றும் திகதி:-
9. அறிவிப்பு வழங்கும் அலுவலரின் பெயர், பதவி மற்றும் கையொப்பம்:-

**இரண்டாம் அட்டவணை** [பிரிவு 26(4)]

**மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கான கைது தொடர்பான அறிவித்தல்**

1. கைது செய்யப்பட்ட ஆளின் பெயர்:-
2. கைது செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம்:-

3. கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள்:-

4. சந்தேகநபர் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம்:-

5. கைது செய்யும் அலுவலரின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் மற்றும் பதவி வரிசை:-

6. தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் பொறுப்பு அலுவலரின் பெயர், பதவி மற்றும் அலுவலரின் தொடர்பு விபரங்கள்:-

7. மனித உரிமைகள் ஆணைக்குழு தடுத்துவைக்கப்பட்டுள்ளவரை அணுகுவதற்கு இயலச்செய்யக்கூடியவாறான வேறு ஏதேனும் தகவல்:-

**மூன்றாம் அட்டவணை** [பிரிவு 26(4)]

**பொலிஸ் பரிசோதகர் தலைமையதிபதிக்கு கைது பற்றிய அறிவித்தல்**

1. கைது செய்யப்பட்ட ஆளின் பெயர்:-

2. கைது செய்யப்பட்ட திகதி, நேரம் மற்றும் இடம்:-

3. கைது செய்யப்பட்டதற்கான காரணங்கள்:-

4. சந்தேகநபர் எங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளாரோ அவ்விடத்தின் அமைவிடம்:-

5. கைது செய்யும் அலுவலரின் பெயர் மற்றும் அடையாள இலக்கம் மற்றும் பதவி வரிசை:-

6. தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் பொறுப்பு அலுவலரின் பெயர், பதவி மற்றும் அலுவலரின் தொடர்பு விபரங்கள்:-

**நான்காம் அட்டவணை** [பிரிவு 33(1)]

**தடுத்துவைத்தல் கட்டளை**

1. தடுத்துவைத்தல் கட்டளையின் இலக்கம்:-

2. தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கும் அதிகாரியின் பெயர் மற்றும் பதவி:-

3. தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கும் இடம் மற்றும் திகதி:-

4. தடுத்துவைத்தல் கட்டளையை வழங்கக்கோரிய அலுவலரின் ஆளடையாளம் மற்றும் கோரிக்கை செய்த திகதி மற்றும் தேவையான இடங்களில் அதன் குறிப்பீட்டு இலக்கம்:-

5. எவ்வாளுக்கு (சந்தேகநபர்) தடுத்துவைத்தல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வாளின் பெயர் (சந்தேகநபர்):-

6. அதிகாரமளிக்கப்பட்ட தடுப்பு இடம்:-

7. தடுத்துவைத்தல் காலப்பகுதி:-

8. எந்நோக்கத்துக்காக சந்தேகநபரின் தடுத்துவைப்பு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அந்த நோக்கம்:-

9. தடுத்துவைத்தலின் நிபந்தனைகள்:-